வேர் என நானிருப்பேன்

ரமணிசந்திரன்

வேரென நானிருப்பேன்

ரமணிசந்திரன்

அத்தியாயம் -1

கவனத்துடன் மெதுவாகத் திறக்கப்பட்டபோதும், வெளிக் கதவு திறக்கும் ஓசையில் சோர்ந்து கிடந்த கலாவதி கண்களைத் திறவாமலே, “அக்கா வந்துவிட்டாளா, ப்ரீதிச் செல்லம்? அப்பாவுடன் பேசினாளா, கேள்.” என்று எழும்பாத குரலில் சின்ன மகளிடம் கேட்டாள்.

“ஏம்மா இந்த அசட்டு ஆசை? நான் இத்தனை தரம் முயற்சி செய்துவிட்டேன். செல்ஃபோனை எடுத்து என்னிடம் பேசாத அப்பா, அக்காவிடம் மட்டும் பேசி விடுவாரா? மும்பைக்குப் போய்விட்டால்தான், இங்கே நாம் இருப்பதே அவருக்கு மறந்து விடுமே! வேலை வேலை என்று அதே நினைவாக இருப்பார், யாரோடும் பேசவே மாட்டார் என்று பலமுறை நீங்களே சொல்லிவிட்டு, இப்போது கூப்பிடு கூப்பிடு என்றால், இப்போது மட்டும் செல்லை எடுத்துப் பேசுவாராக்கும்? திரும்பத் திரும்பக் கேட்டு அறுக்கிறீர்களே! அப்பாடி, இதோ, உங்கள் ரதிச் செல்லமே இங்கு வந்துவிட்டாள்., அவளிடமே, நீங்களே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்! என்னை ஆளை விடுங்கள்!” என்றுவிட்டுத் தட் தட்டென்ற காலடிகளுடன் ப்ரீதி அங்கிருந்து அகன்றாள்.

படீரென்று பலமான சத்தத்துடன் கதவு அறைந்து சாத்தப்பட்ட ஓசை, படுக்கையில் கிடந்த தாயார், அப்போதுதான் அந்த அறையினுள் உள்ளே வந்த மூத்த பெண் செளரதி இருவரையுமே அதிரச் செய்தது.

“என்னம்மா, சடபுடாக் குச்சி என்ன வெடித்துவிட்டுப் போகிறது?” என்று இலகுக் குரலில் வினவியவாறே உள்ளே வந்து, அன்னையின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள் பெரிய பெண்.

தொட்ட கையை இறுகப் பற்றி, “அப்பா . .அப்பாவோடு பேசினாயாம்மா? வருவதாகச் சொன்னாரா?” கவலையும் பரபரப்புமாகக் கேட்டாள், பெற்றவள்.

செல்ஃபோனை எடுத்துப் பேசினால் அல்லவா, வருவதும், வராததும்!

ஆனால், அதை அப்படியே சொல்ல முடியாமல், “உங்களுக்குத் தெரியாதாம்மா? ப்ரீதி சொன்னது போல, மும்பைக்குப் போய்விட்டால், அப்பா தொழில் பைத்தியம் ஆகிவிடுவார்தானே? சரி, அதை அப்புறம் பேசுவோம். உங்கள் மாத்திரை மருந்துகளை ஒழுங்காக எடுத்துக் கொண்டீர்களா? டெம்பரேச்சர் பார்த்தீர்களா? இப்போதும் சூடு இவ்வளவு இருக்கிறதே! எப்போது பார்த்தீர்கள்?” என்று கவலையைக்

காட்டாமல் இயல்பான குரலில் சௌரதி விசாரித்தாள்.

“ச், அதை விடு.” என்று பொறுமையிழந்து கூறிவிட்டு, “எனக்கு உடம்பு ரொம் . . வந்து . . . உடம்பு சரியில்லை என்று இப்போது அப்பாவுக்கு எப்படித் தகவல் தெரிவிப்பது? அதைச் சொல்லும்மா. . .” என்று லேசாகப் பதறிய குரலில் கேட்டான் அன்னை.

“அப்பா செல்ஃபோனுக்கு மெஸேஜ் அனுப்பியிருக்கிறேன், அம்மா. எப்போதாவது நேரம் கிடைக்கும்போது, அதைக் கட்டாயமாகப் பார்ப்பார். இப்போது மரியாதையாக எனக்குப் சொல்லுங்கள், உங்களுக்கு உடம்பு எப்படி இருக்கிறது? “ என்று சற்று மிரட்டுவது போலக் கேட்டாள் பெண்.

அவள் விரும்பியது போலவே, முகத்தில் லேசாகப் புன்னகை அரும்ப, “என்னடி, என்னமோ உதைக்கப் போகிற மாதிரி ஒரு மாதிரிக் கேட்கிறாய்? தோளுக்கு மேல் வளர்ந்து . .தோள் என்ன, என் தலைக்கு மேலேயே வளர்ந்துவிட்டாயே! பயந்துதான் நடக்க வேண்டும் போல!” என்றாள் தாயார்.

“ஆமாம், ஆமாம். என்னிடம் நீங்கள் ரொம்பத்தான் பயப்படுகிறீர்களாக்கும்? மூன்று வேளை மருந்தில், ஒரு தடவைக்கு உள்ளதுதான் குறைந்திருக்கிறது. டாக்டர் கொடுத்த மருந்தை, இப்படி அரை குறையாக உட்கொள்ளுவதால் என்ன பிரயோசனம்? உங்களுக்கு ஓங்கி ஒன்று போட்டால் கூடத் தப்பில்லை!” என்று கேலி போலக் குறைப்பட்டாள் பெண்.

“என்னம்மா செய்வது? மனது சரியில்லாவிட்டால், மருந்தெல்லாம் சாப்பிடவே பிடிக்க மாட்டேன் என்கிறது.” என்றாள் கலாவதி அலுப்புடன்.

“ஆமாம்மா, ஊர் உலகத்தில் கேட்டுப் பாருங்கள். எல்லோரும் உல்லாசமாகத் துள்ளிக் குதித்துத் திரிகிறபோதுதான் மிகவும் ஆசைப்பட்டு சாக்கலேட் மாதிரி மாத்திரை மருந்துகளை ரசித்து முழுங்குகிறார்களாம். நீங்கள் மட்டும் ஏனம்மா விதி விலக்காக இப் . .ப்படி இருக்கிறீர்கள்?” என்று கண்களை அகல விழித்து, கைகளை விரித்துக் காட்டிக் கேட்டாள் மகள்.

கலாவதிக்குச் சிரிப்பு வந்துவிட்டது. சிரித்துவிட்டு, “சரிம்மா. மாத்திரை போடாதது தப்புதான். ஏதோ கவலையில் மறந்துவிட்டேன். இப்போது கொடேன். ஒரு டோஸ் போட்டுக் கொள்கிறேன். இரவில் கொஞ்சம் தாமதமாக அடுத்த டோசையும் போட்டு முடித்து விடுவேன்” என்று கணக்கு சொல்லி சமாளித்தாள்.

ஆனால் ஏதோ விதமாகப் பெற்றவளுக்குப் போக்குக் காட்டித் தேற்றியபோதும், மகளின் மனதில் கவலை நிறைந்திருந்தது.

இந்த அப்பா ஏன் இப்படி இருக்கிறார்?

ஆடிக்கு ஒரு தரம் அமாவாசைக்கு ஒரு தரம் வருகிறார் என்று வெகு அதிசயமாக வருகை தருகிறவர்களைப் பற்றிச் சொல்வதுண்டு. அவளுடைய தகப்பனாரும், அந்த இனம்தான்.

அதாவது, அவர் சென்னைக்கு வருவதும், வந்து தங்குவதும் மிகவும் குறைவு. இரு பெண்களுக்கும் எல்லாமே அவர்களுடைய அன்னைதான். பள்ளிக்குக் கூட்டிப்போய் விடுவதில் இருந்து, வீட்டுப் பொறுப்பு, மக்கள் பொறுப்பு எல்லாம் கலாவதியினதுதான்.

பணம் மட்டும் வங்கிக் கணக்குக்கு வந்துவிடும். அத்தோடு அவரது பொறுப்பு சரி.

ஏனெனில், சென்னைக்கு ஒரு தரம் வந்துவிட்டுத் திரும்பிப் போனால், இங்கே ஒரு குடும்பம் இருப்பதே குருமூர்த்திக்கு எப்போது நினைவு வரும் என்றே சொல்ல முடியாது. மக்களோ மனைவியோ பேசி நினைவுபடுத்தலாம் என்றாலோ, இங்கிருந்து யாரும் அவரைக் கூப்பிட்டுப் பேசி அவரது வேலையைக் கெடுக்கக் கூடாது என்பது , அந்த வீட்டில் மிகவும் கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்படும் சட்டம்.

அதை யாரும் மீற வழியின்றி, குருமூர்த்தியின் செல்ஃபோன் கூட, எப்போதும் “ஸ்விட்ச் ஆஃப்” ஆகவே இருக்கும்.

தொழில் நிமித்தம் மும்பையில் வாழ்கிறவர், அவர். சென்னைக்கு வருவதும் ஒழுங்கான இடைவெளிகளில் இருக்காது. ஆனால் அவர் வரும்போது, பொழுது சந்தோஷமாகக் கழியும்.

பெரிதாகப் பட்டும் நகையுமாகப் பரிசளிக்காவிட்டாலும், சினிமாவுக்கு, ஹோட்டலுக்குக் கூட்டிப் போவார். வீட்டிலும், அவருக்குப் பிடிக்கும் என்று, கலாவதி விதம் விதமாகச் சமைப்பாள். சந்தோஷமாகச் சாப்பிடுவார்கள்.

வெளி நாட்டுக்குப் போய்ப் பொருள் ஈட்டுகிறவர்கள் வரும்போது குதூகலமாக இருப்பதில்லையா? அது போலத்தான். சின்ன வயது முதல் இப்படியே பழக்கமாகிவிட இதில், வேறுபாடாக யாருக்கும் எதுவும் தோன்றியது இல்லை.

ஆனால், இப்போது கொஞ்ச காலமாக , அதுவும் மறுவாழ்வு மையத்தில் வேலை செய்யத் தொடங்கிய பிறகு, சௌரதிக்கு மனம் முரண்டத் தொடங்கியது.

என்னதான் வேலை என்றாலும், ஓய்வு நேரம் என்று இருக்கத்தானே செய்யும்? அந்த நேரத்தில் மன இறுக்கம் தளரக் குடும்பத்தைத் தேடுவதுதானே இயல்பு? அப்படி ஒரு வடிகால் இல்லாது போனால், தந்தையின் உடல்நிலை என்ன ஆகும்?

ஒரு ஃபோன் பேசக் கூட நேரமின்றி உழைக்கிறவருக்கு, அரிதாகக் கிடைக்கிற ஓய்வு நேரத்தில்கூடக் குடும்பத்தை நினைக்க முடியவில்லை என்றால், அதன் காரணம் வேறு என்னவாக இருக்கக் கூடும்?

இப்படி யோசிக்கத் தொடங்கியதுதான். ஒரு நாள் தானாக "இன்னொரு குடும்பமோ" என்று ஒரு பதில் மனதில் தோன்றவும், அவளது உடல் விலுக்கென்று விறைத்துவிட்டது.

தானாகத் தோன்றிய அந்த எண்ணத்திலேயே, சௌரதி அதிர்ந்து போனாள்.

சேச்சே! என்ன மடத்தனம்? வீட்டுக்காக ஓய்வின்றி உழைக்கிற தந்தையைப் பற்றி, இப்படி நினைப்பதே பாவம்! அநியாயம்! தவறு . .தப்பு., பிழை! பெரும் குற்றமே ஆகும்.

இவை போல ஏதேதோ கூறித் தன்னைத்தானே கண்டித்து சமாளித்தபோதும், சௌரதியின் மனதில் இருந்து, அந்த எண்ணம் மறைய மறுத்தது.

மனைவியிடம் குருமூர்த்திக்கு அன்பு, ஆசை அதிகம். அங்கே மும்பையில் அவரைத் தனிமை வாட்டியிருக்குமோ?

மறுவாழ்வு மையத்தில் எத்தனை விதமான கதைகளை அவள் கேட்டிருக்கிறாள்.

உண்மைக் கதைகளே! சிலது வெகு விசித்திரமாக இருக்கும்.

தாயோ மனைவியோ எதற்காகவேனும் வருந்துவது தாங்க முடியாமல் போதை மருந்தை எடுக்கத் தொடங்கிவிட்டு, பிறகு அந்த மருந்தை விட முடியாமல், அவர்களையே துன்புறுத்திப் போதை மருந்துகளுக்காகப் பணம் பிடுங்குவார்கள். எதற்காக இந்தப் போதையில் மூழ்கத் தொடங்கினோம் என்கிற அடிப்படை விஷயமே, அப்போது அவர்களுக்கு மறந்து போயிருக்கும்.

அது போல, அம்மாவைப் பிரிந்து வாழும் வேதனை பொறுக்காமல், அப்பா மும்பையில் இன்னொருத்தியோடு பழகி விட்டிருப்பாரோ? அவளுக்கும் குழந்தை குட்டி என்று ஏற்பட்டு, அதனால்தான் அங்கே போனதும், மனைவி மக்களோடு தொடர்பே இல்லாமல் இருக்கிறாரோ?

தொடர்பு இருந்தால், எப்போதேனும், ஏதேனும் ஒரு வழியில் அம்மாவுக்கு அந்தச் சின்ன வீட்டு விவரம் தெரிந்து போகக் கூடும்., தெரிந்தால் மனைவி வருந்துவாளே என்றுதான் இந்த அளவு எச்சரிக்கையோடு இருக்கிறாரோ என்று சௌரதிக்கு அடிக்கடி தோன்றியது.

வேலையில் இடையூறு கூடாது என்று தொடங்கியது, இப்போது சின்ன வீடு வைப்பதற்கும் வசதியாகி விட்டிருக்குமோ?

இருக்காது என்ற உறுதி கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து, அப்படித்தான் இருக்கும் என்ற கருத்தே மேலோங்கியது. அதற்கு ஆதாரமாகச் சொல்லப் பல காரணங்கள் இருந்தன.

முக்கியமாக இந்த ஒளிவு மறைவு.

எப்போதுமே, அப்பா அங்கே இருக்கிறார் என்பதாலோ, அது சரித்திரத்தோடு இணைந்த பெரிய நகரம் என்றோ, அந்த ஊர் பற்றி இரு மக்களுக்குமே ஒரு வித மயக்கம் உண்டு.

ஆனால், மும்பையைப் பார்க்க வேண்டும் என்று கேட்டால், தந்தையிடம் இருந்து சரியான பதில் வராது. “அந்த ஊர் உங்களுக்குச் சரி வராதும்மா.” என்று கூறி நழுவி விடுவார்.

கூட ஒரு தரம் கேட்டால், கணவரோடு சேர்ந்துகொண்டு, கலாவதி மக்களை அதட்டிப் பணிய வைப்பாள்.

பதிவிரதாசிரோமணி! தாசி வீட்டுக்குக் கணவனைச் சுமந்து சென்ற நளாயினி அவதாரம்!

“அப்பாவுக்குப் பிடிக்கவில்லை என்ற பிறகு, அது என்ன பிடிவாதம்?” என்று ப்ரீதிக்கு அடி கூட விழுந்திருக்கிறது.

ரதியைப் பொறுத்த அளவில், தங்கை போல அவள் பிடிவாதம் பிடிப்பதில்லை. ஆனால், ஒரு ஹோட்டல் விருந்தில் எதையும் முழுதாக மறப்பதுமில்லை.

ஏற்கனவே சிறு சந்தேகம் ஒன்று மனதில் புகைந்துகொண்டு இருந்தபோதும், சௌரதிக்குத் தந்தையின் மேல் இருந்த நம்பிக்கை ரொம்பவும் குறைந்து போனது, அம்மாவுக்கு அடிக்கடி உடம்பு சரியில்லாமல் போன இந்த ஓர் ஆண்டில்தான்.

ஏற்கனவே கலாவதி சற்று மெலிவுதான். தெருவோடு போகிறவர்களுக்கு ஏதேனும் சுகவீனம் என்றாலே, மறுநாளே அவளுக்கும், அது வந்துவிடும். பரிசோதித்துப் பார்த்துவிட்டு, நோய்த்

தடுப்புச் சக்தி அவளுக்கு மிகவும் குறைவு என்று, மருத்துவர்கள் கண்டு பிடித்தார்கள்.

அதைச் சீர்ப்படுத்த என்று மருத்துவர்கள் கொடுத்த மாத்திரை மருந்துகளையுமே, நோய்க் கிருமிகளாக எண்ணி, அவளது உடல் கூறு அவைகளை ஒதுக்கித் தள்ளியது.

ஒரு நல்ல கணவன், இது போன்ற தருணத்தில் எப்படி இருக்க வேண்டும்? அக்கறையோடு அவளைக் கவனிக்க வேண்டும். இவளுக்கு இன்னின்ன மாதிரி உடல் உபாதைகள் இருக்குமே என்று ஊகித்து உணர்ந்து, அந்த வேதனைகளைப் போக்கும் வழியைத் தேட வேண்டும். ஒருவரின் வலியை இன்னொருவர் வாங்கிக் கொள்ள முடியாதுதான். என்றாலும், அன்புடன் அருகிருந்து ஆறுதல் சொன்னாலே பாதி வலி குறைந்துவிடாதா? கூடவே நன்றாகிவிடும் என்ற நம்பிக்கையை ஊட்டினால், நோயே குணமாகி விடும்.

ஆசையில் இருந்து அன்பும் அக்கறையுமாக வளரும் நேசத்தின் தன்மை, இது.

ஆனால், அம்மாவின் உடல்நிலை நன்றாக இருக்கிறதா என்று விசாரித்து, சுகம் என்று தெரிந்தால்தான் குருமூர்த்தி சென்னைக்கு வருவதே.

மணமாகி இருபத்துநாலு ஆண்டுகள் ஆன பிறகும் முதல் படியிலேயே நிற்பது என்றால் . . ?

காரணம், மும்பையில் அருகிலேயே இருக்கும் சின்ன வீடாகத்தானே இருக்க வேண்டும்?

இந்த யோசனைகளை, சௌரதி தனக்குள்ளேயேதான் வைத்துக் கொண்டாள். காரணம், தாயிடம் சொன்னால் அடிக்க வருவாள். அந்த அளவுக்குக் கணவரிடம் நம்பிக்கை! அப்பாவிடமே தப்பு தேடுகிற அளவு பெரிய ஆளாகிவிட்டாயா என்று, மகளைத்தான் திட்டக் கூடும்.

தங்கையோ. . . . அவளை இப்படித்தான் என்று நம்பி எதையும் சொல்லிவிட முடியாது.

“ஐயோ அக்கா, நம் கதி இப்படி ஆகிவிட்டதே என்று கதறி அழுது கூப்பாடு போடக் கூடும். அல்லது, “அக்கா இப்படியெல்லாம் பேசிக் கொண்டு திரிகிறாள்., அவளைக் கண்டித்து வையுங்கம்மா.” என்று பெற்றவளிடமே போய் வத்தி வைக்கவும் கூடும்!

இரண்டுமே, கலாவதியின் உடல்நிலையை மேலும் பாதிக்கக் கூடும். மற்ற விளைவுகள் எதையும் விட, இதற்காகவே சௌரதி அதிகம்

அஞ்சினாள் எனலாம்.

சும்மாவே தாயின் உடல்நிலை சரி கிடையாது. அத்தோடு, இந்தச் செய்தி வேறு, அவளுள் பல மாற்றங்களை ஏற்படுத்தலாம். அது, கெட்ட மாற்றமாக இருந்துவிட்டால்? இது போன்ற செய்தியின் விளைவு கெடுதலாகத்தானே இருக்க முடியும்?

இப்படியெல்லாம் எண்ணியே, தந்தை பற்றிய சந்தேகங்களை சௌரதி தனக்குள்ளேயே வைத்துக் கொண்டு குமைந்தாள்.

இந்தக் குமைச்சல் உள்ளேயே இருந்து குமுறி, வெடிக்கும் எரிமலையின் நிலைக்கு சௌரதி வந்து சேர்ந்தாள்.

அதுவும், அப்பாவைப் பார்க்க வேண்டும். அவரைக் கூப்பிடு என்று கலாவதி புலம்பத் தொடங்க, வழக்கமாக அவளுக்கு மருத்துவம் பார்க்கும் வைத்தியரும், "எதற்கும் உன் அப்பாவை வரச் சொல்லேன், சௌரதி. அவரைக் கண்ணால் பார்த்துவிட்டால், உன் தாயார் அமைதி அடையக் கூடும். சிகிச்சையும் கொஞ்சம் பலன் தரக் கூடும். மற்றபடி, இப்போது செய்வதெல்லாம், பாரதியார் பாட்டில் வருகிற மாதிரி, "விழலுக்கு நீர் பாய்ச்சு"கிற மாதிரியான வீண் வேலைதான். நீர் பாய்ச்சிப் பாய்ச்சி ஓயலாமே தவிரப் பயனிராது. என் வைத்தியம் பலிக்க வேண்டுமானால், எப்படியாவது, அவரை வரவழைக்கப் பார்! அவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும்!" என்று மிரட்டல் ஒன்று போட, சொரதி நடுங்கிப் போனாள்.

இப்போது என்ன செய்வது?

பைத்தியம் தெளிந்தால் கல்யாணம்., கல்யாணம் ஆனால்தான் பைத்தியம் தெளியும்" என்கிற மாதிரியல்லவா இருக்கிறது!

அப்பா வந்தால்தான் அம்மா உடல்நிலை தேறும். ஆனால், அம்மா ஆரோக்கியமாக இருந்தால்தான் அப்பா வருவார்! பாத பூஜை செய்ய ஆள் வேண்டுமே!

மனதில் கசப்பு பெருகுவதை சௌரதியால் உணர முடிந்தது. ஆனால், பெற்ற தாய் நோயால் வாதனைப் படுவதை, அதற்காக எதுவும் செய்ய முடியாமல் கையைக் கட்டிக்கொண்டு பார்த்துக் கொண்டிருக்க நேரும்போது, வேறு என்ன தோன்றும்?

ஆனால், இந்தக் கசப்பினாலோ வெறுப்பினாலோ எந்த பயனும் கிடையாது. பின்னே, இதற்கு என்ன தீர்வு?

"பொய்மையும் வாய்மையிடத்த . . " என்று தொடங்கும் ஒரு குறள் இருக்கிறது.

தந்தை ஃபோன் பண்ணி அம்மா பற்றி விசாரிக்கும்போது, அம்மா சுகம் என்று பொய் சொல்லிவிட்டால்?

உண்மை அறியும்போது அவர் கோபப்படுவார்தான். ஆனால், அவரது முகத்தைப் பார்த்தலே, அன்னைக்கு உடம்பு குணப்படத் தொடங்கிவிடாதா? மனைவியின் உடல்நிலையைப் பார்க்கும்போது, அவருக்கும் மனம் இரங்கலாம்.

அப்படித் தந்தை வரும்போது அவரது காலில் விழுந்தாவது, வருங்காலத்துத் தொடர்புக்கும், வேறு ஏதாவது வழி தேடிக் கொள்ளலாம்.

என்னென்னமோ யோசனைகளோடு சௌரதி காத்திருந்தால், குருமூர்த்திக்குச் சென்னையே மறந்துவிட்டதோ என்று என்று அவள் அஞ்சும் அளவுக்கு அவரிடமிருந்து தகவலே இல்லாது போயிற்று.

அல்லது, அவருக்கே ஏதாவது சுகவீனமா?

இந்தக் கலக்கத்தையும், ரதி தனியேதான் சுமக்க வேண்டியிருந்தது. ப்ரீதியும் அவளும் அடுத்தடுத்துப் பிறந்திருந்தாலாவது, தங்கைக்கும் ஓரளவு முதிர்ச்சியேனும் இருந்திருக்கும். ஆனால், இந்த ஆறு ஆண்டு வேறுபாட்டில், அன்னையின் செல்லமும் சேர்ந்துகொள்ள, சின்னவள் குழந்தையாகவே இருந்து போனாள்.

மருத்துவர் வேறு, வெகு விரைவில் குருமூர்த்தி வரவில்லை என்றால், கலாவதியின் உயிருக்கே ஆபத்து என்று கெடு வைக்கவும், சௌரதி அதிரடியாக ஒரு முடிவெடுத்தாள்.

செல்லில் தொடர்பு கொள்ள முயலும்போதுதானே, என்னவென்று கேளாமலே, “ஸ்விட்ச் ஆஃப்” செய்து தவிர்க்க முடிந்தது? நேரிலேயே போய்விட்டால்?

அங்கே அவர் என்ன பணி புரிகிறார் என்கிற விவரம் தெரியாது என்றாலும், குருமூர்த்தி சார்ந்திருந்த நிறுவனத்தின் பெயர் அவளுக்குத் தெரியும். அங்கே போய்ப் பேர் சொல்லிக் கேட்டால் சொல்லிவிட்டுப் போகிறார்கள்.

அவரை நேரில் பார்த்துவிட்டால், தாயின் நிலை பற்றி அவரது மனம் உருகும் வண்ணம் எடுத்துரைத்து அவரைக் கூட்டி வரும் வாக்கு வன்மை அவளுக்கு நிச்சயம் உண்டு. அந்த நம்பிக்கை சௌரதிக்கு இருந்தது.

எனவே, ஒரு முக்கியமான பணி நிமித்தமாக மும்பை செல்ல நேர்வதால் மருத்துவமனையில் தாயுடன் கூட இருக்குமாறு

தங்கையிடம் கூறிவிட்டு, அவளுக்கு மறுத்துப் பேச இடம் கொடாமலே, மூத்தவள் கிளம்பிவிட்டாள்.

ஊர் பெயர் சொல்ல அவளுக்கு விருப்பம் இல்லைதான். ஆனால், அவளிடமும் சொல்லாமல் செல்ல தமக்கைக்கு மனமில்லை. .

ப்ரீதியின் சீற்றத்தை அவளால் உணர முடிந்தது. ஆனால் அப்பாவோடு திரும்பி வரும்போது அவள் சமாதானமாகிவிடுவாள் என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தது.

மும்பையில் குருமூர்த்தியின் பணியிடத்தைக் கண்டுபிடிப்பது ஒன்றும் அவளுக்குச் சிரமமாக இருக்கவில்லை.

அங்கே, மராட்டிய மொழியில் விவரம் கேட்ட கேட் காவலனிடம், சௌரதி தந்தையின் படத்தை எடுத்துக் காட்டினாள். அவரைப் பார்க்க வந்ததாக, சைகை செய்தாள்.

அந்தப் பெரிய தொழிலகத்தில் அவர் இல்லை என்று தெரிவித்தான் அந்தப் பணியாள். “விசேஷத்துக்கு வந்தாயா?” என்று சைகையும் சொல்லுமாக வினவிவிட்டு, விசேஷம் நடக்கும் மண்டபத்தின் முகவரியை எழுதிக் கொடுத்தான்.

அவளுக்கும் அதுதானே தேவை? அவரைச் சற்று நேரத்தில் சந்திக்கப் போகிறோம்., அவருடைய அன்பு மனைவியின் உடல்நிலையோடு மனநிலையைப் பற்றியும் உரியவாறு எடுத்துரைத்து, மனதை உருகச் செய்து அவரைச் சென்னைக்கு அழைத்துச் செல்லப் போகிறோம் என்று மிகுந்த ஆவலும் பரபரப்புமாக, அந்த மண்டபத்தை அடைந்தாள் அவள்.

டாக்சியில் இருந்து இறங்கிப் பணத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்பி மண்டபத்தைப் பார்த்தவளுக்கு, உள்ளே செல்லக் கால்கள் தயங்கின.

பளபளவென்று மண்டபத்தின் முகப்பு அலங்காரமே அப்படி இருந்தது. நிஜ ஆப்பிள்களுடன் இரண்டு மரங்களையே நுழை வாயிலில் நிறுத்தியிருந்தார்கள்.

ஜிலுஜிலுவென்று வைர நகைகளும் ஜரி வேலைப்பாடு செய்த உடைகளுமாக அங்குமிங்கும் எழிலாக உலா வந்த பெண்களைப் பார்த்ததும், குனிந்து தன் உடையைப் பார்த்துக் கொண்ட சௌரதிக்குத் தயக்கம் இன்னமும் அதிகம் ஆயிற்று.

சாதாரணமாக ஓர் இடத்துக்குச் சென்று வர, அது நல்ல உடைதான். அப்பாவுக்கும் பிடித்த உடை என்று அணிந்திருந்தாள்.

என்றாலும் ஒரு விழாவில், அதுவும் இப்படிப் பணக்காரக் களை பளபளக்கும் இடத்துக்கு அது ஏற்றதில்லை.

ஆனால், அதற்காக இப்போது என்ன செய்ய முடியும்?

அவள் இங்கு வந்தது, அவளுடைய தந்தையைச் சந்தித்து அழைத்துப் போவதற்காக. அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதுதான் முக்கியம். யார் என்ன எண்ணிக் கொண்டாலும், அதைப் பொருட்படுத்தக் கூடாது.

நிமிர்ந்த தலையும் நேர்ப் பார்வையுமாக மண்டபத்தின் உள்ளே சௌரதி சென்றபோது, "ஹோ!" என்ற கூச்சலுடன் அருகே சிலர் கைதட்டவும் தன்னிச்சையாக அவளது விழிகள் அந்தப் பக்கம் திரும்பின.

உள்ளே நடந்த சடங்குகளை எல்லா இடங்களில் இருப்பவர்களும் காண்பதற்காக, அங்கங்கே வைக்கப் பட்டிருந்த டீவி ஒன்றின் முன்னே நின்றவர்கள்தான் கூச்சலிட்டது.

சற்று உயரத்தில் இருந்த டீவியில் தெரிந்த காட்சி அவளது கண்களிலும் பட, அதிர்ச்சியில் சௌரதி அப்படியே உறைந்தாள்!

அத்தியாயம் -2

சற்று நேரம் அங்கே என்ன நடந்தது என்றே சௌரதிக்கு உணர்வில்லை.

ஆனால், அந்த உணர்வற்ற நிலையிலும், அங்கிருந்து உடனே ஓடிவிட வேண்டும் என்ற எண்ணம் மட்டும் அவளது மூளையில் உதித்து அவளை உந்தித் தள்ளியது. அதற்குப் பணிந்து, முன்னே இரண்டெட்டு எடுத்து வைத்த பிறகே, இது மண்டபத்தின் உள்ளே விழா நடக்கும் இடத்துக்குச் செல்லும் வழி என்பது அவளது மரத்த மனதுக்கு உறைத்தது.

இப்போது அவள் வெளியே அல்லவா செல்ல வேண்டும்? எப்படிப் போவது?

சிரமப்பட்டு யோசித்து, நுழை வாயில் புறமாகத் திரும்பி, இரும்புக் குண்டேனக் கனத்த கால்களை இயன்றவரை வேகமாக எடுத்து வைத்துச் செல்ல முயன்றால், இவளது மனோ வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் நடை தள்ளாடியது.

உள்ளே வந்து ஆட்களை இறக்கி விட்டுவிட்டுப் பார்க்கிங் பகுதிக்குச் சென்ற கார்கள் வேறு அவளை இன்னமும் தடுமாறச் செய்தன.

எவ்வளவோ முயன்றும், வசப்படாத கால்களால், அவள் உள்ளே வந்த ஒரு காரின் முன்னே விழுந்திருப்பாள். நல்லவேளையாக யாரோ அவளை இழுத்து, ஒதுக்கி நிறுத்தினார்கள்.

கரிசனமான குரலில் ஏதோ சொல்வதுகூட, அவளது காதுகளில் லேசாக விழுந்தது.

புரியாத ஏதோ மொழி., மராட்டியாக இருக்கும் எண்ணம் ஓடும்போதே, “வேண்டுமானால் உள்ளே வந்து, சற்று நேரம் உட்காருகிறாயா?” என்று அந்தக் குரல் ஆங்கிலத்தில் கேட்கவும், சௌரதி திகைத்தாள்.

உள்ளேயா? அவள் வெளியே அல்லவா செல்ல வேண்டும்? அதுவும், எவ்வளவு முடியுமோ, அவ்வளவு தூரம்!

“இஇல்லை. நான் போபோக வேண்டும்.” என்றவள், கையை உருவிக்கொண்டு, மிகவும் கவனமாக வெளியே செல்லலானாள்.

அவளது தடுமாற்றத்தையும், யாரோ உதவியதையும் பார்த்து

யாரோ சிலர் நின்று. திரும்பிப் பார்த்தது போல தோற்றம் ஒரு கணம் மனதில் வந்து போனது.

ஆனால், யார் என்ன பார்த்து என்ன? இவர்கள் யாரையும் இவள் இனிச் சந்திக்கவே போவதில்லை! இந்த ஊருக்கும் அவளுக்கும் எந்தத் தொடர்புமே இருக்கவும் போவதில்லை.

இனி . . . என்று யோசிக்க முயன்றால், வெறும் வெள்ளைக் காகிதம் போல மூளையில் எதுவுமே தோன்றவில்லை.

எப்படியோ பிடிவாதமாக மூளையைக் கசக்கிப் பிழிந்து, யோசித்து ஒருவாறு ரயிலைப் பிடித்துச் சென்னைக்கு வந்து வீட்டை அடைந்தால், மும்பையில் தொடங்கிய பயங்கரக் கனவு அப்போதும் அவளை விட்ட பாடில்லை.

அது பற்றி ஏதேனும் சொல்வதானால், பயங்கரம் உச்சத்தைத் தொட்டிருந்தது. அவளுடைய அருமைத் தாயாரின் உயிர் மூச்சு அடங்கி விட்டிருந்தது!

இரண்டு நாட்களாக பசி தாகம் அறியாமல் பயணம் செய்து வந்தவள், உணர்விழந்து மயங்கி விழுந்தாள்.

பெற்றவளின் அருகே இருந்து கதறிக் கொண்டிருந்த தங்கை, உடன் பிறந்தவளைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

அப்பாவுக்குப் பிடிக்காது என்று அக்கம் பக்கத்தாரிடம் நெருங்கிப் பழகியது கிடையாது என்றாலும், இந்த இழப்பில் எல்லோருமே கலந்துகொண்டு உதவி செய்தனர்.

அப்பாவுக்குத் தகவல் தெரிவிப்பது பற்றிப் பேச்சு வந்தபோது, “அவர் வெளிநாடு டூர் போயிருக்கிறார். அவரைக் கண்டுபிடிப்பதே கடினம். காத்திருக்க வேண்டாம்.” என்று சுருக்கமாக முடித்துவிட்டாள் சௌரதி.

ப்ரீதி என்ன என்று கூடக் கேட்கவில்லை.

உரிய சடங்குகளை சுருக்கமாக முடித்ததோடு மற்றவர்கள் போன பிறகும், தங்கை முகம் கொடுத்துப் பேசாமல் ஒதுங்கியே போகவும், சௌரதி குழம்பினாள்.

குழப்பத்தோடு கலக்கமும். இனி ஒருவருக்கு ஒருவராக, அவர்கள் இருவரும்தானே வாழ்ந்தாக வேண்டும்? ஆளுக்கு ஒரு மூலையைப் பார்த்துக்கொண்டு ஒரே வீட்டில் எப்படி இருக்க முடியும்?

ஒரு நாள் ப்ரீதியைப் பிடித்து வைத்து வினவினாள்.

தமக்கையை நேராக நோக்கிய ப்ரீதியின் கண்களில் கனல் பறந்தது. “அம்மா சாகிற நிலையில் இருக்கும்போது, ஊர் சுற்றப் போனாயே! உன் பேரைச் சொல்லிக் கூப்பிட்டுக் கூப்பிட்டு எப்படித் துடித்தார்கள், தெரியுமா? நீதானே அம்மாவுக்கு மதி மந்திரி? என்ன கேட்கத் தவித்தார்களோ? அப்போது விட்டுப் போய்விட்டு, இப்போது வந்து சாவகாசமாகக் கதையா கேட்கிறாய்? அம்மாவைப் பற்றிய கவலையே இல்லாமல் போனாயே, அப்படியே போய்த் தொலைவதுதானே? எதற்குத் திரும்பி வந்தாய்? “ என்று ஆத்திரத்துடன் பொரிந்து கொட்டினாள்.

அம்மாவைப் பற்றிக் கவலை இல்லாமலா? அவள் போனதே, பெற்றவளின் கவலை தீர்க்கத்தானே? அங்கே அவள் சென்றதும், கண்டதும், அதிர்ந்ததும்!

கடவுளே! தலை மேலேயே இடி விழுந்தது போல எத்தகைய அதிர்ச்சி!

கோபத்துடன் முறைத்துப் பார்த்துக்கொண்டு நின்ற தங்கையைப் பார்த்ததும் சௌரதியின் மனம் இளகியது.

சின்னப் பெண். இதற்கு மேல், இவள் நிச்சயம் தாங்க மாட்டாள்.

சின்னவளிடம் சொல்லவே கூடாது என்று சௌரதி முடிவு செய்யுமுன், ப்ரீதி பொறுமை இழந்து கத்தினாள். “என்ன சொல்லேன். அப்பாவைப் பார்க்கப் போனதாகப் பொய் மட்டும் சொல்லாதே. அவர் பேச்சை மீறிப் போனால் திரும்பிக் கூடப் பார்த்திருக்க மாட்டார். ஓ! அப்படி அவர் ரொம்பத் திட்டி அனுப்பியதால்தான், இறுதிக் காரியத்துக்கு அப்பா வரமாட்டார் என்றாயா? அடிப் பாவி! அப்பா உறவையே கெடுத்து முடித்து விட்டாயே! அப்படி என்ன உனக்கு மும்பை பார்க்க ஆசை? அம்மா உடல்நிலையை மறந்து, அப்பா உறவைக் கெடுத்து . . . சே! நீ இவ்வளவு மோசம் என்று நான் நினைத்ததே இல்லையே! அம்மாவைக் குறையோடு சாக விட்டுவிட்டாயே! ஐயோ அம்மா!” என்று கோபத்தில் தொடங்கிக் கண்ணீரில் முடித்தாள்.

அன்றிரவில் தங்கை உறங்கிய பிறகு சௌரதி மெல்ல எழுந்தாள்.

கலாவதியின் அறையில் அவள் படத்தின் முன்னே சென்று அமர்ந்தாள். நாற்பத்தியொரு நாட்கள் ஏற்ற வேண்டும் என்று சடங்கு சம்பிரதாயம் சொன்னார்கள் என்று படத்தின் முன்னே ஒரு காமாட்சி விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

எண்ணெய்த் திரி விளக்கின் சுடர் ஒளியில், கலாவதியின் உதடுகள் அசைவது போல ஒரு பிரமை தோன்றியது.

அன்னை என்ன சொல்ல விரும்பினாள்? இப்போதும் அதைத்தான் சொல்ல முயற்சிக்கிறாளோ? உதட்டசைவை வைத்துப் புரிந்துகொள்ள அவள் “லிப் ரீடிங்” படிக்கவில்லையே!

உண்மையில் விளக்குச் சுடரின் அசைவால்தான் படத்தில் அசைவு போலத் தோன்றுகிறது., மற்றபடி அம்மா வந்து படத்தின் மூலம் மகளிடம் பேச முயற்சி பண்ண முடியாது என்கிற யதார்த்தம் அவளது மூளைக்குப் புரியாமல் இல்லை.

ஆனால், தன் கடைசி நேரத்தில் தாயார் அவளிடம் என்ன சொல்ல விரும்பி அழைத்தாளோ? அதைச் சொல்ல முடியாத ஏக்கத்துடனேயே போய்விட்டாளே! அந்த நேரத்தில் அருகில் இராமல், ஒரு பயனற்ற, வீணான, முழுக்க விருதாவான முயற்சியில் ஈடுபட்டு, அன்னையின் பொன்னான அந்தக் கடைசி வினாடிகளை வீணாக்கி விட்டோமே என்று அவளது மனம் பதறித் துடித்தது.

என்ன செய்தாலும் திரும்பப் பெற முடியாத வினாடிகள்! அந்த நேரத்தில் வீட்டுப் பொறுப்பேற்று நடத்தும் மகளுக்காகத் தாய் மனம் எப்படித் துடித்திருக்கும்! அவள் சொல்ல நினைத்ததை அறிய முடியாமலேயே போயிற்றே!

எதுவும் செய்ய முடியாத ஆற்றாமையும் தவிப்பும் தாங்க முடியாமல், சௌரதி கதறித் துடித்துவிட்டாள்.

பெரிதாக ஒலியெழுப்பி ஓலமிட்டு அழவில்லைதான். ஆனால், சௌரதியின் அடக்கிய விம்மலும் விக்கலும் கூட, இயற்கைக்கு மாறான ஒலியாகப் போய், இளையவளை எழுப்பி விட்டன போலும். கண் விழித்த ப்ரீதி

விசும்பல் சத்தத்தைக் கேட்டு வந்து பார்த்தபோது, ஆற்றுவாரின்றித் தமக்கை குலுங்கி அழுவது தெரிந்தது..

சற்று நேரம் நின்று பார்த்துவிட்டு, “இப்போது அழுது என்ன செய்வது? வா. வந்து படுத்துக் கொஞ்சமேனும் தூங்கு. நாளைக்கு அலுவலுக்குச் செல்ல வேண்டும் என்றாயே!” என்று அழைத்தாள்.

பெரிதாக ஆறுதல் சொல்லவில்லைதான். ஆனாலும், துக்கம் பெரிதளவு குறைந்தாற் போல சௌரதி உணர்ந்தாள்.

அன்றிலிருந்து, தமக்கையைக் கண்ட நேரமெல்லாம் ப்ரீதி காய்வது குறைந்தது. அப்போதும், சௌரதியிடம் அவள் உருகி

வழியவில்லைதான். ஆனால், மட்டம் தட்டியும் வெட்டியும் பேசியது குறைந்ததே, மூத்தவளுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது.

உப்பும் தண்ணீரும் உள்ளே செல்லச் செல்ல, இழப்பின் துக்கம் குறையும் என்பார்கள். ஆறாத ரணமாக ஒரு வலி உள்ளே இருந்தது உண்மையே.

ஆனால், அன்றாடம் செய்தாக வேண்டிய கடமைகள், இழப்பை நினைத்து வருந்திக்கொண்டே இருக்க, அவர்களை விடவில்லை.

அவ்வப்போது ஏதாவது ஒரு பாட்டைக் கேட்கையில், ஒரு தோற்றத்தில் , ஒரு வார்த்தையில் கலாவதியின் நினைவு சுனாமியாக வந்து, இருவரையுமே சுருட்டி இழுக்கத்தான் செய்தது.

அந்தச் சமயங்களில், "நீ என்ன அந்த நேரத்தில் அம்மா பக்கத்திலா இருந்தாய். நான்தான் அம்மாவின் கடைசி நேரத் தவிப்பைப் பக்கத்தில் இருந்து பார்க்கும்படி ஆயிற்று. உனக்கென்ன? நீதான் ஜாலியாகச் சுற்றுலா சென்றுவிட்டாயே! " என்று பெரியவளைக் குத்திப் பேசித் தன் வேதனையை ப்ரீதி ஆற்றிக் கொள்வாள்.

சௌரதிக்குத்தான் மத்தளம் போல, இரு பக்க வலி! தாயின் மறைவு ஒரு பக்கம் என்றால், சின்னவள் கிளப்பி விடும் மும்பைப் பயண நினைவு இன்னும் பெரிய துன்பமாக இருந்தது.

வாய் விட்டு அரற்றக் கூட முடியாத துன்பம்!

பெரிய மனுஷி மாதிரி சில சமயம் ப்ரீதி அது பற்றி உதாசீனமாகப் பேசும்போது, அவளிடம் சொல்லி விடலாமா என்று பெரியவளுக்குத் தோன்றும்.

ஆனால், அப்புறம் எப்படி இந்தத் தென்போடு தங்கை தலை நிமிர்ந்து பேசுவாள்? அவளது தென்பு திடம் எல்லாமே அழிந்து போகுமே!

இருக்கட்டும். இந்த வேதனை, குன்றல் எல்லாம் அவளுடனேயே போகட்டும். ஆறு வயது மூத்தவளாகப் பொறுப்பேற்பது என்றால் சும்மா அல்ல.

அவர்களுடைய அம்மா கூட, அதைச் சொல்லவே தன்னைத் தேடியிருக்கக் கூடும்! தங்கையைப் பார்த்துக் கொள்ளும்படியாகச் சொல்வதற்கு!

அப்படித்தான் இருக்கும்!

சௌரதி வேலையில் மூழ்கித் தன் துயரத்தை மறக்க முயன்றாள்

என்றால், அவளுடைய தங்கை அவளுக்குப் பிடித்த ஓவியம் வரைவதில் முழு மூசச்சாக ஈடுபட்டாள்.

ஏற்கனவே சித்திரம் தீட்டுவதில் அவளுக்கு அதிக ஆர்வம் உண்டு. அதற்காகவே, பள்ளிப் பாடம் எவ்வளவு இருந்தாலும் ஓர் ஓவியப் பள்ளிக்கும் சென்று பயின்று வந்தாள்.

அந்தப் பள்ளியை நடத்தியவரின் பெயர் பரந்தாமன். சில மாத, வாரப் பத்திரிகைகளுக்கும் படங்கள் வரைந்து கொடுக்கிறவர். அது போக மிச்ச நேர வருமானமாக அந்த ஓவியப் பள்ளியை நடத்தி வந்தார்.

ஆனால், வாய்ப்புக் கிடைத்தால், சினிமா செட்டிங்களுக்கும் வரையப் போய் விடுவார். சினிமாவில் பேர் வாங்கிவிட்டால், பெரும் பணம் கிடைக்கும் என்கிற எண்ணம். சின்ன வேலை என்றாலும் அங்கே ஓடி விடுவார். அந்த நேரங்களில் கலைப் பள்ளியின் கதவு மூடப்பட்டிருக்கும்.

இப்படி ஒழுங்கற்று அந்தப் பள்ளியை நடத்தியதால், அங்கே பயின்ற பலரும் வேறு பள்ளிகளில் கற்கச் சென்றுவிட்டார்கள்.

ப்ரீதியும் இன்னொருத்தியும் மட்டும்தான் இப்போது! அந்த இன்னொருத்தி மிக அருகில் வசித்தாள். நடந்தே வகுப்புக்கு வந்துவிட்டுப் போக முடியும். சித்திரம் தீட்டுவதில் ஆர்வம் கொண்டிருந்த ப்ரீதிக்கோ, ஓவியரின் சிறு சிறு கோடுகளே அழகிய ஓவியங்களாக மாறுவதைப் பார்த்து, அவரது கலையில் மயக்கம்!

அப்படி பரந்தாமன் பின்புலம் வரைந்து கொடுத்து எடுத்த படம் ஒன்று, விருது வாங்கவே, அந்த வட்டாரத்தில் பரந்தாமனின் புகழ் விண்ணை எட்டிப் பறந்தது.

அவ்வளவுதான். அவரது சொல் ப்ரீதிக்கு வேதம் ஆயிற்று. கிடைத்த நேரங்களில் எல்லாம், அவரது பாணியைப் பின்பற்றி வரைந்து தள்ளினாள்.

“ப்ளஸ் ஒன் படிக்கும்போது, படிப்பில் முழுக் கவனம் செலுத்தினால்தான் அடுத்த ஆண்டு அதிக மதிப்பெண் எடுப்பது எளிதாக இருக்கும்., அன்றன்றையப் பாடங்களை ஒரு தரம் படித்து முடித்துவிட்டு, அப்புறமாக வரை.” என்று சௌரதி சொன்னதை அவள் காதில் வாங்கவே மறுத்தாள்.

சித்திரம் அவளது உயிர் மூச்சாம்! வரைவதை நிறுத்தினால், அவளது உயிரே போய்விடுமாம். வகுப்பில் பாடம் நடத்தும்போது கவனிக்காமல் பராக்குப் பார்க்கிறவர்களுக்குத்தான் வீட்டில் வந்து

படிக்கிற பிரச்சினை எல்லாமாம். அவளது பாணியே தனி பாணியாம்!

டைரக்டர், காமிரா மேன் இல்லாமலே, ப்ரீதி வசனம் பேசினாள்.

கடைசியாக ஒரு "பஞ்ச்" வரியாக, அப்படியே மதிப்பெண் நன்றாக வராவிட்டாலும் அவளுக்குக் கவலை இல்லையாம். எப்படியும், அவள்தான் சீக்கிரமே படிப்பை நிறுத்திவிட்டு, முழு நேர ஓவியர் ஆகப் போகிறாளே!

தலையில் அடித்துக் கொள்ளலாம் போல வந்த உந்தலை அடக்கிக்கொண்டு, "எப்போது வேண்டுமானாலும், சித்திரம் தீட்டக் கற்றுக் கொள்ளலாம். ப்ரீம்மா. ஆனால், படிப்பதற்கு இது ஒன்றுதான் தருணம். அதனால், படிப்பை முடித்துக்கொண்டு, அப்புறமாக படம் வரைவதைப் பார்க்கலாம். இப்போது பாடத்தை எடுத்துப் படி. என்ன?" என்று மூத்தவளாகச் சிறு அதட்டலுடன், உத்திரவிட்டுவிட்டு, சௌரதி அங்கிருந்து அகன்றாள்.

ஆறு ஆண்டுகள் மூத்த தமக்கையின் அதட்டலில் சற்று நேரம் திகைத்து நின்றபோதும், தலையை உலுக்கிக்கொண்டு ப்ரீதி விரைவிலேயே தன்னிலைக்குத் திரும்பினாள்.

அக்காவின் பின்னோடு ஓடி, "ஏய் அக்கா, அதென்ன என்னை அதட்டுகிறாய்? நான் ஒன்றும் உன்னைப் போலப் பொறுப்பில்லாதவள் இல்லை. சாகக் கிடந்த அம்மாவை விட்டுவிட்டு மும்மையில் சுற்றப் போனவள்தானே, நீ?" என்று தனக்குத் தெரிந்த ஒரே குற்றச்சாட்டை எடுத்து வீசினாள்.

இதற்குப் பதில் பேசாமல் இருக்க இருக்க, தங்கையின் மனதில் அவளது தவறான ஊகமே உண்மை என்று உறுதியாகிவிடும் போல சௌரதிக்குத் தோன்றியது.

அதுவும் சரியில்லைதானே? அத்தோடு பெரியவள் என்கிற மரியாதை போய், அக்காவிடம் அன்பும் அடியோடு மறைந்துவிடக் கூடும். அது, இருவரின் எதிர்காலத்துக்குமே நல்லதல்ல. முக்கியமாக அறியாப் பெண்ணான சின்னவளுக்கு.

சற்று யோசித்து, "ஏன் ப்ரீதிம்மா, மும்பைக்கு ஊர் சுற்றிப் பார்க்க மட்டும்தான் போவார்களா? அல்லது, நான்தான் அப்படி ஊர் சுற்றுகிறவளா? வேறு காரணமும் இருக்கலாம் அல்லவா?" என்று மெதுவாகக் கேட்டாள்.

சட்டெனத் தங்கையின் கண்கள் பளிச்சிட்டன. "அப்படியானால் . .ஒ, நீ அப்பாவைத் தேடிப் போனாயா . . . " என்று கேட்கும்போதே

அவளது கண்கள் சலிப்பில் மங்கின. “ஹூம், அப்படி இருந்தால்தான் அம்மாவின் சுகவீனத்தைச் சொல்லிக் கட்டாயமாக அப்பாவைக் கூட்டி வந்திருப்பாயே! எனக்கு எல்லாம் தெரியும். சும்மா உடான்ஸ் விடாதே. எப்போதுமே, நம் இரண்டு பேருக்குமே மும்பை பார்க்க ஆசைதானே? உனக்கு வாய்ப்புக் கிடைத்ததுமே, நைசாக என்னைக் கழற்றி விட்டுவிட்டுப் போய்விட்டாய். இது கூடப் புரியாமல் இருக்க, நான் என்ன வாத்து மடச்சியா?” என்று ஆத்திரத்துடன் படபடத்தாள்.

அதை விட மோசம் என்று நினைத்தாள் மூத்தவள். வாத்தாவது, ஏதாவது ஒன்று வழி காட்டும்போது யோசியாமல் மற்றது அதன் பின்னோடு போகும். தானாகவே இப்படித் தப்புத் தப்பாக யோசிக்கிற மகா அறிவுக் கூர்மை, பாவம், வாத்துக்குக் கிடையாது!

ஒரு கைத்த புன்னகையோடு அவள் விலகிச் செல்ல, திடுமென ஏதோ எண்ணியவளாய்ப் பரீதி அக்காவின் பின்னே ஓடி வந்தாள். “அக்கா, நில்லு. இப்போது, அம்மா விஷயம், அப்பாவுக்குத் தெரியாதே! அவர் திடுமெனக் கிளம்பி வந்தால், எவ்வளவு பெரிய அதிர்ச்சியாக இருக்கும்? இதை எப்படித் தெரிவிப்பது?” என்று கேட்டாள்.

பணிவிடை செய்வதற்கும், மற்ற மனைவி சேவைகளுக்குமாக அம்மா ஆரோக்கியமாக இருந்தால் தவிர, அவர்களின் பிறப்புக்குக் காரணமான பெரிய மனிதர் இந்தப் பக்கம் எட்டிப் பார்க்க மாட்டார் என்று, இவளிடம் எப்படிச் சொல்வது?

சூசகமாகச் சொன்னால் புரிந்து கொள்ளும் வயதுமில்லை. அதற்குத் தேவையான புத்தியும் கிடையாது.

இதற்கும் மேலாக, மும்பைக்குப் போய் அப்பாவைத் தேடலாம் என்று அவளைப் போலவே கிளம்பினாலும் கிளம்பலாம். உள்ளே ஓடுவது ஒரே ரத்தம்தானே . . என்று சௌரதி யோசிக்கும்போதே, “வேண்டுமானால், நீ வேலையில் இன்னொரு தரம் விடுப்பு வாங்கிக்கொண்டு வாயேன். நாம் இருவருமே போய், அப்பாவைத் தேடுவோம். அப்பா வேலை செய்யும் நிறுவனம் கூட, ஏதோ “ஜி”யில் தொடங்குமே ! “ என்று சின்னவள் திட்டமிடத் தொடங்கினாள்.

டிஎன்ஏ! அக்காவின் அசட்டுத்தனம் உரித்து வைத்தது போல, அடுத்தவளுக்கும் வந்திருக்கிறது! ஒரே வித்தியாசம்., பெரியவளுக்கு அந்த நிறுவனத்தின் பெயர் முழுதாக நினைவு இருந்து தொலைத்தது.

கசப்பினூடே சௌரதி அவசரமாக யோசித்தாள்.

தங்கை சொன்னால் கேட்டுக் கொள்கிறவள் அல்ல. அதுவும்,

இப்போதைய மனநிலையில் பிடிவாதம் அதிகம்தான் ஆகும். அவளுக்கு விடுப்பு கிடைக்கவில்லை என்றால் தனியாகவே கிளம்பி விடக் கூடும்.

இவளைத் தடுப்பதற்கு ஒரே வழி . . .முகத்தை சோகமாக வைத்துக்கொண்டு, "சொன்னால் வருந்துவாயே என்று நினைத்தேன். அம்மா விஷயம் அவருக்குத் தெரியுமாம். மனம் உடைந்து துறவி ஆகிவிட்டாராம். இமயமலைக் காட்டுக்குள் எங்கேயோ போய்விட்டாராம். இனி அம்மா கணக்குக்குப் பணம் கூட வராது என்று நினைக்கிறேன்." என்றாள் பெரியவள்.

அவள் விரும்பியது போலவே, பணக்கணக்கு ப்ரீதியின் மனதில் தைத்தது.

ஆனால், "ஐயய்யோ! அப்புறம் நாம் செலவுக்கு என்ன செய்வோம்? எப்படியும், மகள்களான நம் பொறுப்பு, அப்பாவினதுதானே? அதெப்படிப் பணம் அனுப்ப மாட்டார்? அதை நேரில் கேட்கவேனும் போகலாம், வா. கிளம்பு!" என்று படபடத்தாள்.

"போய் யாரிடம் கேட்பது? அவர்தான் அங்கே இல்லவே இல்லையே. கணக்கு முடித்துப் பணத்தை வாங்கிக்கொண்டு வேறே தகவலே தராமல் போய்விட்டாராம். அதனால், நாம் அவ்வளவு தூரம் சென்று என்ன பிரயோசனம்? வீண் செலவுதானே?

நீயே சொல்லு! "

பொய் மேல் பொய்! இன்னும் இந்த மனிதரால் எத்தனை சொல்ல நேருமோ?

மூத்தவள் தனக்குள்ளே அருவருத்துக் கொண்டிருக்கும்போதே, அவள் அஞ்சிய கேள்வியைச் சந்தேகமாகப் பார்த்தபடி சின்னவள் கேட்டாள். "இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்? எப்போது தெரியும்?"

"முன்பே தெரியும். ஒரே நேரத்தில் பெரியவர்கள் இரண்டு பேரும் இல்லை என்று ஆனால் ரொம்பவும் தாங்க மாட்டாயே என்று அப்போது சொல்லவில்லை. . . பொறு. நான் சொல்லி முடித்த பிறகு, என்ன வேண்டுமோ, கேள். . .வேலை நடுவே இடையூறு என்றால் அவர் பொறுக்க மாட்டார் என்று நம் மூவருக்குமே தெரியும். ஆனால் ஏதோ வகையில் அவர் நம்மைப் பற்றித் தெரிந்து கொள்வார் போல. அம்மா விஷயமும் தெரிந்து, ஒரு முடிவும் எடுத்துவிட்டார். அதன்படி எல்லாம் முடிந்து, அவர் கிளம்பிப் போன பிறகு, மும்பையிலிருந்து கூப்பிட்டு ஒருவர் இந்த விவரம் கூறினார். கலங்கிப் போய் நான் மேலே

கேட்டதற்கு, “அம்மா, அவர் சொன்னதைத் தெரிவித்துவிட்டேன். யாரும் தன்னைத் தேடி வரக் கூடாது என்பது அவரது விருப்பம். என்னையும் தொல்லை செய்ய வேண்டாம். எனக்கும் வேறு எதுவும் தெரியாது.” என்று வைத்துவிட்டார். அந்த எண்ணைக் கூப்பிட்டுக் கேட்டால், அது பொதுத் தொலைபேசி, பேசியது யார் என்ன என்று எதுவுமே தெரியாது என்றுவிட்டார்கள். செலவு செய்துகொண்டு அங்கே போய் இருந்துகொண்டு, ஏதாவது துப்பறியும் நிறுவனம் மூலமாக விசாரிக்கலாம் என்றாலும். அதற்கு நம்மிடம் பணம் கிடையாது. அதனால்தான் நம்மால் முடியாது என்று விட்டுவிட்டேன். நாம் நல்லபடியாக வாழ்வை நடத்துவதுதான் அம்மாவுக்கு நாம் செய்யும் அஞ்சலி என்பது என் கருத்து. அதனால் நீயும் நன்றாகப் படித்து முன்னேற வேண்டும். சரிதானா?” என்று நீளமாகப் பேசி முடித்தாள் தமக்கை.

வாடி விட்ட முகத்தில் எரிச்சல் படர, “ஆமாம், இதுதான் சாக்குஎன்று படிபடி என்று உயிரை வாங்கு! வாழ்க்கையில் முன்னேறுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று எனக்கும் தெரியும்! “ என்று வெறுப்புடன் கூறி விலகிப் போனாள் தங்கை.

தங்கை அதிர்ச்சியில் இருக்கிறாள். அதிர்ச்சி தெளிந்ததும், அமைதியாக யோசித்து நல்ல வழி காண்பாள் என்று உள்ளூர நம்பிக்கையொடு சென்றாள் சௌரதி.

ஆனால், கூடப் பிறந்தவள் கண்ட வழி, சகோதரிகள் இருவருக்குமே குழி பறிக்கக் கூடியது என்று அவள் அப்போது அறியவில்லை.

அத்தியாயம் -3

தாயின் மறைவு பெரிய துயரமே என்றாலும், அன்றாட வாழ்வு தொடர்ந்தது.

ப்ரீதி பள்ளிக்குச் சென்று வர, செளரதி வேலைக்குப் போய் வந்தாள்.

பல ஆண்டுகளாக அவர்கள் வீட்டில் பணி புரிந்த வேலைக்காரம்மாவிடம் சற்று அதிகப்படிப் பணம் கொடுக்கவும், கூடுதலாகச் சில சமையல் வேலைகளையும் அவள் ஏற்று நடத்திவிட்டுப் போக, வீடு பிரச்சினையின்றி நடந்தது.

இந்த நிலையில் ஒரு நாள், செளரதி பணிபுரிந்த மறுவாழ்வு மையத்தின் தலைமை மருத்துவர் அவளைக் கூப்பிட்டு அனுப்பினார்.

எதற்கோ என்று சிறு கவலையுடனே சென்றால், அவர், அவளது பணியைப் பாராட்டிவிட்டு, வேறு விதமான ஒரு வாய்ப்பை ஏற்க முடியுமா என்று அவளிடம் வினவினார்.

ஒரு பெரிய இடத்துப் பையன். தொழில் இறுக்கம் தாளாமல் மருந்து எடுக்கத் தொடங்கிவிட்டான். தப்பென்று அவனே உணர்ந்துவிட்டதால், சிகிச்சைக்கு ஒத்துக் கொண்டான். வெளி நாட்டில் சிகிச்சை கிட்டத்தட்ட முடிந்தும் விட்டது. இங்கே மிக நெருங்கிய உறவினர் வீட்டில் இருக்கப் போகிறான். போதை மருந்து விவரம் வெளியே தெரிந்தால் அவனுடைய தொழில் வாழ்வு இரண்டுமே கெட்டுவிடும். அதனால், இந்தப் பணி அறிந்த யாராவது, அவன் இருக்கும் இடத்துக்குப் போய் அவனது மனநிலையை இயல்புக்குக் கொண்டு வரவேண்டும்.

இந்தப் பணிக்காக யாரையாவது அனுப்புமாறு, இந்த மையத்தை அணுகிக் கேட்டிருக்கிறார்கள். குறைந்த பட்சமாக ஒரு மாத வேலை. பாதிக்கப்பட்டவரின் மன நிலையைப் பொறுத்து மேலும் அதிக நாட்களும் ஆகலாம்.

இதில், சொந்த ஆதாயம் தேடாத யாரையேனும் “கவுன்சலிங்” செய்து அவனைக் கவனித்துக்கொள்ள அனுப்ப முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். பணியைத் திறமையாகச் செய்வதோடு, மிக முக்கியமாக ரகசியமும் காக்க வேண்டும்.

“எனக்கு உடனே உன் நினைவுதான் வந்தது, செளரதி. இது

போலப் பாதிக்கப் பட்டவர்களிடம் நீ நடந்துகொள்ளும் முறையை நான் கவனித்திருக்கிறேன். அன்பு, ஆதரவு மட்டுமின்றி, உனக்குச் சமமானவர்களாகவே காட்டி, அவர்களோடு நீ பேசுவதையும் கேட்டிருக்கிறேன். அதே சமயம், சக ஊழியர்களிடம் கூட, யாரைப் பற்றியும் நீ தேவையற்று உரையாடி நான் அறிந்ததில்லை.

“இப்படி ஒருவர்தான் அவர்களுக்குத் தேவை. அதே சமயம், தனியே போவதால் உன் பாதுகாப்பு பற்றியும் பயப்படத் தேவையில்லை. மிகவும் உயர்ந்த மனிதர்கள். பிரச்சினை வராது என்பதற்கு நான் உத்திரவாதம். வருமானமும், மொத்தமாக ஒரு பெரிய தொகை தருவார்கள். அதுவும் உணவு, உறைவிடம் போக. அந்தப் பணி முடிந்து வரும்போது, இங்குள்ள வேலையும் தொடரும். என்ன சொல்லுகிறாய்?” என்று கேட்டார்.

அவர் சொன்ன தொகை, மிகவும் பெரியதுதான். இன்னும் ஓர் ஆண்டில் ப்ரீதியின் கல்லூரிச் செலவுகளுக்கு எவ்வளவோ உதவியாக இருக்கும். ஆனால், அவளைத் தனியே விட்டு எப்படிச் செல்வது?

அவளையும் கூட்டிச் செல்ல அனுமதி கிடைத்தாலும் கூட, அவளது படிப்பு என்னாவது? ப்ளஸ் ஒன். இடையில் விட முடியாதது.

யோசித்துவிட்டு, “இல்லை டாக்டர் சார். என் தங்கையின் படிப்புக் கெட்டுவிடும். அம்மா இருந்தாலாவது அவர்களிடம் அவளை விட்டுவிட்டுப் போக முடியும். இப்போது. . . அவளது படிப்புதான் சார், எனக்கு முக்கியம். “ என்றாள் தீர்மானமாக.

“ம்ம்ம் . .நீ சொல்லும் காரணம் சரிதான். ஆனால், ஒரு செலவும் இல்லாமல் மொத்தமாகப் பணம் கிடைக்கும். அவள் ப்ளஸ் ஒன்னோ, அடுத்ததோ என்றாயில்லையா? அவளது கல்லூரிப் படிப்புக்கே பயன் படலாம். . . ஆனால் . . உன் காரணத்தையும் மறுக்க முடியாது. அவர்கள் இன்னும் சில மையங்களிலும் கேட்டிருக்கிறார்களாம். நல்ல மனிதர்கள். உனக்கும் இந்தச் சூழலில் இருந்து ஒரு மாறுதல், மனதுக்கு ஆறுதலாக இருக்குமோ என்று நினைத்தேன். பார்ப்போம்.” என்றார் தலைமை மருத்துவர்.

பெரியவர் சொன்னது போல, மாறுதல், சௌரதிக்கு மிகவும் தேவைப்பட்ட ஆறுதல்தான். வீட்டின் ஒவ்வோர் இடத்திலும் கலாவதியின் ஓரொரு தோற்றம் நினைவில் வந்துகொண்டே இருந்தது. வெளியே காட்டிக் கொள்ளாவிட்டாலும், சின்னவளின் குற்றச்சாட்டு நெஞ்சில் கத்தியால் குடைவது போன்ற வலியே.

தாயார் தேடிய சமயத்தில் இல்லாமல் போனோமே என்பது, ஈடு

செய்ய முடியாத இழப்பு ஆயிற்றே! சும்மாவே வலிக்காமல் இருக்குமா? குத்திக் காட்டும்போது பல மடங்கு அதிகமாக வலித்தது.

ஆனால், அன்னை என்ன சொல்ல எண்ணினாள்? எதுவானாலும், அதைச் சின்ன மகளிடம் சொல்லவில்லை.

அவளைப் பார்த்துக் கொள்ளும்படிக் கேட்கவோ? அது, எப்போதுமே செளரதி செய்வதுதானே? ஆறு ஆண்டு வேறுபாடு. அம்மாவுக்கோ, "இம்" என்றால் ஏதாவது வந்துவிடும். தந்தை வரும்போதும், சின்னவள் அக்காவிடம்தான்.

இப்படி எப்போதுமே பார்த்துப் பழக்கம் எனும்போது, தனியாகச் சொல்ல வேண்டுவது இல்லையே!

ஒரு வேளை, வாழ்வு முடியப் போவதை அறிந்து, மனம் உறுதி தேடியதோ?

அல்லது . . . கணவர் பற்றிய விவரமோ? அம்மாவுக்குத் தெரியுமா? எந்த அளவுக்குத் தெரியும்? தெரிந்துமா . . ? எண்ணிலடங்காத கேள்விகள்!

விடை அறியும் வாய்ப்பே இல்லாத வினாக்கள்!

யோசித்து யோசித்து அலுத்துப் போய்த் தூங்குவாள். காலையில் பார்த்தால், கண்ணீர் வழிந்து உப்புக் கோடாய்க் காய்ந்திருக்கும்! தலையணையின் ஒரு புறம் நனைந்திருக்கும்!

ஆனாலும், வாழ்க்கை ஓரளவு அமைதியாகவே நடந்தது.

இந்த நிலையில் அவளுக்கு ஓர் அதிர்ச்சியாக, ப்ரீதி ஒழுங்காகப் பள்ளிக்கு வருவது இல்லை என்று, செளரதியின் செல்ஃபோனுக்கு ஒரு மெசேஸ் வந்தது. கலாவதி இருக்கும்போதே நாலைந்து ஆண்டுகளாக தங்கைக்கு "கார்டியன்" அவள்தான். எனவே, குற்றச்சாட்டும் அவளுக்குத்தான் வந்தது.

ஆனால், சின்னவள் ஒழுங்காகப் படிக்கிறாள் என்று நிம்மதியாக இருந்தாளே!

ப்ரீதியிடம் கேட்டால், "ஆமாம்!" என்றாள் அலட்சியமாக. "சில சித்திரங்களை, இடையில் விட்டுவிடாமல் தீட்டினால்தான் அழகாக இருக்கும் என்று மாஸ்டர் சொன்னார். வேண்டுமானால், மாலையில் அவரது பொது வகுப்பு முடிந்ததும் நம் வீட்டுக்கு வந்து, இரவு என்னேரமானாலும் முடித்துக் கொடுக்கட்டுமா என்று கேட்டார்தான். எனக்குத்தான் அம்மா இல்லாதபோது ராத்திரி நேரத்தில், வயதானவர்

என்றாலும் ஓர் ஆண் வீட்டுக்கு வருவது அவ்வளவு சரியாகத் தெரியவில்லை. அதனால், பள்ளி வகுப்பைக் கட் பண்ணிவிட்டுப் படம் வரையப் போனேன்.” என்று காரணம் சொன்னாள்.

கொலைகாரனுக்குக் கொள்ளைக்காரன் மேல்தானே என்கிற மாதிரியான விளக்கம்!

இரண்டுமே தப்புதான் என்று இவளுக்கு ஏன் புரியவில்லை?

ஆனால், அன்னியனான ஓர் ஆணை, இரு சிறு வயதுப் பெண்கள் இருக்கும் இடத்தில் இரவில் தங்க விடக் கூடாது என்று தெரிகிறதே! அந்த அளவில், அவளுக்கு சந்தோஷமாகத்தான் இருந்தது.

ஆனால், பதினாறு வயது ப்ரீதி நினைத்தது போல பரந்தாமன் ஒன்றும் ரொம்ப வயதானவரும் அல்ல. அவரது பார்வை சரியானதும் அல்ல!

அவ்வப்போது தாமதமாகி விட்டதால், ப்ரீதிக்குத் துணையாக வந்தேன் என்று வருவதும், இரவு என்ன உணவு என்று தூண்டில் கேள்விகள் கேட்பதும், இவ்வளவு நேரத்துக்கு மேல் ஆட்டோ கிடைப்பது கஷ்டம் என்று உரக்க முணுமுணுப்பதுமாக, ஒரு மாதிரிப்பட்ட முயற்சிகள் செய்துகொண்டேதான் இருந்தார்.

ப்ரீதி அறியாத்தனத்தாலும், சௌரதி புரிந்தும், அவரது முயற்சி பலிக்காமல் பார்த்துக் கொண்டனர்.

இந்த நிலையில் இன்னோர் அதிர்ச்சியாக . . இன்னோர் இடியாக என்றால் பொருத்தமாக இருக்கும்., ப்ரீதிக்குப் பள்ளியில் டிசி கொடுத்தார்கள்.

பதறிக்கொண்டு ப்ரீதியின் பள்ளிக்கு சௌரதி ஓடினால், “பள்ளிக்கும் வருவதில்லை., படிப்பதும் இல்லை.” என்று தலைமை ஆசிரியை கடுமையான குரலில் காரணம் கூறினார்.

“எங்களுக்குப் பொதுத் தேர்வு ரிசல்ட் முக்கியம். பல ஆண்டுகளாக நூறு சதம் வாங்கிக்கொண்டு இருக்கிறோம். இவளால் அது கெட்டுவிடும். நீயும் இங்கேதானே படித்தாய்? பள்ளியின் பெயர் உனக்கு முக்கியம் இல்லையா? டிசி தந்தால், வேறு முயற்சி செய்து ப்ரீதி தனியாகப் படித்தே தேர்வு எழுதலாம். அதற்கு ஆக வேண்டியதைப் பார். முதலில், வாழ்க்கைக்குப் படிப்பு முக்கியம் என்று அவளை உணர வை. உன் தங்கையா . .என்று இருக்கிறது!” என்று வருத்தம் காட்டிய தலைமை ஆசிரியையிடம் மேலே எதுவும் பேச முடியாமல், சௌரதி வெளியேறினாள்.

தலைமை ஆசிரியை சொன்னது போல, டியூஷன் வைத்துத் தனிப்படப் படி என்று ப்ரீதியிடம் சொன்னால், அவள், அதை ஏற்க மறுத்தாள்.

“நான் பெரீய சித்திரக்காரி ஆகப் போகிறேன். இந்தப் பிசாத்துப் படிப்பெல்லாம் எனக்குத் தேவையே கிடையாது!” என்றாள் அலட்சியமாக.

“அசட்டுத்தனமாகப் பேசாதே, ப்ரீதி. முதலில் இந்தப் பள்ளி இறுதி வரையேனும் படித்து முடி. அப்புறமாக, உன் சித்திரம் வரைவதைப் பற்றிப் பார்க்கலாம்.” என்று மூத்தவள் சொன்னால், சின்னவள் காதிலேயே வாங்க மறுத்தாள்.

“இதோ பார், வறட்டுத் தவளை மாதிரிப் படிபடி என்று கத்தாதே! ஆனால் நீ தவளைதான். சரியான கிணற்றுத் தவளை! கடல் பற்றி என்ன சொன்னாலும், கிணற்றுத் தவளைக்குப் புரியாது. அதே போல, ஓவியக்கலை பற்றி எவ்வளவு விளக்கினாலும் உன்னால் புரிந்துகொள்ளவே முடியாது. மாஸ்டரிடம் வேண்டுமானால் கேட்டுப் பார், நான் எவ்வளவு திறமைசாலி என்று, அவர் சொல்லுவார்!” என்றாள் அவள்.

தன்னைக் கிணற்றுத் தவளை என்று தங்கை சொன்னது எரிச்சலூட்ட, “என்ன திறமைசாலியோ? கண்காட்சிக்கு என்று எத்தனையோ சாமான் வாங்கி, இரவெல்லாம் விழித்திருந்து, நிறைய வரைந்து கொடுத்தாயே? எதுவும் விற்றுப் பணம் வந்த மாதிரித் தெரியவில்லையே! உன் பெயரில் ஒந்த ஓவியமும் விற்கவில்லை என்று ஹால் உரிமையாளர் சொன்னாரே! “என்று திருப்பினாள் சௌரதி.

இது விஷயமாகப் ப்ரீதியை மட்டம் தட்டிப் பேசுவது தவறே என்றாலும், பண விஷயம் அவளுக்குத் தெரிய வேண்டும் என்று அவள் நினைத்தாள். தங்கை கேட்ட வண்ணங்களும் மற்றதும், சும்மா வராதே!

“எல்லாம் விற்றதே! ஆனால், கடைசி “டச்சப்” மாஸ்டர் செய்ததால் அவர் பெயரைப் போட வேண்டியதாகி விட்டது. நான் வரைந்த பன்னிரண்டுமே விற்றுவிட்டதே!” என்றாள் ப்ரீதி கர்வத்தோடு. “மாலியோடது மூன்றே மூன்றுதான் விற்றது!” என்றாள் ஏளனமாக.

“நான் எத்தனை ஓவியங்களைத் தீட்டினாலும், அத்தனையும் விற்றுவிடும் என்று மாஸ்டர் சொல்லியிருக்கிறார்.” என்று தொடர்ந்து பெருமையடித்தாள்.

சௌரதிக்குப் புரியவில்லை. அத்தனை விற்றிருந்தால், இவ் .

.வளவு பணம் என்றும் பெருமை பேசியிருப்பாளே! செலவுக்குப் பணம் வேண்டும் என்று நினைப்பாளே தவிரப் பணத்தைத் தனக்கென்று மறைக்கிற புத்தி, ப்ரீதிக்குக் கிடையாது! பின்னே?

பணத்தைப் பற்றிக் கேட்டால், தங்கை தலையில் அடித்துக் கொண்டாள். “சொன்னால் கோபம் வருகிறதே! ஆனால், நீ கிணற்றுத் தவளையேதான், அக்கா! கண்காட்சி வைத்தால், ஹால் வாடகை, விளம்பரம், படங்களை அடுக்குவதும், எடுப்பதும், விற்றதைப் பத்திரமாகக் கட்டிக் கொடுப்பதும் . . இன்னும் அங்கே சுத்தம் செய்யும் ஆட்களுக்குக் கூலி! இன்னும் வருகிறவர்களுக்குக் காஃபி டீ, கொறிப்பதற்கு ஸ்னாக்ஸ் என்று எத்தனை செலவுகள்! அதற்கு மேல், மாஸ்டர் பெயர் போட நேர்ந்ததால், அவருக்கு வருமான வரி வேறு! அப்புறம் என்ன மிஞ்சும்? எனக்குப் பேர் வந்த பிறகு, அதிக விலைக்கு விற்கும்போதுதான் பணத்தைப் பார்க்க முடியும். அது வரை, கலைச் சேவையாக எண்ணித்தான் செய்ய வேண்டும்! “

ஆகப் பண விஷயத்திலும் , பரந்தாமன் பட்டை நாமம் போட்டிருக்கிறார்!

அது புரியாமல், இந்த முட்டாள் அவரை அப்படியே நம்பிக்கொண்டு பேத்துகிறது!

ப்ரீதியின் நம்பிக்கையை . . .சரியாகச் சொல்வதானால் ஏமாளித்தனத்தைப் பயன்படுத்தி, அவளை உழைக்க வைத்துப் பரந்தாமன் பணம் சுருட்டுகிறார்.

இதை எடுத்துச் சொன்னாலும், சொல்கிறவளைத்தான் கிணற்றுத் தவளை எனப் போகிறாள்.

இதிலிருந்து இவளை மீட்டு எப்படிப் படிக்க வைப்பது?

ப்ரீதியின் கலை ஆர்வத்தை அழிப்பது, சௌரதியின் நோக்கம் அல்ல. ஆனால், இந்த நிலையிலேயே படிப்பைத் தங்கை அடியோடு விடுவது அவளுக்கு ஒப்புதலாக இருக்கவில்லை.

ப்ரீதி வெகுளி. இன்னும் முதிர்ச்சி பெறுமுன் பரந்தாமனைப் போல எத்தனை முதலைகளைச் சந்திக்க நேரும்? ஆனால் இந்தப் பரந்தாமன் அவளை வளரவே விட மாட்டார் போலல்லவா தெரிகிறது!

எதற்காகவும் கையைக் கட்டிக்கொண்டு சும்மா உட்கார்ந்திருக்க முடியாது என்று சௌரதி தன்னால் ஆன மட்டும், தங்கையிடம் முயன்று பார்த்தாள். ஆனால், ப்ரீதி மேலும் எகிறினாளே தவிர, பெரியவள் சொன்ன பேச்சுக் கேட்பதாகவே இல்லை.

சகோதரிகளுக்கு இடையே நேர்ந்த உரசல், பரந்தாமன் நரிக்குக் கொண்டாட்டமாகிப் போயிற்று.

நாற்பதைத் தாண்டி விட்ட மனிதர், இங்கே பெரியவர்கள் துனை இல்லாததால், உள்ளே புகுந்துவிட முழு முயற்சி செய்தார். சின்னவளுக்குக் கற்றுக் கொடுக்கிற சாக்கில் இங்கே அதிக நேரம் தங்கித் தாமதமாகக் கிளம்பினார்.

வெளியே தப்பாகப் பேச்சு வரும், கிளம்புங்கள் என்று நேரடியாகவே சௌரதி சொல்லிவிட, "அப்படியானால், உரிமையோடு தங்க வேண்டியதுதான் ஹிஹிஹி" என்று அசடு வழிந்தார்.

ஆனால் "வீட்டுக்கார ஆன்ட்டி வருவதாகச் சொன்னார்களே!" என்று சௌரதி வெளியே எட்டிப் பார்க்கவும், வேறு வழியின்றி வெளியேறினார்.

வீட்டில் இருக்க விடவில்லை என்றதும், ஓவியர் வேறு மாதிரி பிளாக்மெயில் பண்ண முயன்றார். . அவரது பள்ளியில் உட்கார்ந்து வரைந்துவிட்டுக் கண்ட நேரம் ப்ரீதியை வீடு வரச் செய்தார்.

முணுமுணுப்பில் மெல்லத் தொடங்கி, கடைசியாக, இப்படி இருந்தால் காலி பண்ண வேண்டும் என்றார்கள் வீட்டு சொந்தக்காரர்கள்.

"உங்கள் அம்மா இருக்கிற இடமே தெரியாது. கௌரவமான குடும்பம் என்று வாடகை கூட அதிகம் கூட்டியதில்லை. ஆனால் உன் தங்கை வயது வந்த பெண் என்பதை மறந்து, இப்படிக் கண்ட நேரம் வீடு திரும்பினால் நன்றாக இல்லை. ப்ரீதியை ஒழுங்காக இருக்கச் சொல்லு. அல்லது, சாரிம்மா, வீட்டைக் காலி பண்ணி விடுங்கள்." என்று கண்டிப்பாகக் கூறினார்கள்.

தங்கையிடம் சொன்னால், "கலையார்வம் இருக்கிறவர்கள், நேரம் காலத்தைப் பற்றி யோசிக்கவே மாட்டார்களாம். மாஸ்டர் சொன்னார்." என்றாள்.

"நான் முழுமையான சித்திரக்காரி ஆகப் போகிறேன். கொஞ்ச நாளில், என் படங்களை லட்சக்கணக்கில் பணம் கொடுத்து வாங்குவார்கள். அப்போது பார், இவர்கள் பல்லை இளித்துக்கொண்டு, எனக்கு ஒரு படம் வரைந்து தாம்மா என்று என்னிடம் கெஞ்சுவார்கள். இருந்திருந்து, இந்த முட்டாள்களின் பேச்சைப் பெரிதாக எண்ணி, என்னிடம் சொல்ல வேறு வந்துவிட்டேயே!" என்றாள், உதாசீனமாக.

தங்கையின் பேச்சு, சௌரதிக்கு அதிர்ச்சியாக இருந்தது.

இந்த வீட்டில்தான் ப்ரீதி பிறந்தததே. பிள்ளைப் பேற்றுக்காகக் கலாவதி மருத்துவமனையில் இருந்தபோது, ஆறு வயது சௌரதியைப் பார்த்துக் கொண்டதே இந்த வீட்டுக்கார அம்மாதான். எவ்வளவு பிரியமாக, முகம் வாடாமல், வயிறு வாடாமல் கவனித்துக் கொண்டாள் என்பது, ரதிக்கு இன்றும் நினைவிருந்தது.

ப்ரீதிக்குமே. இரண்டாவது வீடு அதுதானே!

இப்போதானால், பரந்தாமன் சொல்வதை, அப்படியே கிளிப்பிள்ளை போலக் கூறுகிறாள்! மூளைச் சலவை என்பது இதுதான் போல!

இது எந்த அளவுக்குச் செல்லக் கூடும்?

சோதித்துப் பார்ப்பதற்கு, சௌரதிக்கு விருப்பமில்லை. ஏடாகூடமாகத் தங்கை ஏதாவது சொன்னாள் என்றால், தாங்குகிற மனநிலை அவளுக்குமே இல்லை! மறுத்து வாதாடும் பொறுமையும்தான்.

இப்போது அதிரடி நடவடிக்கைதான் உகந்தது.

அதிர்ச்சி வைத்தியம்!

மறுநாள் அனுமதி கேட்டு, மறுவாழ்வு மையத்துடைய தலைமை மருத்துவரின் முன்னே போய் சௌரதி நின்றாள். “டாக்டர் சார், அன்று ஒரு வாய்ப்புப் பற்றிச் சொன்னீர்களே? அந்த வேலை இப்போதும் இருக்கிறதுதானே? இருந்தால், நான் அங்கே செல்லத் தயார், சார். ஆனால், ஒரே ஒரு சலுகை நீங்கள் பெற்றுத் தர வேண்டும். என் தங்கையை உடன் அழைத்துச் செல்ல அனுமதி வேண்டும். அவளது செலவுக்கு நானே பணம் கொடுத்து விடுகிறேன். எப்படியாவது அவர்களது ஒப்புதலைப் பெற்றுத் தாருங்கள்.” என்று கேட்டாள்.

அத்தியாயம் -4

தலைமை மருத்துவரின் பெயர் மாசிலாமணி. தன்மையிலும் அப்படித்தான். .அவரே அந்த மறுவாழ்வு மையத்தின் பெரிய பங்குதாரரும் ஆவார். வளமை மிக்க குடும்பத்தைச் சேர்ந்த அவர், சேவை மனப்பான்மையோடு, அந்த மறுவாழ்வு மையத்தைத் தொடங்கி நடத்திக் கொண்டிருந்தார்.

அவருடைய நெருங்கிய உறவினனான ஒருவன், போதைப் பழக்கத்துக்கு அடிமையாகி அழிந்தே போனான் என்றும், அதனாலேயே சமூகத்தில் புரையோடிக் கொண்டிருக்கும் இந்தக் கெட்ட பழக்கத்தை, இயன்ற வரை ஒழிக்கும் நோக்கத்தில் இந்த மையத்தைத் தொடங்கி நடத்திக் கொண்டிருக்கிறார் என்று சொல்வார்கள்.

ஒத்த மனமுள்ள மற்றும் சிலரும் பணியில் இணைந்திருந்தார்கள்.

அவருக்கு, சௌரதியின் குடும்ப நிலை பெருமளவு தெரியும். சமீபத்தில் அவள் தாயை இழந்ததும், தந்தை எப்போதுமே பொறுப்பேற்கிறவர் அல்ல., இப்போதும் வரவே இல்லை என்பதும் சௌரதியின் இருபத்து மூன்று வயது இளம் தோள்கள்தான் குடும்பச் சுமையைச் சுமக்கின்றன என்பது வரை, அவர் அறிவார்.

சௌரதியுடைய அசட்டுத் தங்கையின் வெளிச் சுற்றல் கூட, அவரது காதுகளுக்கு எட்டியிருந்தது. எனவே, திடுமென இந்தப் பயணத்துக்கு சௌரதி ஒத்துக் கொண்டது ஏன் என்பதை, அவரால் எளிதாகவே ஊகிக்க முடிந்தது.

“ப்ரீதி பற்றி ஒரு கவலையும் வேண்டாம், சௌரதி. கூடுதலாக ஒருத்தியின் உணவைப் பெரிதாக எண்ணுகிறவர்கள் அல்ல அவர்கள். எனவே, அனேகமாக இந்த வேலை உறுதியாகி விட்டதாகவே எண்ணிக் கொள்ளலாம்.” என்று அவர் பரிவுடன் உரைத்தது, சௌரதிக்கு மிகவும் இதமாக இருந்தது.

“இன்னும் எஸ்டேட் உரிமையாளர் வந்து, உன்னைப் பார்த்து ஓகே சொல்ல வேண்டியதுதான் பாக்கி. “ என்றார் அவர் மகிழ்ச்சியோடு.

“ஓ, அப்படியானால், வேண்டாம் என்று கூடச் சொல்லி விடுவாரா, டாக்டர் சார்?” என்று கவலைப்பட்டாள் சௌரதி.

“வாய்ப்பே கிடையாதும்மா. அவர் வந்து பார்ப்பதே, ஒரு நடைமுறை நிகழ்ச்சி போலத்தான். ஏனென்றால், நேற்று இரவுதான்,

அங்குள்ள நிலைமையை உன்னிடம் எடுத்துச் சொல்லிச் சம்மதிக்க வைக்க இன்னொரு முயற்சி செய்யும்படி என்னிடம் கேட்டார். மற்ற மையங்களில் அனுப்புவதாகச் சொன்ன யாருமே, இந்த வேலைக்குப் பொருத்தமாக அவருக்குத் தோன்றவில்லையாம். என்னைப் பற்றியும் அவருக்கு நன்கு தெரியும் என்பதால், என் தேர்வு சரியாக இருக்கும் என்கிற நம்பிக்கையும் இருக்கிறது." என்றார் அவர்.

என்ன மாதிரித் தெரியும்? உறவா, நட்பா என்று உள்ளூரக் கேள்விகள் தோன்றியபோதும், செளரதி மௌனம் காத்தாள். மிகப் பெரியவரான அவரைக் கேள்வி கேட்கும் தகுதி அவளுக்குக் கிடையாது.

சற்றுப் பொறுத்து, "இது போலப் பாதிக்கப்பட்டவர்கள் எல்லோருமே நல்ல நிலைமைக்குத் திரும்பி வீடு செல்வது எனக்கு முக்கியமே. என்றாலும், இந்தப் பையன் பூரண குணமடைவது, எனக்குச் சொந்த வெற்றி போல ஆகும், செளரதி. மற்றபடி, என்னதான் நீ சமாளிப்பாய் என்றாலும், வயதில் மிகவும் சின்னவளான உன்னை, அவ்வளவு தூரம் தனியே அனுப்ப நான் துணிந்திருக்க மாட்டேன்." என்றார் மாசிலாமணி தொடர்ந்து.

உள்ளூர வியப்படைந்தாலும், வெளியே காட்டிக் கொள்ளாமல், "அந்த எஸ்டேட் உரிமையாளர் எப்போது வருவார், சார்? அவர் வந்து முடிவு சொன்ன பிறகு, எத்தனை நாட்களில் நாங்கள் கிளம்ப வேண்டியிருக்கும்?" என்று தன் தொடர்பான விவரம் மட்டும் கேட்டாள் செளரதி.

லேசாக முறுவலித்துவிட்டு, "இன்று மாலை அல்லது நாளை வருவார். அடுத்த பத்துப் பதினைந்து நாட்களில் நீங்கள் கிளம்ப வேண்டியிருக்கும்." என்றார் மருத்துவர்.

எதற்கும் . . என்று, தங்கையிடம் சொல்வதை செளரதி ஒரு நாள் தள்ளிப் போட்டாள். ஏதோ காரணமாக வருகிறவருக்கு அவளைப் பிடிக்காமல் போனால், எதற்காக வீணாக வீட்டுக்குள், அவசியமற்ற ஒரு பூகம்பம்?

ஒற்றைக் குதிரை மேல் மொத்தப் பணத்தையும் கட்டுகிறவன் முட்டாள் என்று சொல்லுவார்கள். அதே போல, "ப்ளான் பி" என்று இரண்டாவது வழி ஒன்றையும் யோசித்து வைப்பது நல்லது என்று செளரதி நினைத்தாள்.. இந்த வழி இல்லை என்று ஆனால், ஏதோ ஒரு வழியில் ப்ரீதியை இங்கிருந்து அகற்றியே ஆக வேண்டும், அல்லவா?

வடக்கே உள்ள மறு வாழ்வு மையம் எதிலாவது வேலை தேடிக்கொண்டு, அங்கிருந்து அப்பாவைத் தேடலாம் என்று சொல்லித்

தங்கையை அழைத்துப் போகலாமோ? அப்பா என்றால் சின்னவளுக்கு ஒரு பிரமை உண்டு. சந்தோஷமாகவே வருவாள். தலைமை மருத்துவர், அவளது நிலைமை அறிந்தவர். மாற்று வேலை ஏதாவது ஏற்பாடு செய்து தரக்கூடும். . . .நிச்சயம் அந்த உதவி செய்வார்.

என்றாலும், வெளி உலகத் தொடர்பே இராமல் இருக்க முடிந்தால், அந்தப் பரந்தாமனிடம் இருந்து முழுமையான விடுதலை தங்கைக்குக் கிடைக்கும் என்பது செளரதியின் நம்பிக்கை.

ஆனால், எதையும் தேர்ந்தெடுக்கும் உரிமை யாசகர்களுக்கு ஏது? கிடைப்பதற்கு ஏற்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்வதுதான் புத்திசாலித்தனம். என்னதான் மிகுந்த கவனத்துடன் வேலையைச் செய்துகொண்டே இருந்தாலும், செளரதியின் மனம் மீண்டும் மீண்டும் தங்கையிடமே சென்றது.

தமிழ்ச்செல்வன் தாயாருக்குக் கடிதம் எழுத, அவளைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தான். அவனால் எழுத முடியும். ஆனால் உணர்ச்சி வசப்பட்டால் கை நடுங்கி விடும். அப்படி நடுங்கத் தொடங்கிவிட்டால், தனக்குக் குணமே ஆகவில்லையோ என்று யோசிக்கத் தொடங்கி, ஒருபோதும் குணமாகாது என்ற முடிவுக்கே வந்துவிடுவான்.

அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று, அவனது கடிதங்களை செளரதியே எழுதிக் கொடுப்பாள். காரணம் சொல்வது, அவளது கையெழுத்து முத்து முத்தாக அழகாக இருப்பதால், அவன் அம்மாவுக்குப் படிப்பதற்கு எளிதாக இருக்குமாம்.

“நீ சின்ன வயதில் கையெழுத்துப் பயிற்சிக்கு டிமிக்கிக் கொடுத்தாய்தானே? அதன் விளைவுதான் உன் கோழிக் கிறுக்கல். பாவம்! அதற்காக உன் அம்மாவுக்கா தண்டனை? அவர்கள் கஷ்டப்படாமல் படிக்கட்டுமே என்று அவனது கடிதங்களை எழுதிக் கொடுக்கத் தொடங்கினாள். தாயாரும் எழுத்து அழகாக இருந்ததால்எளிதாகப் படிக்க முடிந்தது என்று பதில் அனுப்பவும், அவள் எழுதிக் கொடுப்பதே பழக்கமாகிப் போயிற்று.

கூடவே பையெழுத்துப் பயிற்சியும் செய்ய வைப்பாள்.

எழுதும்போது, அதிகம் வருத்தப்பட விடாமல் பார்த்துக் கொள்வாள். இப்படிச் செய்தோமே என்ற கழிவிரக்கம் ஓரளவு தேவைதான். ஆனால், அதிலேயே மூழ்கிப் போவதும் நல்லதில்லை. எனவே, “அதெல்லாம்தான் முன்னாலேயே எழுதியாயிற்றே, தமிழ்! ஒவ்வொரு கடிதத்திலும் அதையே எழுதினால், ரொம்பவும் போரடிக்கிற கதையைப் படிக்காமலே பக்கம் புரட்டுவதைப் போல, உன்

கடிதத்தையும், படித்துப் பாராமலே உன் அம்மா அதை அடுப்பெரிக்கப் போட்டுவிடப் போகிறார்கள். . . புரிகிறதா?”

கிளுக்கிச் சிரித்தான் தமிழ்ச் செல்வன். “புரியுதுக்கா. ஆனாக்க என் அம்மா அவுக கையிலே கெடந்த கடைசிக் காப்பை வித்துதான் என்னைய இங்கே கூட்டி வந்தாக. அதை மறக்க முடியுங்களா?” என்று காரணமும் சொன்னான்.

“மறக்கவும் கூடாது. ஆனால் அதற்குப் பிரதி செய்வது, கிளிப்பிள்ளை போல அது ஒன்றையே சொல்லிக் கொண்டிருப்பது அல்ல. அம்மாவின் தியாகம் வீணாகி விடாமல், அவர்கள் மனம் விரும்பும் பிள்ளையாக வாழ்ந்து காட்டுவதுதான். திரும்பிப் போய் என்னென்ன செய்யலாம் என்று யோசித்து, அதை எழுதினால், அம்மாவுக்கு மகிழ்ச்சியாக இருக்கும் அல்லவா?” என்று யோசனை சொன்னாள் சௌரதி.

“ஆமாங்கா. ஆமாங்கா. அதைத்தான் செய்ய வேணும். எங்களுக்கு நிலபுலம் கொஞ்சம் இருக்குது. அதிலே வேலை செய்யலாம். ஆனால் பழக்கம் இல்லாததாலே வயக்காட்டிலே வுளுந்து கிளுந்து போடப் படாது. . .” என்று உரக்க யோசித்தான் தமிழ்.

புரியாதவள் போல, “ஏன் தமிழ், ஏன் உளுந்து போடப் படாது. அந்த வயலிலே உளுந்து விளையாதா?” என்று கண்களை விரித்துக் கேட்டாள் அவள்.

“ஆங் . .” என்று ஒரு கணம் யோசித்த தமிழ்ச்செல்வன் விழுந்து விழுந்து சிரிக்கலானான். “ஐ, நல்ல ஜோக்குக்கா. நானு கீழ விளுந்திரக் கூடாதுன்னா, நீங்க உளுந்தைக் கொணாந்திட்டீகளே! “ என்று மேலும் சிரித்தான். “அக்கா, இதையும் எளுதோணுமக்கா. அம்மா சந்தோசப் படுவாக.” என்றான்.

“ம். எழுதலாமே! எழுதுவோமா?” என்று மறுபடியும் பேனாவைக் காகிதத்தில் சரியாக வைத்து அவள் எழுதத் தொடங்கும்போது, தமிழ்ச்செல்வன் அவசரமாக எழுந்து நின்றான். “அக்கா, பெரிய டாக்டரு.” என்று தணிந்த குரலில் முணுமுணுத்தபடி.

அந்தக் குடிலின் பக்கவாட்டிலிருந்து, தலைமை மருத்துவர் கூட ஒருவரோடு வருவதைக் கண்டதும், சௌரதியும் எழுந்து வணக்கம் தெரிவித்தாள்.

“என்னம்மா, தமிழ் வீட்டுக்குக் கடிதமா? இதே போலப் போனால், சீக்கிரமே வீட்டுக்கு வந்துவிடுவான் என்று, நான் சொன்னதாக எழுது. .

.ஏன், அதைத் தமிழே எழுதட்டுமே! அவன் தாயாருக்கு இன்னும் அதிக ஆனந்தமாக இருக்கும்!" என்றவரின் விழிகள் ஒரு கணம் அவளை ஆழமாக நோக்கின.

பணிவாக இமைகளை மூடித் திறந்ததோடு "சரி டாக்டர் சார்." என்று ஒப்பியவளுக்கு, ஏதோ எக்ஸ்ரே கதிர் அவளை ஊடுருவியது போல ஓர் உணர்வு!

பெரியவரோடு வந்தவனின் பார்வையா? ஒருவேளை இவன்தான் பெரியவர் சொன்ன மனிதரோ? ஆனால் . . .தோற்றம் பொருந்தவில்லையே!

அவனை ஏறிட்டு நேரடியாகப் பார்க்க மனமற்று அவள் நிற்க, "வேலையைச் சீக்கிரமாக முடித்துக்கொண்டு அலுவகம் வாம்மா." என்றுவிட்டு டாக்டர் நடக்கலானார். மற்றவனும் உடன் சென்றான்.

இருவரும் அலுவலகம் பக்கமாகவே திரும்புவதைக் கண்டு, "அக்கா, நீ வேணுமானால் உடனே போகிறாயா? கடுதாசை மணி அண்ணன் எழுதட்டும்." என்றான் தமிழ்ச் செல்வன் சௌரதியிடம்.

அவளுக்கும் அதே எண்ணம்தான். பெரியவர் சீக்கிரம் வேலையை முடித்துவிட்டு வரச் சொன்னால் அவசரம் என்றுதான் பொருள். தமிழ்ச் செல்வனின் கடிதத்தையோ, வேகமாக முடிக்க முடியாது.

ஆனால், அவனே அதை உணர்ந்து சொல்வது என்றால், தமிழ் வீடு திரும்பும் நாள் விரைவிலேயே வந்துவிடும்.

சக ஊழியர் மணிவண்ணனும் சமயத்தில் வந்து சேரவே, மகிழ்ச்சியோடு கடித விவரம் சொல்லி ஒப்படைத்துவிட்டு அலுவலக அறையை நாடிச் சென்றாள் சௌரதி.

தலைமை மருத்துவரே மணிவண்ணனை அனுப்பியிருக்கிறார் என்பது, அவ்வளவு விரைவில் அவள் வந்தபோதும் வியப்புக் காட்டாமல் உட்காரச் சொன்ன விதத்தில், சௌரதிக்குப் புரிந்தது.

அவ்வளவு திறமை இருப்பதால்தான், இந்த மையத்தைத் தொடங்கி சிறப்பாக நடத்த முடிகிறது என்று உள்ளூர எண்ணியவளுக்கு இன்னொன்றும் தோன்றியது.

மாசிலாமணி சாரின் முடிவுகள் எதிலுமே சரியாகவும் இருக்கும்! கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றலாம். பெரிய எஸ்டேட் உரிமையாளர்! அந்த மனிதரே, டாக்டரின் தேர்வுதான் சரியென்று வரவில்லையா?

உள்ளூர ரொம்ப ஆறுதலாக இருந்தது அவளுக்கு. பெரியவர் கூறுவது போலத்தான் நடக்க வேண்டும்.

தங்கை வாழ்வு நல்லபடியாக நடக்கும்.

மனதில் அமைதியோடு, பெரியவரின் சொற்களுக்காக, சௌரதி காத்திருந்தாள்.

ஆனால், இருவருக்கும் அறிமுகம் செய்து வைத்த தலைமை மருத்துவர், அவளுக்கு முதல் குழப்பத்தைத் தந்தார்.

சற்று முன் அவரோடு கூட வந்து, இப்போது அலுவல் அறையிலும் இருந்த மனிதன்தான், அந்த எஸ்டேட் உரிமையாளர். அதாவது, அடுத்த ஓரிரு மாதங்கள், அவனிடம்தான் அவள் பணி புரிய வேண்டும்.

ஒரு நடுத்தர வயதுக்காரர், அவருடைய மகன் அல்லது அது போன்ற நெருங்கிய உறவுக்காக இந்த ஏற்பாடு செய்கிறார் என்பது போல, சௌரதி மனதில் லேசாகக் கற்பனை செய்திருந்தாள். ஆனால், இவனே முப்பதை ஒட்டியவனாக இருக்கையில், பாதிப்புக்கு ஆளானது யார்?

தம்பி? தொழில் இறுக்கம் என்றால் . .ஒருவேளை தந்தையோ?

ஆனால் சௌரதிக்கு யோசிக்கப் பிடிக்கவில்லை. எதுவானாலும் இப்போது தானாகத் தெரியப் போகிறது. அதற்குள், சற்றும் அறியாத விஷயத்தைப் பற்றி மண்டையைக் குழப்புவானேன்?

“பேசிக் கொண்டிருங்கள். இதோ வந்துவிடுகிறேன்.” என்று செல்ஃபோனைக் கையில் எடுத்தபடி, பெரியவர் வெளியே சென்றார்.

அவனது நேர்காணலுக்கு வாய்ப்பளித்து வெளியே போகிறார்.

இவன் என்ன கேட்கப் போகிறான்? அந்த எக்ஸ்ரே பார்வையைப் போலப் பேச்சிலும் கூர்மை இருக்குமா?

அவன் என்ன கேட்டாலும், பணி பற்றி அவளுக்குப் பிரச்சினை இல்லை. ஆனால் எப்படியும் ப்ரீதிக்காக, அவளுக்கு இந்த வேலை தேவை!

பாதிக்கப்பட்டவர் யார், என்ன என்று கூறவும் இல்லை. நீ எப்படிச் செய்வாய், என்னென்ன செய்வாய் என்று அவன் கேட்கவும் இல்லை. மாறாக, “தமிழ் என்றாரே, அந்த இளைஞன் இங்கே வந்து நாளாயிற்றா? இப்போது இயல்பு நிலைக்குத் திரும்பி விட்டானா?” என்று வேறு விசாரித்தான்.

வியப்புடன் அவனைப் பார்த்தாள், சௌரதி.

இது பற்றி ஒன்றுமே தெரியாதவன் என்றாலும் பரவாயில்லை. இவன் குடும்பத்திலேயே முக்கால் குணமானவன் ஒருவன் இருக்கிறான். விதிமுறைகள் எல்லா இடங்களிலும் ஒன்று போலத்தானே இருக்கும்? இவனும் அறிந்திருப்பான்தானே? வருவோர் போவோரிடமெல்லாம், இங்கு சிகிச்சை பெற வருகிறவர்களைப் பற்றிச் சொல்ல முடியாது., சொல்லக் கூடாது என்று தெரியாதா?

அவள் பேசாமல் இருக்கவும், "நான் ஒரு கேள்வி கேட்டேன். " என்றான் அவன் குரலில் சிறு அழுத்தத்துடன்.

"கேட்கக் கூடாத கேள்வி." என்றாள் அவள் அமைதியான குரலில்.

"நீ என்னிடம் பணி புரியப் போகிறாய். நான் கேட்கும் ஒரு சாதாரண விஷயத்தை என்னிடம் சொல்வதில் என்ன பிரச்சினை?"

"சாதாரணம் என்று எப்படிச் சொல்லுகிறீர்கள்? ரகசியக் காப்புப் பிரமாணம் என்று பெரிதாகச் செய்வதில்லை என்றாலும், மருத்துவமனையாகட்டும் இது போன்ற மறுவாழ்வு மையங்களாகட்டும், நோயாளிகளைப் பற்றிய விவரங்களை வெளியிடுவது, நம்பிக்கைத் துரோகம் ஆகும். உங்களிடம் வேலை செய்யப் போவதோ, செய்வதோ, அந்த நிலையை எந்த விதத்திலும் மாற்றாது." என்றாள் அவள் அமைதியாகவே.

"உன் பதிலைப் பொறுத்துதான் உன் வேலை அமையக் கூடும் என்றால்?"

மறுபடியும் எக்ஸ்ரே பார்வை அவளைத் துளைப்பது போல, சௌரதி உணர்ந்தாள்.

நம் இதிகாசங்களில் தருமசங்கடமான சூழ்நிலைகளை ஏற்படுத்தி, அந்தப் பிரச்சினைகளை நல்லவர்கள் எப்படிக் கையாள்கிறார்கள் என்று எடுத்துச் சொல்வார்கள். சாதாரண மனிதர்களான நாம், அதிலே பாடம் கற்றுக்கொள்ள வேண்டுமாம்.

"நியாய அநியாயங்கள் சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி மாறுவதில்லை." என்றபோது, அவளது குரலில் அழுத்தம் மிகுந்திருந்தது.

"அவனுக்குப் பாதிப்பு இராது என்கிறபோதுமா?"

"பாதிப்பு இருக்கும், இருக்காது என்று யார் முடிவு செய்வது? எப்படியும், நான் பணியில் சேரும்போது ஒத்துக்கொண்ட விதியை மீற முடியாது. எதற்காகவும்." என்றாள் சௌரதி தெளிவாக.

ஊதியம் கொடுக்கக் கூடியவனின் விருப்பத்தை நேரடியாக

மறுத்தாயிற்று. அது தவிர வேறு வழியில்லை. இது வளைந்து கொடுக்க முடியாத விஷயம். பலனாகத் தொடங்கு முன்னரே வேலை போய்விட்டது!

இனிப் பெரியவரிடம் வீட்டு நிலையைச் சொல்லி, தூரத்தில் வேறு ஏதாவது மையத்தில் வேலைக்கு ஏற்பாடு செய்து தருமாறு கேட்டுக் கொள்ள வேண்டும். அவரது காலில் விழுந்தாலும் தப்பில்லை!

அவளது ப்ளான் பியே அதுதானே? ஒரு வேளை . . என்று யோசித்த மாற்று வழி இனி அதுதான் கதி!

கலக்கத்துடன் அவள் வேறு வழி யோசிக்கும்போதே, தலைமை மருத்துவர் உள்ளே வந்தார்.

“என்ன, பேசினீர்களா?” என்று வினவினார்.

அடுத்து என்ன முடிவு செய்தீர்கள் என்று கேட்பார். என்ன பதில் செல்வது? எதிர்மறையான முடிவை, அதை எடுத்திருக்கும் அவனே, அதை எடுத்துரைக்கட்டுமே!

சௌரதி மௌனம் காக்க, அவளது பதிலை எதிர்பாராமலே அவன் பேசினான். “ம்ம். பேசிவிட்டோம். ஊதிய விவரம் நீங்கள் சொல்லியிருப்பீர்கள். பதினைந்து நாட்களில் தம்பி வருவதாக இருப்பதால், அப்போது அங்கே இருந்தாக வேண்டும். அதற்கு ஏற்றபடி பயணத்தைத் திட்டமிடச் சொல்லுங்கள். பயணச் செலவுகளை என் நிறுவனம் கொடுக்கும். “ என்றவன் ஒரு கார்டை எடுத்து, அவள் புறமாக வைத்தான்.

“என்னுடைய “நந்தன்” நிறுவனத்தின் எண். அங்கே தொடர்பு கொண்டு, பேட்ரிக் என்று கேட்டு, உன் பெயர் சொன்னால், தேவையான பயண ஏற்பாடுகளை அவர் செய்து கொடுப்பார். ஆனால் . . “ என்று சௌரதியை மீண்டும் ஒரு தரம் கூர்ந்து நோக்கினான். “முடிவில் உறுதியாக இருக்க வேண்டும். இடையில் மாற்றுவது முடியாது. உன் முடிவை நாளைக் காலை எட்டு மணிக்குள் தெரிவிக்க வேண்டும். “ என்று கூறி, அவனது பேச்சை முடித்தான்.

சௌரதி, மாசிலாமணியைப் பார்க்க, அவரும் “இனி நீ போம்மா. இது பற்றி நன்கு யோசி. அப்படியே வேலையையும் செய். மாலையில் வீடு திரும்புமுன் என்னை வந்து பார்த்துவிட்டுப் போ.” என்று அனுப்பினார்.

அவள் சென்றதும், எதிரே அமர்ந்திருந்தவனின் முகத்தில் யோசனையைப் பார்த்துவிட்டு, “என்னப்பா, பேச்சு திருப்திகரமாக

இல்லையோ?” என்று கேட்டார்.

“அது திருப்தியாக இருந்ததால்தான் அங்கே வரச் சொன்னேன். வேலையிலும் குறை கூற இடமிராது என்று நீங்கள் சொன்னீர்கள். ஆனால், அவள் வெளிப்படையாக இல்லை. ஏதோ ஒளிவு மறைவு . . ஏதோ உள்ளே இருக்கிறது.” என்றான் அவன்.

“மறைவு . . இருக்கலாம். ஆனால், அதில் தப்பு இராது. சுயகௌரவம் அதிகம் உள்ள பெண். சமீபத்தில்தான் தாயார் தவறிப் போனார்கள். அந்தத் துக்கத்தை வெளிக் காட்டுவதில்லை. பிறப்பைப் போல இறப்பும் இயற்கையைச் சார்ந்தது., அதற்காக சலுகை பெறுவது தப்பு என்று நினைக்கக் கூடியவள். அந்த அளவுக்கு நியாயம் பார்க்கிறவள். அதுதான், உனக்குத் தவறாகத் தோன்றிருக்கக் கூடும்.” என்றார் மாசிலாமணி. “மற்றபடி சௌரதியின் உண்மைத் தன்மைக்கும் வேலைக்கும் நான் உத்திரவாதம், நந்தா.” என்றார். உறுதியான குரலில்.

“நான் பார்த்தவரையிலும்கூட, நீங்கள் சொல்வது சரியே. பெரிய தொகையை ஊதியமாகத் தரக்கூடியவன் என்று தெரிந்த பிறகும், அவள் கோட்பாடுகளை விடக் காணோம். ஆனால் . .உள்ளூர ஏதேனும் ரகசியத் திட்டம் இருக்குமோ என்ற சந்தேகம். அப்படியே இருந்தாலும் அங்கே ஒன்றும் நடக்காதுதான். ஆனாலும், உங்கள் உத்திரவாதம் நிம்மதியாக இருக்கிறது. கிளம்பச் சொல்லுங்கள், அங்கிள். “ என்றான் நந்தன் நிறுவனத்துடைய உரிமையாளன் வசுநந்தன்.

“ரகு எப்படி இருக்கிறானாம்? பதினைந்து நாட்களில் அவன் வருவது நிச்சயம்தானே?” என்று வினவினார் மாசிலாமணி.

“அப்படித்தான் அப்பா சொன்னார். இங்கே சிறு வயதில் வளர்ந்த சூழல் இன்னும் விரைவாக இயல்புக்குக் கொண்டு வரும் என்றார்களாம்.” என்ற இளைஞனின் முகத்தில் சிறு கவலை தெரிந்தது.

“நிச்சயமாக நன்றாகிவிடும். அதுவும் சௌரதி முழுப் பொறுப்பெடுக்கும்போது, நூறு சதவீத வெற்றி உறுதி.” என்று அவர் கூறவும், அவன் முகம் மலர்ந்தது.

“அந்தப் பெண் மேல் ரொம்ப நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள்!” என்றான் இலகுக் குரலில்.

“அதுவும் நூறு சதவீதம்தான்.” என்று நகைத்தார் பெரியவர்.

ஆனால், இந்தப் பயணம் பற்றி சௌரதி சொன்னபோது, அந்த வீட்டில் ஒரு யுத்த காண்டமே நடந்தது.

அத்தியாயம் -5

இந்த இட மாற்றத்தைத் தங்கை எளிதாக ஒப்புவாள் என்று சௌரதியும் நினைக்கவில்லை. ஏனெனில் படிப்பே வேண்டாம் என்கிற அளவுக்கு அவளுக்குச் சொல்புத்தி ஏறியிருந்ததே!

ஆனால், அழகான இயற்கைக் காட்சிகள் நிறைந்த மலைச்சாரல், இங்குள்ள வெய்யிலும் வெக்கையும், கூடவே தூசியும் கிருமிகளும் இராத சுத்தமான காற்று எல்லாம் எண்ணிப் பார்க்கும்போது, ரசிகையான ப்ரீதியின் எதிர்ப்பு தானாக அடங்கிவிடும் என்று நம்பினாள்.

கூடவே, அவளது எதிர்காலக் கல்விக்குத் தேவையான பணம்!

எல்லாம் யோசிக்கையில், ஓரளவு ஆசையுடனேயே தங்கை கிளம்புவாள் என்று கூட அவள் எதிர்பார்த்தாள் எனலாம்.

ஆனால் ப்ரீதியின் முக்கியக் குற்றச்சாட்டே, தங்கையின் எதிர்காலம் பற்றி தமக்கைக்கு அக்கறை இல்லை என்பதாக இருந்தது.

அப்படி இருந்திருந்தால், இவ்வளவு அருமையான கலையைக் கற்றுக் கொண்டிருக்கும்போது, அதுவும் மிகவும் குறைந்த செலவில் கற்றுக் கொண்டிருக்கும்போது, அதை இடையில் நிறுத்திக் கெடுத்து, வேற்று இடத்துக்கு அழைத்துச் செல்ல நினைப்பாளா என்று அதட்டிக் கேட்டாள்.

குறைந்த செலவிலா என்று இருந்தது சௌரதிக்கு. வண்ணங்கள், படம் வரைவதற்கான காகிதங்கள், தூரிகைகள் . . .பென்சில்கள் கூடவா இந்த விலை விற்கும் என்று பலமுறை பெரியவள் நினைத்திருக்கிறாள்.

அத்தோடு, எல்லாமே எத்தனை? ப்ரீதியின் ஆர்வத்தோடு, சகோதரிகளுக்குள் இருக்கும் உரசலையும் பயன்படுத்தி, பரந்தாமன் தனக்கும் சேர்த்து வாங்கிக் கொள்கிறார் என்பது சௌரதியின் ஐயம். ஆனால் இதைச் சின்னவளின் காது கேட்கச் சொல்லிவிட்டு, அந்த வீட்டில் அமைதியாக வாழ முடியாது என்றே பெரியவள் பொறுமை காத்தாள்.

இப்போதும் அதே நிலைதானே?

அவள் சும்மா இருந்தபோதும், ப்ரீதி விடவில்லை.

அடுத்து, தங்கையின் கலைத் திறமையில் மூத்தவளுக்குப் பொறாமை என்று தொடங்கினாள். பேரும் புகழும், கூடவே கொஞ்ச

காலத்தில் பெரும் பணமும் சின்னவள் பெறப் போவது அக்காவுக்குப் பொறுக்கவில்லையாம். அதனால் வயிற்றெரிச்சல் தாங்காமல், அவளது கலைப் பயிற்சியை இடையில் கெடுக்கிறாளாம்.

அப்படி இல்லை., இது அந்த ஓவியர் பரந்தாமனின் ஆதிக்கம் வலுப் பெறுமுன் விலகி விடுவதற்காக என்று உண்மையைச் சொன்னால் அந்த அறியாப் பெண்ணுக்கு இன்னமும் வெறி பிடித்துவிடும்.

எனவே, இது வேலையில் இடமாற்றம். மறுக்க முடியாது. வீட்டையும் காலி பண்ணச் சொல்வதால், மாற்றத்தை ஏற்று,ச் செல்வது தவிர வேறு வழியில்லை என்று தணிவாகவே கூறிய சௌரதி, அதிலேயே உறுதியாக நின்றாள்.

வீட்டைக் காலி செய்வது என்றால், தங்குமிடம் இருக்காது! இது, ப்ரீதிக்குப் பெரும் அதிர்ச்சியாக இருந்தது. ஆனால், வீட்டுக்கார அம்மா ஜாடைமாடையாக ஓரிரு தரம் சொன்னதை அவளே கேட்டிருக்கிறாள்.

அத்தோடு, அக்காவோடு இவ்வளவு சண்டை போட்டுவிட்டு, “நீ மட்டுமாய் எங்கே வேண்டுமானால் போய்க்கொள், ஆனால், எனக்குச் சாப்பாடு மற்ற செலவுக்குப் பணம் அனுப்பு” என்று தமக்கையிடம் கேட்கவும், அவளது தன் மானம் இடம் கொடுக்கவில்லை.

எனவே, வேறு வழியின்றிக் கூடப் பிறந்தவளோடு, “உம்”மென்று முகத்தை அரை மீட்டர் அளவுக்கு நீட்டி வைத்துக்கொண்டு அவளும் கிளம்பினாள்.

பரந்தாமன் தன்னால் ஆன மட்டும் தடுத்துப் பார்த்தார்.

ஆனால், இதற்கு மேல் இங்கே பணம் பொருள் எதுவும் பெயராது, உள்ளே வந்து உட்காரவும் முடியாது என்று புரியவும், சத்தமின்றி ஒதுங்கிவிட்டார்.

வரைவதற்கான தனிக் காகிதங்கள் அடங்கிய “கான்சன் ஷிட் பாட்”. அக்ரெலிக் வண்ணங்கள், வாட்டர் கலர்கள், ஆயில் பெயின்ட்கள், பல அளவில் பிரஷ்கள், ஸ்டான்டு, இன்னும் பல ஸ்கெட்ச் பாட் என்று, இது போலத் தங்கை கேட்டதெல்லாம் செலவுக் கணக்கே பாராமல், சௌரதி வாங்கிக் கொடுத்தபின்னும் வேண்டா வெறுப்பாகவேதான் ப்ரீதி கிளம்பினாள். வேறு வழி காணாத வெறுப்பு!

அந்த வசுநந்தன் குறிப்பிட்ட பேட்ரிக், பயண ஏற்பாடுகளைப் பக்காவாகச் செய்து கொடுத்தான்.

மாசிலாமணி சார் சொன்னதாலோ என்னவோ, வெறும் பயணம் மட்டுமின்றி, அந்த வீட்டைக் காலி செய்வதற்கும் வேண்டியது செய்தான். வேலைக் காலம் முடிந்து திரும்பி வரும்போது பயன் படுத்தத் தேவையான பொருட்களைத் தூசி புகாமல் கட்டி, மருத்துவரின் ஆலோசனைப்படி அவரது இருப்பிடத்திலேயே ஒதுக்கமாக ஓரிடத்தில் அடுக்கி வைத்தான். பெற்றோரின் உடைமைகள், மற்றும் வேண்டாத பொருட்களைப் பெண்களின் விருப்பப்படி நல்ல தொண்டு நிறுவனங்களில் கொண்டு சேர்த்தான்.

அவனுடைய முதலாளி . . இப்போது சௌரதிக்கும் படியளக்கப் போகிறவனும் அவன்தானே? அந்த வசுநந்தன் வந்து சென்ற பன்னிரண்டாம் நாள், அக்காவும் தங்கையும் மூட்டை முடிச்சுகளோடு ஊட்டி மலைச் சாரலில் இருந்த "நந்தன் எஸ்டேட்"டுக்குப் போய்க் கொண்டிருந்தனர்.

பயண முழுமைக்கும் பேட்ரிக்கும் அவர்கள் கூடவே துணை வந்தான்.

"மலை ரயிலில் செல்வதும் நன்றாக இருக்கும் மிஸ் சௌரதி. ஆனால், இப்போது அடிக்கடி பழுதாவதால், கார்ப் பயணம்தான் நிம்மதி! அத்தோடு சாருடைய எஸ்டேட்டும் முக்கியப் பாதையில் இருந்து பிரிந்து வெகு தூரம் உள்ளே இருக்கிறது." என்று, தேவையான விவரங்களைச் சொன்னான்.

"அம்மா இருந்திருந்தால், இப்படி உன் விருப்பம் போல, எனக்குப் பிடிக்காத இடத்துக்கெல்லாம் என்னை இழுத்துப் போக முடியுமா?" என்று அவ்வப்போது தமக்கையிடம் ப்ரீதி புலம்பிக் கொண்டேதான் இருந்தாள்.

அது போன்ற தருணங்களில், பேட்ரிக் காது கேளாதவன் போல முன்னே பார்த்தபடி உட்கார்ந்திருப்பான்.

கலைகளில் ஈடுபாடு கொண்டவர்களால் அழகை ரசிக்காமல் இருக்க இயலாது. அழகை ரசிக்கும்போது, முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிருக்கவும் முடியாது.

மேட்டுப்பாளையத்திலிருந்து மலையில் ஏற ஏறப் ப்ரீதியின் முகம் இயல்புக்கு மாறலாயிற்று.

"அக்கா, அதோ பார், இலைகள் எல்லாமே ஆரஞ்சு நிறமாய் அங்கே ஒரு மரம்! அதோ அதோ, மலை மேல் வெள்ளியாகக் கோடு மாதிரி . . .அங்கங்கே பாறைக்குள் வெள்ளியேதான் படிவங்களாக

இருக்கிறதா?” என்று அதிசயித்தாள்.

“இல்லைம்மா. அங்கங்கே தண்ணீர் கசிவது, வெளிச்சத்தில் வெள்ளி போலத் தெரியும். எஸ்டேட்டிலே கூட, இது போல நிறைய இடம் பார்ப்பதற்கு ரொம்ப அழகாக இருக்கும்.” என்றான் பேட்ரிக்.

“இவை எல்லாவற்றையுமே நான் சித்திரங்களாக வரைந்துவிடுவேனாக்கும்.” என்றாள் ப்ரீதி பெருமையாக.

செல்ஃபோனில் சில ஃபோட்டோக்கள் எடுக்க, சௌரதிக்கு ஆசையாக இருந்தது.

ஆனால், எஸ்டேட்டில் “டவர்” கிடைக்காது என்பதோடு, அங்கிருந்து வெளியே பேசக் கூடாது என்று சொல்லி, இருவரின் செல்ஃபோன்களையும் தரச் சொன்னார்கள்.

“சும்மாக் கொடும்மா. சும்மா ஒரு முன்னெச்சரிக்கை போலத்தான். அத்தோடு, உன் தங்கையும் கொஞ்சம் படபடப்புக்காரியாகத் தெரிகிறாள். சின்னப் பெண்தானே? தப்புத் தவறாக ஏதேனும் செய்துவிடக் கூடாது, பார்! வேலை முடிந்து திரும்பி வரும்போது திருப்பித் தந்து விடுவார்கள். அல்லது, என் இடத்தில் இருக்கும் உன் பொருட்களோடு சேர்த்து வைத்துவிடலாம். “ என்று மாசிலாமணி சாரும் கூறவே, அரை மனதாக இருவரும் செல்லை விட்டுக் கொடுக்கும்படி ஆயிற்று.

செல்ஃபோன் இருந்தும் பயன்படுத்த முடியாமல் போவது வேறு விஷயம். ஆனால், இன்றைய நிலையில், கையில் செல்ஃபோன் இல்லாததே, அபலைகளாக எங்கோ மாட்டிக்கொண்டது போன்ற உணர்வை சௌரதிக்கு ஏற்படுத்தியது.

எஸ்டேட்டில் மோசமாக எதுவும் நேராது என்பதற்கு, மாசிலாமணி சாரின் உத்திரவாதம் இருந்தது. அத்தோடு அவளும் ஒன்றும் கையால் ஆகாதவள் அல்ல. ஆனாலும், முன்பின் அறியாத இடத்தில், தெரியாத மனிதர்களோடு தனியாக இருக்கப் போகிறார்கள்.

எப்படியும், ஓவியனின் போதனையிலிருந்து தங்கையை மீட்கும் வழி இது ஒன்றே எனும்போது, மற்றது எதுவானாலும் சமாளிக்கலாம் என்பது சௌரதிக்கு. ஏனெனில், தங்கையே எதிர்க் கட்சியாக இருக்க மாட்டாளே!

உயரமான கேட்! சுற்று மதில் பசிய ஏதோ அடர்ந்த தாவரமாக இருந்தது. அதனுள்ளே உறுதியாக கம்பிப் பின்னலும் சில இடங்களில் கண்ணில் பட்டது.

மதில் தாண்டி உள்ளேயும் வெகு தூரம் கார் சென்றது. அங்கங்கே சில கட்டிடங்களைக் கடந்து சென்று ஒரு சிறு வீட்டின் முன் கார் நின்றது.

இறங்கிச் சுற்றிலும் பார்த்த ப்ரீதி, முகம் மலர "வாவ்!" என்றாள்.

முதல் வெற்றி கிட்டிவிட்டதாக சௌரதி எண்ணினாள்.

தங்கையைப் போல வாய்விட்டு வெளிப்படுத்தாவிட்டாலும், கண்ணில் பட்ட காட்சி, சௌரதிக்கும் மிக அழகாகவே தோன்றியது.

முக்கியமாகக் கண்ணுக்கெட்டிய தூரம் வரை தெரிந்த பசுமை.

அருகில் கொஞ்ச தூரத்துக்குப் பல் வேறு விதமான மலர்ச் செடிகள் பூத்துக் குலுங்கியபோதும், தூரப் போகப் போக ஏதோ ஒரு விதமான ஒழுங்கு வரிசைப் படி, தாவரங்கள் நிற்பது தெரிந்தது.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை, ஏதோ பயிர் செய்யப்பட்டிருக்கிறது! மிகப் பெரிய அளவில்!

மலைச்சாரல் என்றதும், சரிவான பூமியை மனதுள் உருவகப் படுத்தி இருந்த சௌரதிக்குச் சுற்றிலும் இருந்த பரந்த சமதரை வியப்பூட்டியது. மலை சார்ந்த நிலத்தைப் பண்படுத்திப் பயிரிட்டிருக்கிறார்கள்.

அரவம் கேட்டுத் திரும்பிப் பார்த்தால், வயதாக ஜோடி ஒன்று, அங்கே நின்றார்கள். பெயர் மாதையன், லெச்சுமி என்றார்கள். ஐம்பது ஆண்டுகளுக்கும் அதிகமாக, இங்கே பணி புரிவதாகத் தெரிவித்தார்கள். குளித்து, உணவருந்தி ஓய்வெடுத்தால், மதியம் பெரிய தம்பியைப் பார்க்கப் போகலாம் என்றார்கள்.

"பெரியதம்பி?"

முறுவலை அடக்கிக்கொண்டு, " "பாஸை"த்தான் சொல்லுகிறார்கள். அவருடைய தாத்தா காலத்திலிருந்து இங்கே இருப்பதால், பெரியதம்பி, சின்னத்தம்பி என்று அழைத்துப் பழகிவிட்டார்கள்." என்றான் அங்கே கூட்டி வந்த பேட்ரிக்.

வசுநந்தனை நினைவில் கொண்டு வந்து யோசித்த சௌரதிக்கு, இந்தத் "தம்பி" பொருத்தமற்றுத் தோன்றியது. அவன் யாருக்கும் தம்பியாக அடங்கிப் போகிறவனாகத் தோன்றவில்லை.

ஆனால், அவனைப் பற்றி உறுதியாக எந்த அபிப்பிராயம் கொள்வதும் சரிவராது என்றே அவள் கருதினாள்.

அவன் கேட்ட கேள்விகளைக் கொண்டு வேலை கிடைக்காது

என்று அவள் எண்ணியதற்கு நேர் மாறாக, தங்கையோடு அவள் இங்கே வந்தேவிட்டாளே!

ஆனால், அவனது கேள்விகளின் காரணமே, அவனுடைய தம்பியைப் பற்றிய விவரம் வெளியே போகாமல் பாதுகாப்பாளா என்று அறிவதுதான் என்று, பின்னர் புரிந்துவிட்டது என்றாலும் , அவளது முதல் கருத்து தவறுதானே?

அத்தோடு, அவனைப் பற்றி ஏதோ ஒரு நெருடலும் சௌரதிக்கு இருந்தது.

அவன் முழு மனதோடு தனக்குப் பணி நியமனம் செய்யவில்லையோ என்ற சந்தேகம், உள்ளூர அவளை உறுத்திக்கொண்டே இருந்தது.

மாசிலாமணி சாரின் பலமான சிபாரிசு, அவளை விடச் சிறந்த ஆள் கிடைக்காத நிலை என்ற இரண்டுமாகத்தான் அவளை இங்கே கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது.

அதே போல, அவளுமே பரந்தாமனின் பிரச்சினையால்தானே, அவசரமாகச் சென்னையை விட்டுக் கிளம்பியது? பெரிய டாக்டரின் உத்திரவாதம்தானே அவளுக்குமே தைரியத்தைத் தந்திருப்பது?

இரு பக்கமுமே முழுத் திருப்தி கிடையாது.

ப்ரீதி பற்றியோ, கேட்கவே வேண்டாம்.

ஆனாலும் இந்த முயற்சி வெற்றியாகி, அந்த ரகுநந்தன் நன்றாகக் குணமாக வேண்டும். கூடவே ப்ரீதி தன் அசட்டுத்தனத்தைக் கைவிட்டு, அவளது கலையோடு படிப்பையும் முழு மனதோடு தொடர வேண்டும் என்று கடவுளை வேண்டிக் கொண்டாள் சௌரதி.

மற்ற யார் என்ன மாதிரி நடந்துகொண்டாலும், இவை இரண்டும்தான் முக்கியம்.

அங்குள்ள சூழ்நிலை, நடைமுறை, யார் யார் அங்கே எப்போதும் இருக்கிறவர்கள், அந்தப் "பெரியதம்பி"யின் குடும்பம், குணம் . . .இப்படி அறிவதற்கு நிறைய விஷயங்கள் இருந்தபோதும், அந்தக் கணவன் மனைவியிடம் எதையும் கேட்டறிய சௌரதிக்கு விருப்பம் இல்லை.

முதல் காரணம், பணியாட்களிடம் வீட்டு மனிதர்கள் பற்றிப் பேசுவது நாகரீகம் இல்லை. அத்தோடு, எதெது வசுநந்தனின் காதுகளுக்குப் போகும் என்று என்ன நிச்சயம்? அவள் உளவு பார்ப்பதாக அவன் எண்ணினால், அது வேறு தொல்லை.

ஒரு பணி செய்ய வந்தால், அதை நல்லபடியாகச் செய்து முடித்துவிட்டுப் போய்க்கொண்டே இருப்பது, அவளுக்கு நல்லது!

மதியத்துக்கு மேல், சுமார் நாலு மணியளவில் மாதையனே சௌரதியை அழைத்துப் போனான்.

“சும்மா ஒரு “ஹாய்” சொல்ல வருகிறாயா?” என்று கேட்டதற்கு, ப்ரீதி முடியாது என்றுவிட்டாள்.

அங்கே பணிபுரிய வந்தது, பெரியவள்தானாம். சும்மாக் கண்டவர்களுக்குக் கூழைக் கும்பிடு போட ப்ரீதியால் முடியாதாம். கௌரவமான பெற்றோருக்குப் பிறந்துவிட்டு, அவளால் அது போலத் தரம் இறங்க முடியாதாம்.

இந்தக் கடைசி வாக்கியத்தைப் பரீதி சொல்லாமல் இருந்திருக்கலாம்.

தங்கையை வெறித்து நோக்கியவள் உதடுகளை இறுக மூடிக்கொண்டு, வாயிலில் காத்து நின்ற மாதையனோடு போய்ச் சேர்ந்து சென்றாள்.

சுற்றிலும் பார்த்தபடியே நடந்த சௌரதிக்கு, அந்த இடம் முன்னிலும் வனப்பு வாய்ந்ததாகப் பட்டது.

இதமான குளிர் பிரதேசத்தின் இயல்பான செடி கொடிகளாகத் தோன்றியவை, அப்படி இயல்பான தோற்றத்துடன் நன்கு பராமரிக்கப் படுகிறவை என்று கண்டுகொள்ள முடிந்தது.

அங்கங்கே சற்றுப் பெரிய குடிசைகள் போலத் தோன்றியவை, நட்சத்திர ஹோட்டலின் வசதிகளோடு கூடிய குடில்கள் என்று புரிந்தது.

சுற்றிலும் பார்த்து ரசித்தபடியே சற்றுப் பெரிதாகவும், ஓர் அடுக்கு உயரமாகவும் இருந்த குடிலுக்குள், மாதையன் அவளை அழைத்துச் சென்றான்.

அங்கே பெரியதம்பி மட்டுமின்றி, சின்னத்தம்பியும் சேர்ந்தே இருந்தார்கள்.

பெரியவன் ஸ்கேல் வைத்து அளந்தது போல மில்லி மீட்டர் அளவுக்கு உதடுகளை நீட்டிப் புன்னகை செய்வதாகக் காட்டினான் என்றால், சின்னவன் முடிந்தவரை பற்களைக் காட்டினான்.

அறிமுகம் முடிந்ததும் வாய் நிறையச் சிரித்து, “அங்கிள் சொன்னார், நீங்கள் காட்டுகிற வழியில் கண்ணை மூடிக்கொண்டு நடந்தாலே, என் பிரச்சினைகள் எல்லாம் முழுதாகத் தீர்ந்துவிடுமாம்.

அப்படியே செய்வதாகச் சொல்லி யிருக்கிறேன். செய்யவும் போகிறேன்! நல்லவேளையாகப் பார்க்கவும் அழகாக இருப்பதால் கண்ணைத் திறந்துகொண்டே கூட நடக்கலாம்.” என்றான் குதூகலக் குரலில்.

அதிகமாக உணர்ச்சி வயப்படுகிறவன்! அவனது மூடுகளைக் கொஞ்சம் கட்டுப்படுத்தினாலே நன்றாகி விடுவது நிச்சயம்.!

“நல்லவேளை கடைசி வரியையும் சேர்த்துச் சொன்னீர்கள்! கண்ணை மூடிக்கொண்டு நடந்து கீழே விழுந்து வைத்தால், தூக்குவதற்கு ஆள் கூட்டிப் போக வேண்டுமோ என்று ரொம்பக் கவலைப் பட்டுவிட்டேன்!” என்று அவள் கூறிய பதிலில் ரகுநந்தன் “ஓஹோ” என்று நகைத்தான்.

“பரவாயில்லையே! தோற்றத்துக்குத் தக்கபடி பேச்சும் இருக்கிறதே! “கவுன்சிலிங்” என்றதும் ஒரே புத்தி போதனையாக அறுப்பீர்களோ என்று நான் பயந்திருந்தேன்.” என்றான் புன்னகையோடு.

“தேவைப்பட்டால் அதுவும்தான் நடக்கும்.” என்றாள் அவள் இலகுவாகவே.

“ப்ளீஸ், பயமுறுத்தாதீர்கள்!” என்று கெஞ்சலாகக் கேட்டான் சின்னவன்.

“பின்னே? அதற்காகவே வந்துவிட்டு, சும்மா அழகாகப் போஸ் கொடுத்துக் கொண்டே இருக்க முடியுமா? அத்தோடு, தம்பியின் பார்வைக்கு வேலி இருக்கிறது. வேலி தாண்டினால் அது மோசமான வீழ்ச்சியாகிவிடும்.” என்று ஒரு மாதிரிக் குரலில் எச்சரிப்பது போலக் கூறினான் அவன் அண்ணன்.

எச்சரிக்கை அவளுக்கா?

அது என்ன வேலி?

நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்., அளவு மீறாதே என்கிறானா? அப்படி என்ன அளவு மீறிவிட்டாள்?

பாதிப்புக்கு ஆளானவர்களிடம் அவர்களது இயல்புக்குத் தக்கபடி பழகினால்தானே, அவர்களின் மனதை நெருங்க முடியும்.

இருவருக்கும் இடையே மனதில் நல்லிணக்கம் இல்லாது போனால், வெறும் மேடைப் பேச்சைக் கேட்க அழைத்துப் போனாலே போதுமே. அல்லது, இது பற்றிய உபதேச காசெட்டுகளைப் போட்டு விடலாம். அது போதாது என்றுதானே, இவ்வளவு செலவு பண்ணி

அவளை வரவழைத்திருப்பது?

எதையும் காட்டாதபடி அவனைப் பார்த்தால், அவன் முகத்தில் அமர்த்தல் தெரிந்தது. அவனது பேச்சுக்குப் பணிந்து நடப்பது அவளது கடமை என்கிறானா?

ஆனால், அவளது பணி பற்றி அவனுக்கு என்ன தெரியும்?

ரகுநந்தனின் முகத்தைப் பார்த்தால், அதிலும் இறுக்கம் தெரிந்தது. இந்த இறுக்கம்தானே, அவனது பெரும் எதிரி! கட்டாயம் இவன் அண்ணனிடம் இது பற்றிப் பேசியாக வேண்டும்!

சட்டென முடிவெடுத்து, "உங்களிடம் ஏதேனும் கேட்கத் தேவை இருந்தால், எப்படித் தெரிவிப்பது?" என்று வசுநந்தனை நோக்கிக் கேட்டாள்.

தோளைக் குலுக்கினான் அவன். "அப்படி என்ன தேவை நேரக் கூடும்? உணவு இருப்பிடத்துக்கு ஏற்பாடு செய்தாயிற்றே."

"உண்டு உறங்க மட்டுமா, நாங்கள் இங்கே வந்தோம்" என்ற கேள்வி சௌரதியின் நாவில் துடித்துக்கொண்டு வந்தது. ஆனால் எடுத்த எடுப்பிலேயே போராட அவளுக்குப் பிடிக்கவில்லை.

அத்தோடு, அந்தப் போராட்டம் ரகுநந்தனை எப்படிப் பாதிக்கும் என்றும் சொல்ல முடியாது. அண்ணனது "வேலி"யிலேயே, அவன் ஓய்ந்துவிட்டான்!

லேசான புருவச் சுளிப்புடன் தரையைப் பார்த்தவாறு அமர்ந்திருந்த ரகுநந்தன் புறம் ஒரு தரம் பார்த்துவிட்டு, "எத்தனையோ! முதலாவதாக என் பணி நேரம்? பணியை எப்போது எங்கே தொடங்குவது? சமையலை லட்சுமி செய்தாலும், வீட்டை சுத்தம் செய்ய, துணி துவைக்க பாத்திரம் துலக்க . .இதெல்லாம் யார் செய்வார்கள். . . " என்று அவள் அடுக்கும்போதே, வசுநந்தன் குறுக்கிட்டான்.

"அதுதான் லட்சுமி அங்கேயே இருப்பாளே."

"இருக்கிறாள். ஆனால், ஓர் அறுபது வயதான முதியவளைக் குனிந்து நிமிர்ந்து இந்த வேலைகளை செய்யச் சொல்லிவிட்டுச் சும்மா இருப்பதற்கு, நான் கிராதகி அல்ல. அல்லது, நான் வீட்டோடு இருந்து, இந்த வேலைகளைச் செய்யட்டுமா? எனக்குத் தெரியாத வேலை இல்லை. ஆனால், அப்படிச் செய்வதானால், . .நான் வந்த வேலை நேரப்படி நடக்காது!"

ஜாடையாக மட்டம் தட்டுகிறாளாம்! வயதான லட்சுமியை இந்த

வேலையெல்லாம் செய்யச் சொல்வதற்கு, அவன் மட்டும் என்ன கிராதகனா?

“தனக்கு வேண்டிய உதவியாட்களை வரவழைத்துக் கொள்ளும் உரிமை லட்சுமிக்கு எப்போதும் உண்டு. மற்றதும் லட்சுமியிடம் சொன்னாலே, அவள் யார் மூலமாவது எனக்குச் சொல்லி அனுப்பி விடுவாள். வேறு ஒன்றும் இல்லையானால் . . “ என்று எழுந்தான் அவன்.

இங்கிருந்து போ என்று சொல்லாமல் சொல்லி விரட்டுகிறான்.

இதை, இப்படியே விட முடியாது. அவள் செய்ய வந்த பணிக்கு உரிய மரியாதை கிடைத்தால் ஒழிய, வேலை ஒழுங்காக நடக்காது.

கூடவே எழுந்தாலும், “என் வேலை பற்றியும், உங்களிடம் சற்றுப் பேச வேண்டும்.” என்றாள் சௌரதி.

“இந்த ஊரில் இருக்கும்போது, மாலை ஐந்தரைக்கு மேல் நான் இங்கே இருப்பேன்.” என்றான் அவன் சுருக்கமாக.

“அப்போது வருகிறேன். பை ரகுநந்தன். நாளை சந்திப்போம்.” என்று அவள் கிளம்பவும், “இன்னொன்று . .” என்று அவளை நிறுத்தினான் மூத்தவன். “இருட்டியபின் வெளியே செல்லவேண்டாம். வழி தவறிவிட்டால் கண்டுபிடிப்பது சிரமம், இரவுக் குளிரை இங்கே தாங்குவதும் கடினம்.” என்றான்.

“நன்றி.” என்றதோடு சௌரதி அங்கிருந்து வெளியேறினாள்.

வெளியே சென்றதும் மூச்சிரைப்பது போல சில வேக மூச்சுகளை எடுக்க நேர்ந்தது, அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது.

இந்தப் பணியில் அவள் பரிதாபம், வருத்தம், இரக்கம், கையாலாகாத வேதனை என்று பல விதமான உணர்ச்சிகளை அனுபவித்திருக்கிறாள். ஆனால் இந்தப் படபடப்பு அவளுக்குப் புதிதாகவும் விசித்திரமாகவும் இருந்தது!

கொஞ்சம் எரிச்சலாகவும்.

அத்தியாயம் -6

பாதி நிலாப் போல அரை வட்ட வடிவத்தில் ஆறு குடில்கள் அமைக்கப் பட்டிருந்தன. சுற்றிலுமே அழகான செடி, கொடிகளுடன் பர்ணசாலைகள் போன்று குடில்கள் அமைக்கப் பட்டிருந்தாலும், அவற்றின் முன் புறம் இருந்த அரை வட்டப் பிரதேசம், ஒரு பெரிய பூங்கா பொல, அழகான வண்ண மலர்களுடன் கூடிய பூச்செடிகளால் நிரப்பப் பட்டிருந்தது. அதன் நட்ட நடுவில், பல வண்ணத் தாமரை மலர்களுடன் கூடிய செய்குளம் ஒன்றும் இருந்தது.

யாரோ ரசனை மிக்கவர் திட்டமிட்டுச் செய்தது!

அளவில் சற்றுப் பெரிதாக இருந்த முகப்புக் கட்டிடத்தில்தான் சௌரதி, அந்த வசுநந்தனைச் சந்தித்தது. அலுவலகமாகவும் பயன்படுத்துவான் போலத் தெரிந்தது.

அரை வட்டத்தின் கடைசிக் கட்டிடம், சௌரதி, ப்ரீதிக்குக் கொடுக்கப் பட்டிருந்தது.

எவ்வளவு முடியுமோ, அவ்வளவு தள்ளி இருக்க வைத்தான் போலும் என்று நினைத்துவிட்டு, அப்படி நினைத்ததற்காக, சௌரதி தன்னையே கடிந்துகொண்டாள்.

பெண்கள் சுதந்திரமாக இருக்கட்டும் என்றும் எண்ணியிருக்கலாம்.

உட்புறமாக, அவர்களதற்கு அடுத்த வீட்டில்தான் ரகுநந்தன் இருந்தான்.

சிரித்த முகத்துடன், ஏற்கனவே பக்கத்து வீட்டில் இருந்து, கைகாட்டியிருந்தான் ரகு!

அப்படி அருகிலேயே இருப்பது, நேரம் காலம் பாராமல், ரகுவுடம் பேசிப் பழக வசதியாக இருக்கும்.

அந்த மட்டும் ஆழ்ந்து யோசித்திருக்கிறான் பரவாயில்லை என்று, வசுநந்தனுக்குப் பாஸ் மார்க் போட்டாள் சௌரதி. ஆனால், வெறும் “ஜஸ்ட் பாஸ்!”

மாலையில் வசுநந்நதனின் இடத்தை சௌரதி அடைந்தபோது, அவன் இலகு உடைக்கு மாறி, கையில் ஒரு காஃபிக் கோப்பையுடன் உட்கார்ந்திருந்தான்.

அவள் உள்ளே சென்றதும், காஃபியை அருந்தியபடியே, சுவரோடு

ஒட்டியிருந்த சிறு மேஜையைக் கைகாட்டினான்.

மின்சாரக் கெட்டில், அருகே இன்ஸ்டன்ட் காஃபி, டீ, பால் பவுடர் பாக்கெட்டுகள், சில பிஸ்கட் பாக்கெட்டுகள் எல்லாம் இருந்தன. அவர்களுக்கு அளிக்கப் பட்டிருந்த வீட்டிலும் இதே போல இருந்தன.

“இப்போதுதான் குடித்தேன்.” என்று பானத்தை மறுத்துவிட்டு அவள் அமரவும், அவளை ஆழப் பார்த்தான்.

பெயருக்கேற்றபடி, பார்க்க இனிமையானவளாகத்தான் இருக்கிறாள் என்று அவனுக்குத் தோன்றியது. பழகுவதிலும் அப்படித்தான் என்றார் அங்கிள்.

அதே போல முழு ஈடுபாட்டுடன் வேலை செய்கிறவர்கள் அபூர்வம் என்பது மாசிலாமணி அங்கிள் கொடுத்த சான்றுரை! அதற்கு ஏற்றாற்போலத் தானாகவே பணி பற்றிப் பேச வந்திருக்கிறாள்.

ஆனால், அது மட்டும்தான் காரணமா? பார்க்கலாம்!

காலிக் கப்பை டீபாயில் வைத்துவிட்டு, “வேலை பற்றிப் பேச வேண்டும் என்றாயில்லையா? காலையில் தம்பி எழச் சற்றுத் தாமதம் ஆகும். எட்டு மணிக்கு முன் எழப் பிடிக்காது. அதிலெல்லாம் கட்டாய விதிகள் எதுவும் இராது என்று நினைக்கிறேன் . . அல்லது இருக்கிறதா?” என்று கேட்டான் வசுநந்தன்.

இல்லை என்று தலையசைத்து, “பாதிக்கப்பட்டவர் இறுக்கம் தளர்வதுதான் முக்கியம். இது போன்ற விதிகள் அல்ல என்று டாக்டர் சார் சொல்லுவார். ஆனால், அதற்காகச் சோம்பேறித்தனமாக இருக்க விடவும் மாட்டார். எட்டு மணி . . ரொம்ப மோசமில்லை. பரவாயில்லை.” என்றாள் அவள்.

“விழித்த பிறகு , இப்போதெல்லாம் ரகுவின் பழக்க வழக்கங்கள் சற்று மாறியிருப்பதாக அப்பா சொன்னார். எதெது சரி, தப்பு என்பதை, அது பற்றி இரண்டு ஆண்டு பயிற்சி உள்ள நீதான் முடிவு சொல்ல வேண்டும். முக்கியமாக உன் முடிவு, என் தம்பிக்கு நல்லதாக இருக்க வேண்டும்.” என்று கூறி முடித்தான்.

அந்தக் கடைசி வாக்கியத்துக்கு என்ன அவசியம்? மனதுக்கோ, உடலுக்கோ வைத்தியம் செய்வதன் நோக்கமே, பாதிக்கப்பட்டவரின் நலம்தானே?

அதை எதற்காக, அவளுக்கு நினைவூட்டுவது போலச் சொல்கிறான்? இங்கே வந்திருப்பதே அதற்காக எனும்போது, எப்படி மறப்பாள்? இவனிடம் நேரடியாகக் கேட்க வேண்டியதுதான். இந்த

ஜாடைமாடையாகக் குத்துவதை நிறுத்தியாக வேண்டும்.

கேள்வியாய் அவனை நோக்கி, "என் பணி பற்றி மாசிலாமணி சார் சொன்னதை நீங்கள் நம்பவில்லையா?" என்று கேட்டாள்.

"நம்பியிராவிட்டால், இங்கே வந்திருக்க மாட்டாய். எங்களிடம் அங்கிள் பொய் சொல்ல மாட்டார். எனவே, நீ பணி செய்யும் திறமையில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆனால் . . " என்று முடிக்காமலே நிறுத்தினான் வசுநந்தன்.

"என்ன ஆனால்?" என்று விடாமல் கேட்டாள் சௌரதி.

ஒரு கணம் அமைதியாக இருந்தான் அவன். பிறகு, "இப்போது உனக்கு என்னதான் பிரச்சினை?" என்று அவளிடம் கேட்டான்.

இவன், இன்னதுதான் சொன்னான் என்று நேரடியாகக் குற்றம் சொல்ல முடியாது. செய்கிற வேலையை, இன்னும் அதிகக் கவனத்துடன் செய்யச் சொன்னேன் என்று சமாளித்துவிடலாம். அந்த "வேலி"யைக் கூடத் தம்பிக்காகச் கூறியதாகச் சொல்லி விடக் கூடும்!

ஆனால், அவளுக்கு என்னதான் தேவைகள் இருந்தாலும், தலைக் குனிவோடு குட்டுப்பட்டுக்கொண்டே, முழு ஈடுபாட்டுடன் வேலை செய்ய முடியாது. மிஞ்சிக்கொண்டே போனால், அவளது "பிளான் பி"யை நடை முறைப் படுத்த முயற்சி எடுக்க வேண்டியதுதான்.

யோசித்துவிட்டு, "என் பணியை எப்படிச் செய்வது என்று எனக்குக் கற்றுத் தருகிற மாதிரிப் பேசுகிறீர்களே, அது என் வேலையில் தலையிடுவது ஆகாதா? உங்கள் தொழிலை எப்படிச் செய்வது என்று நான் சொன்னால், உங்களால் ஏற்க முடியுமா? என் முக்கியப் பிரச்சினை அதுதான். என் பணியில் உங்கள் தலையீடு." என்றாள் அவள்.

குற்றச்சாட்டை மறுக்காமல், "பணியை மட்டும் செய்வது நோக்கமானால் என் தலையீடு இராது." என்றான் அவன் சுருக்கமாக.

மறுபடியும் ஒரு குத்து! இல்லை. இதை விட்டுக்கொண்டே இருக்கக் முடியாது. கூடாது!

"நீங்கள் சொல்வது புரியவில்லை. வேறு எதற்காக, நான் இங்கே வந்திருக்கிறேன் என்கிறீர்கள்?" அவள் விடாமல் கேட்டதற்கும், ஒரு தோள்க் குலுக்கலே பதிலாக அமைந்தது.

அவன் தோளைக் குலுக்கவும் சௌரதிக்கு எரிச்சல் வந்தது.

அது என்ன, எதற்கும் தோளைக் குலுக்குவது? வாய் வார்த்தையாகச் சொல்லாமலே நழுவுவதா?

அவளும் இப்படித் தோளைக் குலுக்கினால் என்ன சொல்வான். கவர்ச்சி காட்டிக் கவர்ந்து நழுவ முயற்சிக்கிறாள் என்றுகூடக் கூசாமல் கூறக் கூடும்!

தலையை நிமிர்த்தி, "எதுவானாலும் நேராகச் சொல்லுங்கள், சார். இப்போது உ. . ங்களுக்கு என்ன பிரச்சினை? அதைச் சொல்லுங்கள்!" என்று தளராத பார்வையுடன் வினவினாள்.

அவனது பார்வையும் அவளைக் கூறு போட்டது. "ஓகே. வெளிப்படையாகவே பேசி விடுவோம். ஓரிரு மாதங்களுக்கே சில லட்சங்கள் கிடைக்கும் என்றுதானே, இவ்வளவு தூரம், முன் பின் அறியாத இடத்துக்கு, இரண்டு இளம் பெண்களுமாகத் தனியே கிளம்பி வந்தீர்கள்? இங்கே என்ன காத்திருக்கிறது என்று என்ன நிச்சயமாகத தெரியும்? "

"பணி காத்திருக்கிறது என்பதுதான் என் எண்ணம். டாக்டர் சாரிடம் உள்ள நம்பிக்கையால் எதிர்பார்த்தது. ஆனால் சொல்லுங்கள், நீங்கள் என்ன எண்ணினீர்கள்?"

"என்ன நினைப்பது? இங்கே இருக்கிற யாராவது பணக்காரனைப் பிடிக்கலாம் என்று கூட வந்திருக்கலாமே!"

"ஓ!" என்ற சௌரதி, தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள பல வினாடிகள் எடுத்துக் கொண்டாள். பிறகும், சீற்றத்தை முழுதாக மறைக்க முடியாத குரலில், "பாருங்கள் சார், நீங்களே முடி நரைத்த யாரையேனும், இந்தப் பணிக்குத் தேர்வு செய்திருக்கலாம்! அப்படிப் பண்ணியிருந்தால், இந்தப் பிரச்சினைக்கே இடம் இல்லாமல் போயிருக்கும். இப்போது கூட, அது ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. உங்களால் நம்பத் தகுந்த மாதிரி யாரையேனும் அனுப்பும்படி டாக்டர் சாருக்கு . . ." என்று அவள் சொல்லி வந்தபோது, வசுநந்தன் குறுக்கிட்டான்.

"அதற்குத் தேவையிராது. என் கண்காணிப்பு எப்போதும் இருக்கும் என்பதால் யாராலும். . ." என்று அவன் கூறி வந்தபோது, அவன் பேச்சில் இப்போது அவள் குறுக்கிட்டாள்.

"அதற்குத் தேவையிராது என்பதுதான் நான் சொல்வதே. என் சிகிச்சை முறையில் யார் குறுக்கிடுவதையும் நான் பொறுக்க மாட்டேன். என் பணியில் நம்பிக்கை இல்லை என்றால் மாசிலாமணி சாரிடம் வேறு ஆள் அனுப்பச் சொல்லுங்கள். அல்லது, அவரிடமே மீண்டும் என்னைப் பற்றிய அபிப்பிராயம் கேளுங்கள். இந்தப் பணியில் நான் எப்படிச் செய்கிறவள் என்று தெளிவாகக் கேளுங்கள். தமிழ்ச் செல்வனுக்குக்

கடிதம் எழுதிக் கொடுக்கத் தொடங்கியது என் உத்திதான். ஒவ்வொரு கடிதத்தின்போதும், தமிழ் பழைய நிலைக்கே போவதைக் கவனித்துச் செய்தது. இன்னும் சில பல . . .இல்லை வேண்டாம். அதையெல்லாம் நான் சொல்வதில் அர்த்தமில்லை. எல்லாம் அவரிடமே கேளுங்கள். அதிலும் திருப்தி இல்லை என்றால், அதையும் நேரடியாகச் சொல்லி, எங்களைத் திருப்பி அனுப்பிவிடுங்கள். குத்தல் குறிப்பு எதுவும் வேண்டாம்.

“அத்தோடு, ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விதமான விளக்கம் இருக்கும். இப்போது எங்களுக்கு, முக்கியமாக எனக்கு இல்லாத ஒரு நோக்கத்தை, நீங்கள் கற்பித்துச் சொன்னீர்களே, அதைப் போல உங்களைப் பற்றி, நான் சொல்ல முடியாதா? இந்தப் பணிக்கு வேறு யாருமே கிடைக்காத மாதிரி ஓர் இளம் பெண்ணை நீங்கள் தேர்ந்தெடுத்ததே தப்பான நோக்கத்தில் என்று கூடச் . . .”

“உளற வேண்டாம். அந்த மாதிரித் தப்பான எண்ணம் எதுவுமே எனக்குக் கிடையாது. எங்கள் குடும்பம் பற்றி மாசிலாமணி அங்கிளுக்கு நன்றாகத் தெரியும்.”

“அது வேறு. ஆனால், என் மனதில் தப்பு இல்லாதபோது, உங்கள் பேச்சு எனக்கும் உளறலாகத் தோன்றாதா? ஏனெனில், நானும் சூதாக எதையும் எதிர் நோக்கி இங்கே வரவில்லை. எனக்கு டாக்டர் சாரின் பேச்சில் முழு நம்பிக்கை இருந்ததால் எந்த விதமான சந்தேகமும் இல்லாமல், அவர் சொன்ன பணி செய்யத்தான் வந்தேன். என் தங்கையைக் கூட்டி வந்ததும், அங்கே அவளுக்குத் துணையாக வீட்டில் பெரியவர்கள் யாரும் இல்லாத காரணத்தால்தான். அத்தோடு, நாங்களும், நீங்கள் நினைக்கிற மாதிரிப் பெண்கள் இல்லை! நாங்களும் ஒரு நல்ல குடும்பத்தைச் . . . “ என்றவளுக்கு, மேலே பேச முடியாமல் தொண்டை அடைத்தது.

அகல விழித்து அவள் கண்ணீரை அடக்க முயல்வது அவனுக்கும் புரிந்ததோ?

தொடர்ந்த சிறு மௌனத்தின் பின், “இது போன்ற பேச்சு இனித் தேவை இராது என்று தோன்றுகிறது. போய் ஓய்வெடுத்துவிட்டு, நாளை உன் பணியைத் தொடங்கலாம். வேலை நேரம், முறை பற்றித் தம்பியுடன் கலந்து பேசி முடிவு செய்துகொள்.” என்றான் வசுநந்தன்.

தப்பாக எண்ணிவிட்டேன் என்று வருத்தம் தெரிவிக்காவிட்டாலும், அவன் மறைமுகமாகக் குற்றம் சாட்டும் குரலில் பேசாததே, சௌரதிக்கு ஓரளவு நிம்மதியாக இருந்தது.

ஆனாலும், வசுநந்தன் முழுதாக நம்பவில்லையோ என்ற சந்தேகம் அவளுக்கு அடியோடு மறையவில்லை. எதையும் சந்தேகக் கண்ணோடு பார்ப்பது அவனது இயல்பாக இருக்கலாம். ஆனால் அதை, அவளிடம் வெளிப்படையாகக் காட்டாமல் இருந்தால், அது அவளுக்குப் போதுமானது.

தமக்கை திரும்பி வந்ததைத் தலை தூக்கிக் கூடப் பாராமல், ப்ரீதி எதையோ மும்முரமாக வரைந்து கொண்டிருந்தாள்.

ஒரு வகையில், சௌரதிக்கும் அது நிம்மதியாகவே இருந்தது. சும்மா இருந்து எதையாவது புலம்பாமல், அவளுக்குப் பிடித்த விதமாகப் பொழுது கழிவது நல்லது அல்லவா?

பரந்தாமனை விலக்குவதற்காக அவளைப் பிடிவாதமாகக் கூட்டி வந்தபோதும், நாள் முழுதும் தனியே இருந்து என்ன செய்வாள், போரடிக்குமே, புலம்பித் தள்ளுவாளே என்று உள்ளூர சௌரதிக்குக் கவலைதான்.

முழு நேரமும் வரைவது சாத்தியமல்ல என்றாலும், பிடித்த மாதிரியும் இருக்க முடிவது அவளை நிச்சயமாக சந்தோஷப்படுத்தும்!

மேஜையில் கிடந்த வரி வடிவங்கள், அந்தக் குடில் வடிவில் அமைக்கப் பட்டிருந்த வீடுகளின் முன் புறத்தில், எல்லாக் குடில்களுக்கும் முன் புறத் தோட்டமாக இருந்த அரை வட்ட நந்தவனத்தின் பல்வேறு தோற்றங்களே. நாலைந்து திசையில் நின்று, பார்த்துக் குறித்திருந்தாள்.

நிறைய நாட்கள் நிம்மதியாகக் கழியும்!

சௌரதி ஆறுதலாகப் பெருமூச்சு விடும்போதே, சின்னவள் சொன்னாள். “நடுப் புறம் உள்ள ஒரு குடிலில் வாசகசாலை மாதிரி நிறையப் புத்தகங்கள் இருக்கின்றன, தெரியுமா? பத்திரமாக வைத்துப் படித்துவிட்டுத் திருப்பியும் தருவதானால் எடுத்துப் போகலாம் என்று, அங்கே சொன்னார்கள்.”

இதுவும் போனஸ்தான்.

இரண்டு பெண்களுக்குமே படிக்கப் பிடிக்கும். என்ன, ப்ரீதிக்குப் பாடப் புத்தகங்கள் மட்டும் அலர்ஜி!

சின்னப் பெண். ரொம்ப நேரம் உம்மணாமூஞ்சியாக இருக்க முடியாது. மெல்ல மெல்ல அவள் மனதில் உற்சாகம் பெருகும்போது, சற்று நேரம் பாடத்தையும் படிக்கச் சொல்ல வேண்டும்.

தங்கைக்குத் தெரியாமலே அவளது பாடப் புத்தகங்கள் சிலதையும்

சௌரதி கொண்டு வந்திருந்தாள். பயன்படுத்த முடிந்தால் நல்லது.

ஆனால், அதை மெதுவாகத்தான் பார்க்க வேண்டும். அவசரப்பட்டால் காரியம் அடியோடு கெட்டுப் போகும்.

ரகுநந்தனின் அரவம் வெளியே தெரியவில்லை. அவன் படுக்கப் போயிருக்கக் கூடும் என்று சௌரதி ஊகித்தாள்.

நட்சத்திர ஹோட்டல் வளாகங்களில், தனித் தனிக் குடில்களாக இருந்தாலும் அருகருகே அமைத்திருப்பார்கள். இங்கே அப்படியின்றி இடைவெளி சற்று அதிகமாகவே இருந்தது.

மாதையன் வெளியே நிற்பதைப் பார்த்துவிட்டு, "இதோ வருகிறேன்." என்று தங்கையிடம் சொல்லிவிட்டு, அடுத்த குடிலை நோக்கி நடந்தாள்.

அவள் வருவதைப் பார்த்து விரைந்து வந்த மாதையனிடம், மறு நாள் வருவதைப் பற்றி மென்குரலில் அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, உள்ளறைக் கதவு திறந்து, ரகுநந்தன் வெளியே வந்தான்.

அவளைக் கண்டதும் வேகமாக அலர்களிடம் வந்து, "கொஞ்சம் உரக்கப் பேசியிருக்கக் கூடாதா, சௌரதி? யாரோ என்று, இருந்த இடத்திலேயே வேர் முளைத்த மாதிரி உட்கார்ந்திருந்தேன். தணிந்த குரலில் பேசியதால் வார்த்தைகள் சற்று வேறுபாடாக ஒலிக்கவும் பயந்துவிட்டேன். எந்த மீடியா இங்கே மோப்பம் பிடித்து வந்துவிட்டார்கள் கவலையாக வந்து பார்த்தால், புதுப் பூ மாதிரி நீங்கள்! உள்ளே வாருங்களேன்., உள்ளே வந்து ஒரு கப் காஃபி குடித்துவிட்டுப் போகலாம்." என்று அவளை அழைத்தான்.

புன்னகையோடு தலையசைத்து மறுத்துவிட்டு, "காலையில் சுமார் எட்டரைக்கு வருகிறேன். என் பணியைத் தொடங்க வசதியாக இருக்கும்" என்று தான் வந்த விவரத்தை சௌரதி சொன்னாள்.

"எட்டரையா? பாருங்கள், நான் எட்டுமணிக்கே தயாராகி இங்கே உட்கார்ந்து இருப்பேன், நிச்சயம்!" என்று ரகு உறுதியாகக் கூறவும், "பார்க்கத்தானே போகிறேன்." என்று சிரித்த முகத்தோடு திரும்பிச் சென்றாள்.

மறுநாள்க் காலையில் சௌரதி அவனது குடிலுக்குச் சென்றபோது, அவன் பளபளவென்றிருந்த ஹவுஸ்கோட்டில் அவளை வரவேற்றான்.

அவனுடைய அண்ணனைப் போலவே, காஃபி மேஜைப்பக்கம் கைகாட்டினான்.

ஆனால், “எனக்கும் ஒரு கப், சர்க்கரை இல்லாமல் ஊற்றி வையுங்கள் சௌரதி. ஒரே நிமிஷத்தில் உடை மாற்றிக்கொண்டு வந்துவிடுகிறேன்.” என்று உள்ளே சென்றான்.

சொன்ன மாதிரியே, அவள் காஃபியைக் கலந்து வைக்கும்போது, பெர்முடாவும் டீஷர்ட்டுமாக வந்துவிடவும் செய்தான்.

எண்ணி ஒரேஒரு பிஸ்கட்டுடன் அவன் காஃபியை அருந்தி முடிக்கவும் இருவருமாக “வாக்” போனார்கள்.

எப்போதுமே, இரண்டுபேர் சேர்ந்து இலகுவாக நடக்கும்போது, ஒரு தோழமை உருவாகி, வாய்ப் பூட்டு அகன்று இலகுவாகப் பேச்சு ஓடுவதை, சௌரதி உணர்ந்திருக்கிறாள்.

அதே போல, சும்மாவே இலகுவாகப் பேசும் ரகுநந்தன், இன்னமும் கலகலப்பாகப் பேசினான்.

அவனுக்குப் பேச விஷயமும் இருந்தது. அவன் சொல்லத் துடித்துக் கொண்டிருந்தது, அவனுடைய காதலியைப் பற்றியதாகும்.

அவளை என்ன வர்ணித்தாலும், அவனுக்குப் போதவில்லை.

அவள் எப்படிப்பட்ட அழகி., அவளது கண் இப்படி, காது இப்படி என்று நிறையப் புகழ் பாடினான்.

அவனுடைய அண்ணனிடம் கூட ரொம்பச் சொல்ல முடியவில்லையாம்.

மூன்று வயது பெரியவன். அவனுக்குத் திருமணம் ஆகுமுன், முந்திரிக் கொட்டை போலத் தனக்குத் தேடிக் கொண்டதால், அது பற்றி அவனிடம் பேசக் கூச்சமாக இருக்கிறதாம்!

தம்பியின் திருமணம் முதலில் நடப்பதில் தனக்கு எந்த விதமான பிரச்சினையும் இல்லை என்று வசுநந்தன் சொல்லத்தான் செய்தானாம். ஆனாலும், சின்னவனுக்குக் கஷ்டமாகவே இருக்கிறதாம்.

“பாருங்களேன், ஏதோ காதல் கீதல் என்று அண்ணனும் தொடங்கியிருந்தால், ஒருவேளை எனக்குக் கொஞ்சமேனும் நிம்மதியாக இருந்திருக்கும். அவனானால் அந்த பீஷ்மர் மாதிரி பெண்கள் பக்கம் திரும்பவே மாட்டேன் என்கிறான்.

“உங்கள் தொழில் “கவுன்சலிங்”தானே, சௌரதி? வசுவுக்கும் ஒரு புத்திமதி . . . .திருமணம் செய்துகொள்ளும்படிச் சொல்லுங்களேன்! ப்ளீஸ்!” என்று, ரகு அவளிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்ட விதத்தில், அவளுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

குத்தலாகப் பேசுவதில்லை என்று சொன்னாலும், அவளைப் பற்றி அந்த வசுநந்தன் கொண்டிருந்த சந்தேகத்துக்கு . . . இன்னமும் அது முழுதாகத் தீர்ந்து விட்டதாகவும் சொல்வதற்கில்லை., இந்தச் சமயத்தில் இளையவன் கேட்டதைச் செய்தால், வேறே வினையே வேண்டாம்! கழுத்தைப் பிடித்தால் கூட ஏதோ ஒட்டிக் கொள்ளுமோ என்று அஞ்சிக் காலால் உதைத்தே அவனது எல்லைக்கு வெளியே கொண்டு போய்த் தள்ளி விடுவான்.

“என்ன, என்ன சிரிப்பு?” என்று ஆவலாகக் கேட்ட ரகுவிடம், “முதலாளிக்குப் போய் யாராவது புத்தி சொல்வார்களா? சொல்லத் தைரியம்தான் வருமா? அவர் ஆத்திரப்பட்டுச் சீட்டைக் கிழித்துவிட்டால், சம்பளம் யார் தருவார்கள், ரகுநந்தன்?” என்று அவனுக்கு ஏற்ற விதமாக அவள் ஏதோ கூற, அவனுக்கும் சிரிப்பு வந்தது.

“அதுசரிதான். எனக்கானால் என்ன மாதிரி வேண்டுமானாலும் புத்தி சொல்லலாம். அதற்காகத்தானே, நீங்கள் இங்கே வந்திருப்பதே! ஆனால் அண்ணன் . . . அப்பாடியோவ்! ஊகூம். கூடாதுப்பா! கூடவே கூடாது!” என்று அவன் சொன்ன தினுசில் இருவரும் மீண்டும் நகைத்தார்கள்.

தூரத்தில் ஜிப் ஒன்று செல்வது தெரிந்தது.

“அண்ணன். நீச்சல் முடித்துப் போகிறான். “என்றான் ரகு.

“நீச்சல்? இங்கே நீச்சல் குளம் இருக்கிறதா?” என்று வியந்தாள் சௌரதி.

“ம்ம்! இருக்கிறதே. அண்ணனுக்கு உடல்பயிற்சி ஒரு கட்டாயம். ஒன்று நீந்துவான். அல்லது ஜிம்மில் பயிற்சி செய்வான் . . ஜிம் கூட இங்கே செட்டப் பண்ணி வைத்திருக்கிறான், தெரியுமா? “ என்றவன் திரும்பி அவளைப் பார்த்தான்.

“நீங்களும் ஜிம் போவீர்கள் போல? கச்சிதமாக இருக்கிறீர்களே! இங்கே ஜிம் போக வேண்டுமானால் சொல்லுங்கள், ஏற்பாடு செய்கிறேன். இதையெல்லாம் வசு தடுக்கவே மாட்டான். எல்லோரும் உடம்பை ஆரோக்கியமாக, அழகாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பான். என்னவோ திருமூலர் என்ற சித்தரின் பாடல் ஒன்று இருக்கிறதாமே, நம் உடம்புதான் கடவுள் வாழும் ஆலயம், அதனால் கோயில் போல, நம் உடம்பைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டுமாம். அடிக்கடி சொல்லுவான். பாடல் எங்களை வளர்த்த எங்கள் தாத்தாவின் உபயம். என்ன, அவனளவு இதெல்லாம் என்

மனதில் நில்லாது.”

“எங்கள் தமிழ் ஆசிரியை இது பற்றிக் கூறியிருக்கிறார்கள். யோகாசனங்கள், மூச்சுப் பயிற்சி செய்யும் முறைகள் எல்லாம் கூடத் திருமந்திரம் என்கிற அவரது நூலில், மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறாராம். உள்ளும் புறமும் சுத்தமாக இருப்பதற்கான பல வழிமுறைகள்! வாரம் ஒரு தரம் சமாதி நிலையில் இருந்து வெளி வந்து எழுதியதாகச் சொன்னார்கள். இலகுத் தமிழில் அதற்கு யாராவது விளக்கம் எழுதினால், எத்தனையோ பேர் பயனடைவார்கள். ஆனால் . . . அது போகட்டும். யோசித்துப் பார்த்தால், இன்றைக்கு நிறையப் பேர் வாக்கிங், ஜாகிங், ஜிம் என்று உடம்பை நன்றாகத்தானே வைத்துக் கொள்ளுகிறார்கள்? அதிலும், நீங்கள் நடிகர்கள் எல்லோரும் தொப்பை தொந்தியே இல்லாமல், எவ்வளவு ட்ரிம்மாக இருக்கிறீர்கள்! “ என்று அவனைப் பற்றிய பேச்செடுத்தாள் சௌரதி.

படத்துக்குப் படம் மாறுபட்ட கதா பாத்திரங்களில் நடித்துப் பெயர் வாங்குகிறவன், ரகுநந்தன். கதா பாத்திரங்களுக்கு ஏற்ற உடலமைப்பைக் கொண்டு வருவதற்காக உணவுக் கட்டுப்பாடு, உடல் பயிற்சி எல்லாம் செய்வான் என்று மாசிலாமணி அவளிடம் கூறியிருந்தார்.

அந்தந்தப் படங்கள் வெற்றி பெற, அவை உதவினாலும், உடல் மனம் இரண்டையுமே அது பாதித்ததாகச் சொன்னார். எனவே, அவனது வாய்மொழியாகவே, அந்தப் பாதிப்பை அவள் அறிய விரும்பினாள்.

அவனும் மறைக்கவில்லை.

“வைத்தியரிடம் எதையும் மறைக்கக் கூடாது என்று சொல்வார்கள். என் மனதுக்கு வைத்தியம் செய்யும் மருத்துவராகவே உங்களை எண்ணுகிறேன் சௌரதி.

“எல்லாமே இப்போது ஆராய்ந்து கண்டறிந்து அதன்படிச் செய்வதுதான். உடம்பைப் பெருக்குவது, குறைப்பது, அகலத் தோள்கள், ஒட்டிய வயிறு . . . என்ன பிரச்சினை என்றால், இதைக் கடுமையாகக் கடைப்பிடிக்கும்போது, உடம்பு மனம் இரண்டுமே அலுத்துப் போகின்றன. உறுதியான மனம் படைத்தவர்கள் எப்படியோ? எனக்குப் பிடித்ததமான உணவு, ஓய்வுக்கு மனம் ஏங்கத் தொடங்கிவிட்டது. அவ்வளவு கஷ்டப்பட்டும் படம் வெற்றி பெறவில்லை என்றால், அவ்வளவுதான். எல்லாமே ஓய்ந்து விடுகிறது. படம் வெளிவரு முன்னாலும், வெற்றி பற்றிய சந்தேகத்தில் ஒரே பதற்றம்தான். இப்படி நடுக்கத்தில் இருந்தபோதுதான் ஒரு நண்பன் . . ஊகூம், அவன் நண்பன்

அல்ல. துரோகி! அவன்தான் இந்தப் பழக்கத்தைத் தொடங்கி வைத்தான். நானும், உடும்பாக அதைப் பிடித்துக் கொண்டுவிட்டேன்.” என்றான் வருத்தமான குரலில்.

அவனது கரத்தில் கைவைத்து, “உங்களது இந்த வருத்தம்தான், நீங்கள் முழுதாகக் குணமாகி விடுவீர்கள் என்பதற்கு உத்திரவாதம்! “ என்றாள் சௌரதி பரிவாக.

“அப்படித்தான் அங்கேயும் சொன்னார்கள். ஆனால், நான் நம்பவில்லை. நம்ப முடியவில்லை. இப்போதைக்கு அந்த மருந்து எடுக்க வேண்டும் போல ஆவல் . . வேகம் ஒன்றும் இல்லை என்றாலும், அந்தப் புதைகுழி எப்போது வேண்டுமானாலும் என்னை உள்ளே இழுத்துவிடும் என்றே எண்ணுவேன். ஆனால் சௌரதி, நன்றாகி விடுவேன் என்று நீங்கள் சொல்லும்போது, என்னவோ அது நிஜம் போலவே தோன்றுகிறது!” என்றான் அவன் பரபரப்புடன்.

சௌரதிக்கு உள்ளூரக் குதூகலமாக இருந்தது. நல்லபடி ஆகிவிட வேண்டும் என்கிற வேட்கை இந்த அளவுக்கு இருக்கும்போது, அதுவே ஒரு கவசமாக இருந்து அவனைக் காக்கும்!

அவளும் வெற்றியோடு சென்னைக்குத் திரும்பலாம்.

சென்னை என்றதும், அவள் முகத்தில் யோசனை படர்ந்தது.

பரந்தாமன் வேறே பசையுள்ள இடம் பார்த்திருப்பாரா? இல்லை என்றால், “ப்ளான் பி” யைச் செயல்படுத்த வேண்டியதுதான . . .எப்படியும் இது ஒன்று அல்லது இரண்டு மாதத்து வேலைதானே? அதற்கு மேல் வேறு வழி தேடித்தான் ஆகவேண்டும்.

இங்கு கிடைக்கும் நல்ல பெயர், அதற்கு உதவும்!

ப்ரீதி இயல்பில் நல்ல பெண். அக்காவிடம் அன்பும் உடையவளே!

இன்னும் கொஞ்சம் வளர்ந்து, இந்தக் கோபம், வருத்தம் எல்லாம் மங்கி, பழைய அன்பு கொஞ்சமேனும் தலை தூக்கிய பிறகு, ஓரளவு எதையும் ஏற்கும் மனோதிடமும் உருவான பிறகு, மெல்ல ஒரு நாள் அவளிடம் சொல்ல வேண்டும். எல்லாம்!

அப்போதும் வருத்தமாகத்தான் இருக்கும். ஆனால், தமக்கை மேல் உள்ள கோபம் அடியோடு மறைந்துவிடும்.

சௌரதி சந்தோஷமாக எதிர்காலம் பற்றி கனவு காணத் தொடங்கினாள்.

நம்பிக்கையுடன் கூடிய ஆனந்தக் கனவு!

அதற்குக் காரணமும் இருந்தது.

எழுந்து குளி, பள்ளிக்குப் போ, படி என்று ப்ரீதியை விரட்ட எந்த வித அவசியமும் இல்லாததால், சௌரதி அவளை எதுவும் சொல்வதில்லை.

எனவே, விருப்பம் போலப் படங்கள் வரைவது அந்தப் பகுதியில் சுற்றுவது, வீடியோவில் படங்களைப் பார்ப்பது என்று தங்கையின் பொழுது சந்தோஷமாகவே கழிந்தது.

அவளது கலை ஆர்வத்துக்கும் எந்த விதக் கட்டுப்பாடும் இல்லாததால், அவளுக்கு இது பிடித்தும் போயிற்று.

“அக்கா” என்று ஆர்வமாகப் பேசவில்லை என்றாலும், அடிக்கடி காட்டிய முகம் திருப்பலும் குறைந்தது போலத் தோன்றியது.

எல்லாம் நன்றாகிவிடும் என்ற நம்பிக்கையோடு சௌரதி காத்திருந்தபோது, ஒரு சம்பவம் நடந்தது.

அத்தியாயம் -7

வாக்களித்தது போலவே, சௌரதியின் பணியில் அதன் பின் வசுநந்தன் குறுக்கிடவில்லை. என்றாலும், இரண்டொரு நாட்களுக்கு ஒரு முறை, அவன் தம்பியின் நடவடிக்கை பற்றி அவனிடம், அவள் தெரிவிப்பது நடைமுறை ஆயிற்று.

ஊதியம் கொடுக்கிறவனிடம் வேலையில் முன்னேற்றம் பற்றிப் பணி அறிக்கை கொடுப்பது நடைமுறைதானே? சௌரதியும் அதைத் தப்பாக எண்ணவில்லை.

பழைய நக்கல், குத்தல் இல்லாமலே, இது முன்னேற்றம்தானா, சரியாகத்தான் போகிறானா என்று மட்டும், அவன் கேட்டுக் கொள்வான்.

சில சமயம் அவனாகச் சும்மா அந்தப் பக்கம் வருவது போல, அவர்களது குடில் பக்கம், தம்பி இருக்குமிடத்துக்கு வருவான்.

அப்போதெல்லாம், லட்சுமி, மாதையன் மட்டுமின்றி, சுற்றுப்புறத்தைச் சுத்தம் செய்வது, செடி கொடிகளுக்கு உரம் நீரூற்றிப் பராமரிப்புப் பணி புரிகிறவர்கள் எல்லோரும், பார்வையாலேயே அவனுக்குச் சிவப்புக் கம்பளம் விரிப்பதைப் பார்க்கையில் அவளுக்கு ஆச்சரியமாக இருக்கும்.

வசுநந்தன் புன்னகையோடு பார்த்தாலே "ஜென்மம் சாபல்யம் அடைவது" என்பார்களே, அது போல மகிழ்ந்து போவார்கள்!

ஊதியம் கொடுக்கிறவனுக்கு இவ்வளவு மரியாதையா? இங்கெல்லாம் பணம் சம்பாதிப்பது, ரொம்பக் கடினமோ என்று முதலில் சௌரதி யோசித்ததுண்டு.

ஆனால், இது பணத்தை மீறிய ஏதோ என்றே அவளுக்குத் தோன்றியது.

ஏற்றாற்போல வசுநந்தனும், அந்த ஆட்களிடம் ஏதாவது விசாரிப்பான். அவளிடம் போல, வெறுமனே வேலையைப் பற்றி மட்டும் அல்ல.

"உன் மகன் தேனெடுக்கிறேன் என்று கீழே விழுந்து காலை உடைத்துக் கொண்டானே, இப்போது எலும்பு நன்றாகச் சேர்ந்துவிட்டதா? கொஞ்ச காலம் மரம் ஏற விடாதே." என்று ஒருவனிடம் சொல்வான்.

“உன் மகளைப் பிரசவத்துக்கு எப்போது கூட்டி வரப் போகிறாய்? வந்ததும் சொல்லு. சுகாதார நிலையத்தில் இலவச சிகிச்சைக்குச் சொல்கிறேன்.” என்பான் இன்னொரு பெண்ணிடம்.

“அம்மாவுக்குப் பரவாயில்லையா?” என்று இன்னோர் ஆளிடம் விசாரிப்பான்.

கேட்பதோடு மட்டுமின்றி, அவர்களது பதிலையும் செவி சாய்த்துக் கேட்பான்.

இதனால், அவனை ஒரு “காட்ஃபாதர்” போல நினைக்கிறார்களோ என்று சௌரதிக்குத் தோன்றியது.

ஆனால், அவளிடம் அவன் பேசும் விதம் மட்டும் வேறு மாதிரி இருக்கும்.

வாய் வார்த்தையாக எதுவும் சொல்லாவிட்டாலும், அவனது பார்வை அவளைக் கூறு கிழித்து ஆராய்வதை சௌரதியால் உணர முடிந்தது.

அவள் சொல்வது மெய்யா, பொய்யா என்று ஆராய்ச்சியாகத்தான் இருக்க வேண்டும் !

நன்றாக ஆராயட்டும். அவள் ஏற்று வந்த இந்தப் பணியைப் பொறுத்தவரையில், அவளுக்கு மறைப்பதற்கு ஒன்றுமில்லை. ஆனால், அவளது சொந்த வாழ்வு பற்றி அறிய முற்பட்டால், அவன் பாறையில்தான் முட்டிக்கொள்ள வேண்டும்! வேண்டுமளவு நன்றாக முட்டட்டும்!

ப்ரீதியின் செயல்களில் சௌரதி குறுக்கிடுவது இல்லை என்றாலும், உணவு, தூக்கம் போன்ற ஆரோக்கியம் பேணும் விஷயங்களை, அவள் கண்காணித்துக் கொண்டேதான் இருப்பாள்.

ஏனெனில், சித்திரங்கள் தீட்டுவதில் புது பாணியைக் கொண்டு வரப் போவதாகச் சொல்லி, ப்ரீதி தன்னை மறந்து அதில் ஈடுபடத் தொடங்கியிருந்தாள்.

அதிலும் ஒரு நாள், அவள் விரும்பிய ஏதோ “எஃபெக்ட்” வரவில்லை என்று மதிய உணவையே மறந்து வரைந்துகொண்டே இருந்ததில் பசி மந்தித்து, வயிற்றில் காற்று அடைத்து, ஒரு நாள் முழுதும் ப்ரீதி ரொம்பக் கஷ்டப்பட்டுவிட, அதில் இருந்து, தங்கையின் ஆரோக்கியம் பற்றி சௌரதி அதிகமாகக் கவனித்தாள் எனலாம்.

முக்கியமாக உணவும் தூக்கமும்! எப்போதுமே தூக்கம்

குறைந்தால், அவளுக்குக் கண் சிவந்து நீர் வடியும்.

ப்ரீதியும், அவளது மாறிவிட்ட குணத்துக்கு ஏற்ப, தமக்கை சொல்வது தனது நன்மைக்காக என்று எடுத்துக் கொள்வது இல்லை. வேண்டும் என்றே தங்கையின் சுதந்திரத்தில் குறுக்கிட்டு அவளைக் கொடுமைப் படுத்துவதாகக் கூறி எரிச்சல் பட்டாள்.

என்ன வேண்டுமானாலும் திட்டிவிட்டுப் போகட்டும்., அவளது ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொள்ளாமல் இருந்தால் சரி என்று, சௌரதியும் விடாமல் சொல்லிச் சின்னவளை விரட்டிக் கொண்டுதான் இருந்தாள்.

தங்கையின் பாஷையில் சொல்வதானால், வறட்டுத் தவளையாகக் கத்திக்கொண்டு இருந்தாள்.

ரகுநந்தனின் பேச்சு இப்போதெல்லாம் பெரும்பாலும் அவனுடைய வருங்காலத் துணையைப் பற்றியதாகவே இருந்தது.

மும்பையின் சினிமா உலகம், அதில் பலரின் போலித்தனமும், ஏமாற்றும் தன்மையும், இப்போது அவனுக்குப் பெரிதாகத் தோன்றுவதே இல்லை.

“உலகம் என்றால், ஏமாறுவதற்கு ஒருத்தரும், அவரை ஏமாற்றுவதற்காக இரண்டு பேருமாகப் பிறந்துகொண்டேதான் இருப்பார்களாம். இதில் நல்லபடியாக வாழ வேண்டுமானால், நாம்தான் ஏமாறாமல் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். மற்றவரைக் குற்றம் சொல்வது மடத்தனம்.” என்று உளப் பூர்வமாகச் சொல்லத் தொடங்கியிருந்தான்!

படங்களின் வெற்றி தோல்வியைக் கூட, “எல்லோருக்கும் எல்லாம் பிடிக்கும் என்று சொல்ல முடியுமா? ஒன்றில் விட்டால் இன்னொன்றில் பிடிக்க வேண்டியதுதான்.” என்று சாதாரணமாகவே கூறலானான்.

அது பற்றித் தெரிவித்தபோது, வசுநந்தனுக்குப் பெரும் மகிழச்சி!

இந்த வெற்றி தோல்விகள்தானே, தம்பியை மிகவும் பாதித்தவை! அதையே இயல்பாக ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவம் வந்துவிட்டது என்றால், அதன் பின் ரகு பற்றி கவலைப் படத் தேவையிராது என்று மருத்துவர் சொல்லியிருந்தாராம்!

“இதுவே பழைய காலம் என்றால், “நல்ல செய்தி கொண்டுவந்தாய், பரிசாகப் பிடி இந்த முத்தாரத்தை” என்று கழுத்தில் இருப்பதைக் கழற்றிக் கொடுத்திருக்கலாம். ஆனால், இப்போது கழுத்தில் முத்தாரமே இல்லையே! அடடடா! இதற்கு என்னப்பா

செய்வது?" என்று வேடிக்கையாகப் பேசித் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டான்.

"முத்தாரமே கழுத்தில் கிடந்து, அதை நீங்கள் பரிசாகத் தந்தே இருந்தாலும், நாங்கள் அதுபோல யாரிடமும் ஓசி வாங்கிக்கொள்ள மாட்டோம், சார்! அதனால், வீணாகக் கவலைப்படவே வேண்டாம், சார்!" என்று மறுப்பாகக் கைகளை அசைத்துக் காட்டி, சௌரதி பதில் சொன்ன விதத்தில், அவனுமே வாய்விட்டுச் சிரித்தான்.

மனதின் மகிழ்ச்சி, இப்படி வெளிப்பட்டது போலும்!

ஆனால், மில்லி மீட்டர் கணக்கில் அளந்து சிரிக்கிறவன், வரிசைப் பற்கள் தெரிய உரக்க நகைத்ததில், சௌரதி அப்படியே திகைத்துப் போனாள்.

இவனுக்கு இப்படிச் சிரிக்கக் கூடத் தெரியுமா?!

பளபளவென்று என்ன அருமையான பல்வரிசை! கண்களும் முகமும் இணைந்து மலர, எவ்வளவு கவர்ச்சிகரமான சிரிப்பு!

வசுநந்தனது சிரிப்பைப் பார்த்த பிரமிப்பில் வாயைப் பிளந்துகொண்டு நிற்கிறோமோ என்று திடுமெனத் தோன்றவும், சௌரதி சட்டெனப் பார்வையைத் தாழ்த்திக்கொண்டாள்.

அவனது சிரிப்புக்குப் பதிலாக விரியத் தொடங்கிய உதடுகளையும் கட்டுப்படுத்திக்கொண்டு, "இஇப்போதைக்கு, ரகு இந்த அளவுக்கு வந்திருக்கிறார், சார்.

மேலே முன்னேற்றம் இருந்தால், அப்புறமாகத் தெரிவிக்கிறேன்." என்று பணி அறிக்கை போலச் சொல்லி முடித்துவிட்டு, அவசரமாக அங்கிருந்து அகன்று சென்றாள் அவள்.

அவளைக் கண்டதும், "எங்கே போய்விட்டீர்கள் சௌரதி? பவித்ரா பற்றி உங்களிடம் நிறையச் சொல்ல வேண்டும் என்று, இவ்வளவு நேரமாகத் தேடினேன். பவி என்னென்ன கலைகள் கற்று வைத்திருக்கிறாள், தெரியுமா? பாட்டும் நடனமும் எல்லோரும் பயில்வதுதான். அதிலேயே பலதினுசும் பயின்றிருக்கிறாள். சமையல்! ஒரு நாள் பிரியாணி செய்து கொடுத்தாள். என்ன ருசி தெரியுமா? அவளைத் திருமணம் செய்துகொண்டால், அப்புறம் நாள் முழுதும் அவளைப் பார்த்துக்கொண்டே இருந்துவிடுவேன். " என்றான் கண்கள் சொக்க!

முறுவலித்து, "அப்படியானால், முழு மூச்சாக நிறையச் சம்பாதித்து வைத்து விடுங்கள். அப்புறம் அவளை நீங்களும், அவள் உங்களையும்

பார்த்துக்கொண்டே, சந்தோ . .ஷமாகக் காலத்தைக் கழிக்கலாம்.” என்றாள் சௌரதி.

“ஐயோ, அதுதானே அவளிடம் நடக்காது. இதைப் பார்த்தாயா? அதைச் செய் என்று உட்கார விடாமல் விரட்டுவாள். அவளுடைய அப்பாவின் தொழிலையே பாதி அவள்தானே பார்க்கிறாள்! பவித்ரா ரொம்பக் கெட்டிக்காரி, சௌரதி. அப்போதைக்கு ஏதாவது பொய் சொல்லி, அவளை ஏமாற்ற முடியாது. நினைவு வைத்து, அப்புறமாக என்ன ஆயிற்று என்று கேட்பாள். அண்ணனைப் போல அவளுக்கும் பார்வையில் கூர்மை அதிகம். எக்ஸ்ரே மாதிரி ஊடுருவுகிற பார்வை. அதே சமயம் ரைட் ராயல் ரகம். தப்பு பண்ணியதாகத் தெரிந்தால், திரும்பிக் கூடப் பார்க்க மாட்டாள். . . . சௌரதி, அதுதான் எனக்கு ரொம்பப் பயம்!

“இது போலெல்லாம் போதை மருந்து எடுக்கிறேன் என்று தெரிந்தால், என்னை அடியோடு வெறுத்துவிடுவாள்! அம்மா இல்லாமல் வளர்ந்த பெண்ணா? மனதில் உறுதியோடு தன்னைத்தானே வளர்த்துக் கொண்டவள். மனித மனதின் பலவீனங்களை ஒத்துக்கொள்ளவே மாட்டாள்.

“நிறையப் பணம் உள்ள குடும்பம். செல்லமாக வளர்ந்தவள். அந்த வீட்டில் மகாராணி! அவள் அப்பாவுக்குக் கண்ணின் மணி! அவள் சொன்னால், சொன்னதுதான்.

“என் கோழை மனமும், அதனால் ஏற்பட்ட இந்தப் பழக்கமும் தெரிந்தால் வெறுத்து, விலகிப் போய்விடுவாள் என்று எனக்கு ஒரே பயம்! அச்சம். ஆனால், என் பவித்ரா இல்லாமல், நான் எப்படி வாழ்வேன்?” என்று கலங்கினான் ரகுநந்தன்.

“காதல் பற்றி இவ்வளவு உறுதியாக இருப்பவர், அவள் வெறுக்கிற ஒரு கெட்டதை எப்படி விடாமல் தொடர்ந்தீர்கள்?” என்று, குரலாலோ முகத்தாலோ குற்றம் சாட்டாமல், சாதாரண விவரம் விசாரிப்பது போலக் கேட்டாள் சௌரதி.

எதையோ நினைவுக்குக் கொண்டு வருகிறவன் போல, லேசாகப் புருவம் சுருக்கி, ரகுநந்தன் யோசித்தான்.

பிறகு சொன்னான். “இந்தப் பழக்கம் எப்படி என்றால் . . . முதலில் நம் கட்டுப்பாட்டுக்குள் அது இருக்கிறது. அல்லது, அப்படி இருப்பது போல எண்ணமே, ஒரு மாயையாகவும் இருக்கலாம். ஹூம், என்ன பெரிய காரியம்? நான் நினைத்தால் இதை அடியோடு நிறுத்திவிடுவேனாக்கும் என்கிற மாதிரி ஒரு திமிரை மனதில்

உண்டாக்கி விடுகிறது. ஆனால், இந்தப்பழக்கத்தை நிறுத்துகிற உறுதிக்குப் பதிலாக, இப்படிச் செய்தால், மருந்து எடுப்பதை யாருக்கும் தெரியாமல் மறைத்துவிடலாமே என்று, பொய்யும் புளுகுமாக ஏமாற்று வேலையில் ஈடுபட வைத்துவிடுகிறது! பொய், புளுகு, ஏமாற்றுவது எல்லாம் தப்பு என்கிற நல்ல கொள்கைகள் எல்லாமே மறந்து, அப்படி ஏமாற்றுவது வாழ்க்கைக்கு ஏதோ மிகத் தேவையான உத்தி என்கிற மனோபாவம் வந்துவிடுகிறது. . . .”

அவனை விடவும் அதிகமாகப் பாதிக்கப் பட்டவர்களுக்குப் பணி செய்து பழகியவள் சௌரதி.

இதே விதமாக எண்ணி எண்ணியே, ரகுவே சொன்ன அந்தப் புதைகுழியில் அனேகம் பேர் மூழ்குவதுதான் வழக்கம்.

என்ன நடக்கிறது என்று, பலபேருக்குப் புரிவதே இல்லை. இன்னும் பலருக்கு, விஷயம் புரியும்போது, உடம்பில் பலவிதமான பாதிப்புகள் ஏற்பட்டிருக்கும். முக்கியமாக உள்ளுறுப்புகளில்!

இவன் எப்படித் தப்பினான்?

ஒரு முக்கியமான தருணத்தில், அவனே மீட்சிக்கு வழி தேடியதாக, மாசிலாமணி சார், ரகுநந்தன் பற்றி விவரம் தருகையில் கூறியிருந்தார்.

தொடர்ந்து அவனையே பேசவிட்டாள்.

அதே யோசனையில் இருந்த அவனும் உந்துதல் இன்றி அவனாகவே தொடர்ந்து பேசினான். “முதலில் கொஞ்சமாக மருந்து எடுத்தபோது, ஒரு மாதிரி பவியிடம் மறைக்க முடிந்தது. “ஒரு மாதிரி” என்ன? வெறும் பொய்யும் புளுகுமாகத்தான். மனதில் சந்தேகம் தோன்றுமுன், எதையும் மறைப்பது எளிதுதானே?

“ஆனால் வளர்ந்த விதத்தால், இந்தப் பொய்களே எனக்குச் சற்று அருவருப்பாகத்தான் இருக்கும். ஆனாலும் போதையின் மோகம் தொடர வைத்தது. இந்தக் குடி, போதை மருந்துகளின் தன்மையே இன்னும், இன்னும் என்று அதிகத்துக்கு ஏங்க வைப்பது அல்லவா?

“ஒரு நிலையில், இனிப் பவித்ராவிடம் மறைப்பது இயலாது என்று புரிந்தது. என் நல்லவேளை! பலியிடம் கொண்டிருந்த காதல், இந்தப் போதையை விட அதிகமாக இருந்தது. அது உயிர் நேசம் ஆயிற்றே! அவளை எப்படி இழப்பேன்?

“பிரச்சினையை அண்ணனிடம சொன்னேன். அவன்தான், தொழிலில் மன அழுத்தம், அது தீர முழு ஓய்வு என்று பல விதமாக ஏற்பாடுகள் செய்து, இந்த அளவு என்னை மீட்டு வந்திருக்கிறான்!

“மீட்டது, நீங்களும்தான். மீண்டு விடலாம் என்ற முழு நம்பிக்கை உங்களிடம் பேசிப் பழகும்போதுதான் கிடைத்தது! ரொம்பத் தாங்க்ஸ், சௌரதி!” என்றான் ரகுநந்தன் உணர்ச்சியோடு.

ஒரு வினாடி தயங்கிவிட்டு, “உங்கள் தாரக மந்திரம், உங்கள் பவித்ராதான். மனம் சோர்வுறும்போது அவளை நினையுங்கள். தப்பு செய்யத் தோன்றாது! அத்தோடு, யார் என்ன உதவினாலும், செயல்பாடு உங்களதுதான். உங்கள் உறுதிதான் கடைசி வெற்றி! அதை மறவாதீர்கள். “ என்றாள் சௌரதி அமைதியாக.

நந்தன் எஸ்டேட்டுக்கு அவர்கள் வந்து, அன்றுடன் ஒரு மாதம் முடிந்திருந்தது. இன்னும் ஒரு மாதம் இருந்து, ரகுநந்தனை முழுக்க இயல்புக்குத் திரும்ப வைத்துவிட்டுக் கிளம்பும்படி, மாசிலாமணியிடம் இருந்து ஒரு கடிதம், சௌரதிக்கு வந்திருந்தது.

தன் அலுவலகத் தபாலோடு வந்ததாகச் சொல்லிக் கடிதத்தை வசுநந்தனே அவளிடம் கொடுத்தான்.

இந்தக் கடிதத்தின் பின்னணி வேலை, வசுநந்தனது என்பதில், அவளுக்கு ஐயம் இல்லை. அவன் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே, பெரிய டாக்டர் இந்தக் கடிதம் எழுதியிருக்க வேண்டும்.

ஆனால், எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு விரைவாக சகோதரிகளை வெளியே அனுப்ப அவன் முயற்சிப்பான் என்று எண்ணியதற்கு மாறாக, இந்தக் கடிதம் சௌரதிக்கு ஆச்சரியத்தை அளித்தது.

கடிதத்தை அவள் படித்து முடிக்கும்வரை காத்திருந்து, “என்ன, இருக்கலாம் தானே? ரகு நிறையப் பழைய மாதிரியே இருந்தாலும், எதற்கும், அவனை மும்பைக்கு அனுப்புவதில் அவசரம் வேண்டாம் என்பது என் கருத்து. அதற்காகவே, அவரிடம் அபிப்பிராயம் கேட்டிருந்தேன். இதில் உனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லையே?” என்று கேட்டான் அவன்.

“இல்லை.” என்று தலையாட்டிய சௌரதிக்கு உள்ளூர ஒரு சந்தேகம் மட்டும் இருந்தது.

தம்பி மும்பைக்குச் சென்று, இடையில் எதுவும் நேராத பாவனையில் பழைய வாழ்க்கையில் பொருந்துமுன், சௌரதி மூலமாக தப்புத் தவறாக வேண்டாத உண்மைகள் எதுவும் வெளிவந்துவிடக் கூடாது என்று எண்ணுகிறானோ?

இந்தச் சந்தேகத்தினாலேயே, அவளை இன்னுமொரு மாதம்

இங்கே நிறுத்தி வைக்க விரும்புகிறானோ?

இந்த எண்ணம் மனதை உறுத்தியபோதும், இங்கே இருப்பதில் ஏதோ இதத்தையும் சௌரதி உணர்ந்தாள்.

அதற்குள் அந்தப் பரந்தாமனை எதிர்கொள்ள நேராதிருப்பதே இதம்தானே?

ஆனால், எப்படியும் இன்னும் ஒரு மாதத்தில் இங்கிருந்து கிளம்பியாக வேண்டும். தங்குவதற்குச் சென்னையில் ஒரு வீடு பார்த்தாக வேண்டும்! அது பற்றி எண்ணிக் கூடப் பாராமல் இருப்பது தப்பு!

சென்னையில் தங்கையோடு தங்குவதற்கு ஓர் இடம் . .வீடு, எங்கே எந்த மாதிரி அமையப் போகிறதோ என்று என்று யோசித்தால், அடுத்த வினாடியே ஒரு வீடு மனக் கண்ணில் தோன்றியது.

சுற்றிலும் தோட்டத்தோடு ஒரு சிறிய அழகிய வீடு!

மனக்கண்ணில் அந்தச் சிறு வீடு தோன்றவுமே, சௌரதிக்குத் தூக்கிவாரிப் போட்டுவிட்டது.

ஏனெனில், அந்த வீட்டின் அமைப்புக்காக அவள் சிரமப்பட்டுக் கற்பனை ஏதும் பண்ணத் தேவையே இருக்கவில்லை.

எப்படிப்பட்ட வீடு கிடைக்குமோ என்று சிந்தித்த மறு வினாடியே, அவளது மனக்கண்ணில் தோன்றிய வீடு, தங்கையோடு அப்போது அவள் தங்கியிருந்த குடில்தான்! ஆனால், நடக்கிற விஷயமா?!

இப்படி மனதில் தரம் தோன்றியது என்று வாய் வார்த்தையாகச் சொல்லக் கூட முடியாது.

எப்படியேனும் வசுநந்தனின் காதுக்கு அது எட்டினால், எவ்வளவு விபரீதம் ஆகிவிடும்!

“பார்த்தாயா, பார்த்தாயா நான் அன்றைக்கே கொண்ட சந்தேகம் சரியேதானே.” என்று, அவன் என்ன கர்வமாகப் பேசுவான்!

பூட்டுக்கு மேல் பூட்டாகப் பத்துப் பூட்டுப் போட்டு, அதற்கும் உள்ளே, அடி மனதின் ஆ . . ழத்தில், முழுதாகப் புதைக்கப்பட வேண்டிய ரகசியம்!

வெளியே காட்டிக் கொள்ளாவிட்டாலும், என்ன விஷயம், அந்தத் தோற்றத்தின் பொருள் என்ன என்று அவளுக்கு மண்டை குழம்பியது.

சுத்தமான சுற்றுப்புறச் சூழலும் கண்களுக்கு விருந்தளிக்கும்

அழகான பசிய மலைச் சாரலுமாக, இப்போது இருக்கிற நிலைமை ரொம்பப் பிடித்துப் போயிற்று போல!

ஆனால், இது நிரந்தரம் அல்ல என்று தெரியாத முட்டாளா, அவள்?

அவளது மனதின் ஒரு மூலையில், இது நமநமத்துக்கொண்டே இருந்தது!

“மணி பதினொன்று! வரைந்தது போதும். வந்து படுத்துத் தூங்கு.” என்று பத்தாவது தடவையாகப் ப்ரீதியிடம் சொல்லி விட்டு, அலுப்புடன் சௌரதி அவளது படுக்கையில் வந்து விழுந்தாள்.

என்ன இந்தப் பெண்? தினம் தினம் இப்படிக் கண் விழித்தால், உடம்பு என்ன ஆகும். எடுத்துச் சொன்னால், ஏன் இவள் ஏன் புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறாள்? . . .

யோசித்தவாறே படுத்த சௌரதியின் கண்கள் தானாக மூடிக் கொண்டன.

அன்று நந்தன் நிறுவனத்தின் தோட்டத் தொழிலாளர்களின் இடையே உரு சிறு உரசல். யாரோ ஒருவனின் முறைப் பெண்ணை வேறு ஒருவன் கிண்டல் செய்தானாம். ஒரு சின்ன அளவில் அடிதடி வரை போய்விட்டது.

நல்லவேளையாக எந்தப் பிரச்சினை என்றாலும், அது சின்னது பெரியது என்று இல்லாமல் வசுநந்தனின் காதுக்கு முடிந்தவரை விரைவாக வந்து சேர்ந்துவிடும்.

எதையும் மரமாக வளருமுன் முளையிலேயே கிள்ளி எறிவது மேல் என்பது, வசுநந்தனின் கருத்து. எனவே, பிரச்சினை தலை தூக்கும்போதே தனக்கு விவரம் வந்து சேர்ந்துவிடுமாறு, அவன் சில ஏற்பாடுகள் செய்து வைத்திருந்தான்.

பழைய கால ஒற்றாடல் போலத்தான்.

பிரச்சினைகளுக்கு உடனே தீர்வும் கண்டு விடுவதால், மற்ற எஸ்டேட்டுகளைக் காட்டிலும் நந்தன் நிறுவனம் அமைதிப் பூங்காவாகவே இருந்து வந்தது.

இன்றும் அது போல இரு சாராரையும் பார்த்துப் பேசி, தோளணைக்க வைத்துப் பிரச்சினை வளர விடாமல் நிறுத்தியும்விட்டான்.

ஆனால், உள்ளூர சிறு எரிச்சல் புகைந்துகொண்டே இருந்தது.

சுற்றிச் சுற்றி எழும் பிரச்சினைகளில் அறுபது சதவீதத்துக்கு மேல்,

பெண்களால் எழுவதுதான். சீண்டலும் சிரிப்புமாக அவர்கள் கிளப்பி விடுவதும், உடனே இவன்கள் முன் பின் யோசியாமல் வீர தீரமாகக் கிளம்பி விடுவதும் . . . இதில் வீணாகும் நேரத்தையும் சக்தியையும் உருப்படியாகச் செலவு செய்தால், அவனவனே எவ்வளவோ முன்னேறலாம்.

அதை விட்டு, "கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்" என்று பதிலுக்குப் பதில் செய்வதும், அதை இந்தப் பெண்கள் தூண்டிப் பெரிதாக்கி விடுவதும் . . .சே என்ன மடத்தனம் . . .என்று அதே நினைவில் அவனுக்குத் தூக்கம் வர மறுத்தது.

சொல்லப் போனால், ரகுவின் பிரச்சினைக்குள்ளும் ஒரு பெண்தானே இருக்கிறா . . . ஆனால், பவித்ராவை அப்படிச் சொல்ல முடியாது.

படு மோசமான ஒரு பழக்கத்திலிருந்து ரகு மீள முயற்சி எடுப்பதே, அந்தப் பெண்ணுக்காகத்தானே? அவள் ஆக்க சக்தி!

இந்தப் பெண்கள் போல அழிக்கிற சக்தி அல்ல!

ஆனால் அவளும் பொறுமையாக இராமல், தினமும் தொணதொணப்பது போர்தான்! அங்கிள் சொன்ன நூறு சதவீதக் குணம், அவனுக்கு எப்போது வருமோ?

மனம் அமைதி கலைந்து உளப்பினால் வசுநந்தன் காலாற நடக்கத் தொடங்கிவிடுவான்.

மலைக்காற்று முகத்தில் மோத, அந்தக் குளிர்ச்சியான பிரதேசத்தில் வேகமாக நடக்கும்போது, எந்தப் பிரச்சினையும் பின்னுக்குப் போய்விடும்.

அப்படி நடக்கும்போது, சுற்று வட்டாரத்தையும் ஒரு தரம் பார்வையால் அலசி விடுவான்.

அன்று அப்படி நடக்கும்போது, ஒரு வேறுபாடு அவன் கண்ணில் பட்டது.

கடைசிக் குடிலின் வெளிப்புறமாக, வழக்கத்துக்கு விரோதமான ஒரு வெளிச்சம்!

வீட்டுக்குள் இருந்து வெளிப்படும் ஒளி. கதவைச் சாத்தித் தாளிடாமலே தூங்குகிறார்களா? அல்லது திறந்து போட்டுவிட்டே வெளியே சுற்றுகிறார்களா?

சுத்தப் பொறுப்பில்லாத்தனம். இங்கே திருட்டு பயம் கிடையாது

என்றாலும், இதைச் சென்னையில் செய்தால், அப்புறம் வீட்டில் ஒன்றுமிராது! இந்தப் பெண்கள் கூட இருப்பார்களோ என்னவோ?

இந்த சௌரதியை நம்பி . . . படியேறிப் போய்ப் பார்த்தால், எதிர்பார்த்தது போல முன் கதவு லேசாகத் திறந்திருந்தது. அதன் வழியே, உள் அறை ஒன்றின் விளக்கொளி கசிந்து, வெளிப்புறத்தில் கொஞ்சமாக ஒளி பரவச் செய்திருக்கிறது. கதவைச் சாத்திக்கொண்டு போக வேண்டியதுதான். நாளை சௌரதியை கூப்பிட்டு எச்சரிக்க வேண்டும் என்று எண்ணித் திரும்பியவன் சட்டென நின்றான்.

இன்னொரு புறமும், அதே ஒளிக் கசிவு இருப்பது ஜன்னல் வழியே பார்வை செல்கையில் தெரிந்தது!

அதாவது, அங்கேயும் கதவு திறந்திருக்கிறது.

என்ன பெண்கள் இவர்கள்!

இடைக் கதவை ஒரு தட்டுத் தட்டிவிட்டு உள்ளே சென்றால் அந்த அறையில் யாரும் இல்லை.

ஆனால், “உனக்குக் கொஞ்சமும் மண்டையில் அறிவே கிடையாதா?” என்று மிகவும் கடுமையான குரலில் ப்ரீதி சீறுவது மட்டும் தெளிவாகக் கேட்டது!

வசுநந்தன் திகைத்து நின்றான்.

அத்தியாயம் -8

வசுநந்தன் திகைத்து நின்றது சில கணமே.

அதற்குள்ளாகவே, அவனுடைய வீட்டில் வசித்துக்கொண்டு அவனுக்கே மண்டையில் அறிவே கிடையாதா என்று கேட்கும் தைரியம் யாருக்கும் இராது என்று தெளிந்துவிட்டான்.

வேறு யாரிடம் இந்தக் கோபம்?

“மனிதன் என்றால், ஓய்வெடுத்துதான் ஆக வேண்டும்., அதற்குத் தூங்குவதும் அவசியம் என்றுகூடத் தெரியாத முட்டாளா நான்? அப்படியெல்லாம் நினைத்தால், நீதான் முழு முட்டாள்! முதலில் இங்கிருந்து போ! போய்த் தொலை!” என்றாள் ப்ரீதி மேலும் கோபமும் உதாசீனமுமாக.

அவர்கள் அக்கா தங்கையாக இருக்கலாம். ஆனால், அவர்களுக்குள் என்ன தகராறு இருந்தாலும், அவளை விடப் பெரியவளை இப்படியா அவமதிப்பது?

பொறுக்காமல், “ஆறேழு வயது மூத்த அக்காவிடம், இப்படித்தான் பேசுவதா? நல்லபடியாக நடப்பது என்றால் என்னவென்றே தெரியாதா?” என்று அதட்டினான் வசுநந்தன்.

திடுமெனக் கேட்ட ஆண் குரலில் திடுக்கிட்டபோதும், யாரோ வந்து என்னை அதட்டுவதா என்கிற ஆங்காரம்தான் ப்ரீதிக்கு அதிகமாக இருந்தது.

எனவே, இன்னமும் அதிகச் சீற்றத்துடன், “ அதைச் சொல்ல நீயார்? என்று, எடுத்தெறிந்து கேட்டாள்.

அவனும் ஒன்று சாதாரணமானவன் அல்லவே! அந்த இடத்தில் ஒரு முடி சூடா மன்னன்! இரு பெண்களும் இருப்பதே அவன் வீட்டில்! அவன் கொடுக்கும் ஊதியத்தில்!அப்படியிருக்க அவனை யார் அலட்சியம் செய்வது?

“அக்காவிடம்தான் பணிவு இல்லை என்று பார்த்தேன். ஆனால், மரியாதை என்கிற வார்த்தையே, உனக்குத் தெரியாது என்று இப்போது தெரிகிறது.” என்றான் ஏளனமாக.

அவளும் லேசில் அடங்குகிறவள் அல்ல! எனவே, “அப்படி மரியாதை கொடுக்க வேண்டிய ஆள் என்று எனக்கு எப்படித் தெரியும்?” என்ற ஆத்திரத்துடன் கேட்டாள்.

“முதலில் வயதுக்கேனும் மரியாதை தரலாம். அத்தோடு நான் யார் என்று தெரியாதா? இந்த இடமே என்னுடையது. உன் அக்கா பணி புரிவதும் என்னிடம் தானே? என்னைப் பார்த்ததே இல்லை என்றா சொல்கிறாய்? “ என்று மடக்கினான் வசுநந்தன்.

ஆர்வமின்மை, வாய்ப்பு நேராதது என்று நேரிடையான அறிமுகம் எப்படியோ நடக்காது போன போதும், அவனைப் பார்த்ததே இல்லை என்று ப்ரீதி சொன்னால், அது அப்பட்டமான பொய்யாகும்! ஒரு கணம் தயங்கிவிட்டு, “பார்த்திருக்கிறேன், பார்த்திருக்கிறேன்! ஆனால் அரையிருளில் பின்னிருந்து ஒருவர் திடுமெனப் பேசினால், அவர் யார் என்று எப்படித் தெரியும்? “ என்று பதிலுக்குக் கேட்டாள் ப்ரீதி.

“சரியான திசையில் கொஞ்சம் யோசித்துப் பார்த்தால், உடனே தெரிந்திருக்கும்! இந்த வீடுகளுக்குள், வேறு யார் உரிமையோடு இப்படி வர முடியும்? “ என்று கேட்டவனின் குரலே சின்னவளை மட்டம் தட்டியது.

கூடப் பிறந்தவளிடமே, இந்தப் பெண் பேசும் முறை சரியில்லை. புத்தி புகட்டித்தான் ஆக வேண்டும் என்பது வசுநந்தனுக்கு.

ஆனால், தன்னை முட்டாள் என்கிறானே என்று அவள் இன்னமும் ஆத்திரப்பட்டாள்!

அவனை மடக்கி வாயடைக்கச் செய்ய வேண்டும் என்கிற வேகத்தில், “ஏன்? திருடனாகக் கூட இருக்கலாம். அவன்தானே, சொல்லாமல் கொள்ளாமல் வீடுகளுக்குள் வருகிறவன்!” என்றாள் ப்ரீதி வெற்றிக் குரலில்.

முன் அறிவிப்பு இல்லாமல், வரலாமா என்று அனுமதி கேளாமல், அவர்களது பயன்பாட்டில் இருக்கும் வீட்டுக்குள் பூனை மாதிரி வந்து நிற்கிறானே! இவனுக்கு, இந்தப் பதில் தேவையேதான்!

ஆனால் அவன் “ஓ!” என்று வியப்பைக் காட்டினான்! “அருமையான கேள்வி! அது போலச் சந்தேகங்கள் இருக்கப் போய்த்தான் கதவைத் திறந்து போட்டுக் கொண்டு வெளியே நிற்கிறாயா? பிரமாதப் புத்திதான், இல்லையா?” என்று கேட்க வேறு செய்தான்.

என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் சற்றே அசடு வழிந்துவிட்டு, “இஇல்லை . . . அப்படி நினைக்கவில்லை. சும்மாப் பதில் சொல்வதற்காகச் சொன்னேன்.” என்று சின்னக் குரலில் ஒத்துக் கொண்டாள் சின்னவள்.

கூடவே எழும்பாத குரலில் ஒரு “சாரியும் சொல்லவே, வசுநந்தனின் மனம் இளகியது.

ஏதோ சின்னப் பெண் நாவடக்கம் இல்லாமல் உளறியிருக்கிறாள். ஆனால், என்ன காரணம் இருந்தாலும், சௌரதி என்றெண்ணி இவள் பேசிய முறை சற்றும் சரியல்ல!

“சரிசரி அது போகட்டும். ஆனால் என் முதல் கேள்விக்கு நீ இன்னமும் பதில் சொலல்வில்லையே?” என்று விடாமல் கேட்டான்.

“எஎன்னது? என்ன கேள்வி?” என்று யோசித்தான் ப்ரீதி.

“அதுதான் அக்காவிடம் மரியாதை . . .” என்று நினைவூட்டினான் அவன். அந்தப் பேச்சுத் தப்பு என்று புரிய வைத்தே ஆக வேண்டும் என்று நினைத்தான் வசுநந்தன். சௌரதி அதைக் கேட்டிருந்தால் எவ்வளவு வருத்தப்பட்டிருப்பாள்?

ஒரு வழியாக நினைவு வந்துவிட்டாலும் சின்னவள் அதற்காக வருத்தம் காட்டவில்லை.

“பின்னே என்ன சார்?” என்று வெளிப்புறம் திரும்பிக் கைகளால் சுற்றிலும் காட்டினாள்.

“பாருங்கள் சார், எவ்வளவு அழகாக இருக்கிறது? சூரிய வெளிச்சத்தில் தெரிவது வேறு விதம். பளீரென்று இருக்கும். ஆனால், நிலவின் ஒளியில் கண்ணோடு மனதுக்கும் குளிர்ச்சியான இந்த இயற்கைக் காட்சியை வரைய நினைத்தேன். “ஞஜை“ என்று இடையூறு செய்தால் எரிச்சல் வராதா? அதுதான் அவள் மண்டையில் உறைக்கிற மாதிரிச் சொன்னேன்.” என்றாள் அப்போதும் அலட்சியமாகவே!

தமக்கையிடம் அவள் காட்டிய உதாசீனம் அவனை உறுத்தியது. அதுவும் நல்லதற்குச் சொன்னவளை அவமதிப்பதா?

அக்கா தங்கைக்குள் எப்படியோ போகட்டும் என்று அவனால் விட முடியவில்லை.

எனவே, “எல்லாம் உன் ஆரோக்கியத்துக்காகச் சொன்னதுதானே?” என்று எடுத்துச் சொன்னான்.

இவனும் அக்கா பக்கம்தான் பேசுகிறான் என்று ப்ரீதிக்குக் கோபம் வந்தது. அவளே கூட, இவனை ஏவி விட்டிருக்கலாம். ஏவி விட்டுவிட்டுக் கண் காணாமல் மறைந்து நிற்கிறாள் போல!

புருவம் சுளித்து, “அதென்ன எனக்காகச் சொல்வது? எனக்கு எது

நல்லது என்று எனக்குத் தெரியாதா? எல்லாம் தனக்குத்தான் தெரியும் என்று எண்ணம். இந்த வயது கூடினவர்கள் எல்லோருக்குமே இதே புத்தி!" என்று அவனுக்கும் சேர்த்து ஒரு போடு போட்டாள்!

வயது கூடினவர்களா?!

வசுநந்தன் திகைத்து நோக்கும்போதே, ப்ரீதிக்குச் சலிப்பு வந்துவிட்டது.

"உங்கள் எல்லோருக்குமே எப்போதும், ஆரோக்கியம் ஓய்வு தூக்கம் என்று அதே பாட்டு. கலையில் உண்மையான ஈடுபாடு என்றால் புரிவதே இல்லை. ஆர்வம், முயற்சி பற்றி யோசிப்பதும் இல்லை. போங்கள் சார், எல்லாவற்றையும் கெடுத்துக் குட்டிச்சுவர் ஆக்குவதற்கு, என் அக்கா ஒருத்தி போதும்! நீங்கள் வேறு என்மூடைக் கெடுக்காமல் இங்கிருந்து . . . ." என்று எரிச்சல் பட்டவாறே, அருகில் ட்ரேயில் வைத்திருந்த சில பாட்டிகளில் ஒன்றை எடுத்து, அதன் மூடியைத் திறந்தவள், உடனேயே "ஆ . ." என்று அலறிவிட்டாள்.

அதே சமயம், அவனுமே "ஐயோ!" என்று கண்களைப் பொத்திக் கொண்டான்.

கணகளில் பயங்கர எரிச்சல்!

"என்ன பண்ணித் தொலைத்தாய்? கண்ணைத் திறக்க முடியவில்லையே!" என்று வசுநந்தன் அதட்ட, " ஐயோ ஐயோ!" என்று ப்ரீதியும் கத்திக் கூச்சலிட்டாள்.

இந்தச் சத்தத்தைக் கேட்டதில், அப்போதுதான் கண்ணயர்ந்திருந்த சௌரதியின் தூக்கம் கலைந்து, "என்ன என்ன? ஐயோ, ப்ரீதி என்னம்மா?" என்ற பதறியவாறே, அவள் அங்கே ஓடி வந்தாள்.

வசுநந்தனும், தங்கையும் நின்ற நிலையைப் பார்த்து, தப்பாக ஊகித்த சௌரதிக்குப் பெரும் அதிர்ச்சியாக இருந்தது.

"கடவுளே, உன்ன மனிதர் நீங்கள்? அவள் சின்னப் பெண் அவளிடமா தப்பாக நடப்பது? டாக்டர் சார் பெரிதாக உத்திரவாதம் கொடுத்தாரே! " என்று அவனிடம் சீறியபடி தங்கையிடம் ஓடினாள்.

கண் எரிச்சலூடே, இந்த வார்த்தைகள் ஆத்திரமூட்ட, "வாயை மூடு.!" என்று வசுநந்தன் உறுமினான்.

கர்ஜனையாக வெளிப்பட்ட அந்த அதட்டலில் ஒரு கணம் மௌனம் நிலவ, "இங்கே . .இந்தப் பக்கமாக ஒரு வாஷ்பேசின் உண்டே . ." என்று கைகளால் துழாவியவாறே அவன் நடந்தான்.

தங்கையின் தோள்களைப் பற்றியவாறே சௌரதி பார்த்துக் கொண்டிருக்க, அவன், கண்களில் நீரை ஊற்றிக் கழுவினான்.

அவன் என்ன செய்கிறான், அங்கே என்ன நடந்தது, நடக்கிறது என்று ஒன்றும் புரியாமல் விழித்துக்கொண்டு நின்ற அவளைச் சிவந்திருந்த கண்களால் உறுத்து நோக்கி, "உனக்கோ, உன் தங்கைக்கோ கொஞ்சமேனும் மூளை இருந்தால், அவளையும் இப்படிக் கழுவச் சொல்லு." என்றான் அப்போதும் உறுமலாகவே.

இன்னமும் எதுவும் தெளிவாகாதபோதும், அவன் சொல்வதைச் செய்வது மேல் என்று தோன்றத் தங்கையின் கையைப் பற்றி, வாஷ்பேசின் பக்கம் திருப்பினாள்.

ஆனால் தன்னைப் பற்றியிருந்த தமக்கையின் கையைத் தட்டி விட்டுவிட்டு, "இப்போது என் கண் காந்துகிறதே, என்ன செய்வது? நான் இவ்வளவு வரைவது கூடக் கடவுளுக்குப் பொறுக்கவில்லையா? என் பார்வை போய்விடுமா? ஐயையோ! அக்கா நான் என்ன செய்வேன்?" என்று அச்சத்துடன் கதறியபடியே, சற்று முன் தட்டிவிட்ட சௌரதியின் கையைத் தேடித் துழாவினாள் ப்ரீதி.

சில வினாடிகளுக்கு முன்னர் தன் கையைத் தங்கை தட்டிவிட்டதை அடியோடு மறந்து, அவளது கைகளை ஆதரவாகப் பற்றி, "ஐயோ, அப்படியெல்லாம் ஆகாதுடாக் கண்ணு! ஆனால் என்ன என்று தெரியவில்லையே! எதற்கும் சார் சொன்னது போலக் கண்களைக் கழுவிப் பார்க்கலாம், வா." என்று ப்ரீதியை வாஷ்பேசின் பக்கமாய் நடத்திச் சென்றாள்.

"ஒரு வழியாய் . . .ப் புரிந்ததே!" என்று பொறுமையிழந்த குரலில் முணுமுணுத்துவிட்டு, "நான் செய்தது போலக் கழுவு. கிண்ணம் மாதிரிக் கைகளில் தண்ணீரை ஏந்தி, அதில் கண்களை அகல விழித்து விழித்துப் பார். உடனே எல்லாம் சரியாகிவிடாது. வேதனை ஓரளவுதான் குறைகிறது. என்றாலும், என்னால் பார்க்க முடிகிறது. முயற்சி செய்து பார்." என்று நன்கு புரியும்படித் தெளிவாகச் சொன்னான் வசுநந்தன்.

ஒருவாறு விஷயம் விளங்க, ப்ரீதியின் கையைப் பிடித்துப் போய் பேசின் முன் நிறுத்தித் தண்ணீரைத் திறந்துவிட்டு, "பெப்பர் ஸ்ப்ரே அடித்தாயா? ஏன்?" என்று சற்றுத் தணிந்த குரலில் தங்கையைக் கேட்டாள்.

ஆயினும், அவனுக்குக் கேளாதிருக்க வாய்ப்பில்லை.

தன் கூர் பார்வையை அவர்களிடம் திருப்பி அவன் கவனிக்க,

கண்களைக் கழுவியபடியே, “பெப்பர் ஸ்ப்ரேயா? நானா? இல்லையே! நான் பெயின்டைத்தானே திறந்தேன்!” என்றாள் ப்ரீதி.

“பின்னே? உங்கள் இரண்டு பேருக்கும் இந்தக் கண் எரிச்சல் எப்படி வந்தது? காரணம் புரியவில்லையே?” என்றாள் சௌரதி.

இன்னொரு தரம் தண்ணீரில் கண்களை விழித்துக் கழுவிவிட்டு, “ப்ராமிஸ்க்கா. நான், என் பெயின்ட் பாக்சில் இருந்து, நிலா ஒளி போலத் தோன்றுவதற்காக, ரொம்ப லேசான நீலம் கலந்த வெள்ளையைத்தான் எடுத்துத் திறந்தேன். . .நிஜம்! நான் வேறே எங்கிருந்தும் பெப்பர் ஸ்ப்ரேயை எடுத்து வரவும் இல்லை., அதையார் மேலும் அடிக்கவும் இல்லை. காட் ப்ராமிஸ்!” என்றாள் சின்னவள்.

“கடவுளே!” என்றாள் தமக்கை! “நீ என்ன சொல்கிறாய்? நீ எப்போதும் கையோடு வைத்திருக்கும் பெய்ன்ட் டப்பாவில் இருந்தால், சட்டென எடுக்க உனக்கு வசதியாக இருக்கும் என்று சொல்லி விட்டுத்தானே, ஸ்ப்ரேயை அதில் வைத்தேன்?” என்று அடிக் குரலில் கூறினாள்.

“பரவாயில்லை. ரொம்பப் புத்திசாலி அக்காவும் கெட்டிக்காரத் தங்கையும் என்று தெரிகிறது. பரமார்த்த குருவின் சீடர்கள், உங்கள் கிட்டே கூட வர மாட்டார்கள்!” என்று ஏளனமாகக் கூறினான் வசுநந்தன்.

என்ன பதில் சொல்ல முடியும்? காரணமற்றுப் பாதிக்கப்பட்டவன், அவன் அல்லவா?

இருவரும் வாயடைத்து நிற்க, “இனியேனும் கதவைத் தாளிட்டுக்கொண்டு தூங்குங்கள். “ என்று உரைத்தவன் யோசித்துப் பதில் கூறக் கூட அவகாசம் கொடுக்காமல் விரைந்து வெளியே சென்றுவிட்டான்.

அப்பாடி. . . என்று இருந்தபோதும், அசட்டுப் பட்டம் பெருமளவு தனக்குத்தான் என்று ப்ரீதிக்குப் புரிந்தது.

“பெரீதாகச் சொல்ல வந்துவிட்டார். கதவை என்ன வேண்டும் என்றா, திறந்து போடுவார்கள்? அந்தப் பக்கம் போய்ப் பார்த்தேன். செடி கொடிகளின் தோற்றம் சரியாக இல்லை. இந்தப் பக்கம் பார்த்தால், தூரத்து மரங்களுடன் அழகாக இருந்தது. செம மூடு வந்துவிட, அப்படியே வரையத் தொடங்கிவிட்டேன். அந்த வேகத்தில் அந்தக் கதவை மூட மறந்துவிட்டால், அதற்காகப் பரமார்த்த குருவுடைய சீடன் என்றெல்லாம் சொல்ல வேண்டுமா? அது . . . அந்த மட்டி, மடையன்,

முட்டாள், மூடன் என்பார்களே, அவர்கள்தானே? என்ன கொழுப்பு பாரேன்!

“ஆனால், அந்த ஆள்தான் அப்படி என்றால், நீ ரொம்ப நல்லவள் மாதிரிக் காட்டிக்கொள்ள வேண்டுமாக்கும்? அன்றைக்குப் பெப்பர் ஸ்ப்ரே பற்றி நீ சொன்னாய்தான். ஆனால் அதன் அடையாளம் நீ சொன்னபோது, நான் ஜாலியாகச் சும்மாவா இருந்தேன்? எனக்கு எத்தனை மனக் கவலைகள்! என் வாழ்வாதாரமான என் ஓவியக்கலையையே தொடர முடியாதோ என்று, என் வாழ்க்கை அந்தரத்தில் தொங்கிக்கொண்டு நின்றது. அந்தக் கவலையில், நீ சொன்னதை நான் சரியாகக் கவனிக்கவில்லை. ஒத்துக் கொள்ளுகிறேன். அது என்ன, உலக மகாத் தப்பா? என்னமோ என் கெட்ட நேரம்! இந்த அளவுக்கு ஆகிவிட்டது. சரி, சா . .ரி! இவ்வளவு பெரிய சாரி போதுமா?

“இப்போது, ஏதேதோ வகையில் இரண்டு பேருமாக வரைய விடாமல் என் மூடைக் கெடுத்து விடீர்கள். கண் வேறு இப்படி! மூடு வந்தால் கூட, என்னால் வரைய முடியாது! தொலையட்டும்! நான் போய்த் தூங்கவேனும் செய்கிறேன்.” என்று, என்னவோ எல்லாத் துன்பமும் தனக்குத்தான்., அதுவும் சௌரதியால் மட்டுடே வந்தது என்பது போல ஒரு மூச்சு குறைப்பட்டுவிட்டுத் தட்தட் என்று நடந்து போய்விட்டாள்.

அவளுக்குக் கோபமாம்!

அப்படி என்றால், சௌரதி எங்கே போய் முட்டிக் கொள்வது? அவள் மேல் தப்பே கிடையாது என்பதோடு, தங்கையின் நலனுக்காகவே செய்தது!

ஆனால், இதையெல்லாம் எடுத்துச் சொன்னால் சின்னவளின் கோபம்தான் அதிகமாகும். புலம்புவது, அழுவது என்று தொடரும்.

போகட்டும். இப்போது தூங்கவேனும் போகிறாளே. அதையாவது செய்யட்டும்!

மறுநாள் காலையில் வசுநந்தனிடம் சென்று, முன் தினத்துக்காக வருத்தம் தெரிவித்தாள். விளக்கமும்.

“ சாரி. அவள் சின்னப் பெண். ஆனால், அம்மா வளர்ப்பு. தெரிந்து தப்புப் பண்ண மாட்டாள். அசட்டுத்தனமாக, அவளாகவே எதில் மாட்டிக் கொள்வாளோ என்று எனக்குச் சிறு கவலை உண்டு. இந்த ஸ்ப்ரேயைப் பெயின்ட் பொருட்களோடு சேர்த்து வைத்தால், அவளுக்கு

எடுக்க எளிதாக இருக்கும் என்று நினைத்தேன். ஆனால் . . . அவளிடம் சரியாகச் சொல்லவில்லை . . சாரி. நீங்கள் கஷ்டப்படும்படி ஆகிவிட்டது. . .” என்று சின்னக் குரலில், ஒருவாறு கூறி முடித்தாள்.

“பரவாயில்லை. பரவாயில்லை. அவள் சின்னப் பெண்தானே! நீயுமே, இதைப் பெரிதாக நினைக்க வேண்டாம்.”என்றவனுக்கு, முதல் முறையாக அவளைப் பற்றி முழுமையான ஒரு நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டது.

அவன் முதலில் நினைத்த மாதிரி இல்லவே இல்லை என்று எண்ணினான். அத்தோடு தப்பு செய்தவள் தங்கையே

மாசிலாமணி அங்கிள் சொன்னது போல, நல்ல விதம்தான் போல என்று யோசனை ஓட, தம்பியைப் பற்றி விசாரித்தான்.

தம்பியைப் பற்றி, இனிக் கவலைப் படவே நேராது என்றாள் அவள். தப்பு செய்கிறோம் என்ற மன வருத்தம், குற்ற உணர்ச்சியோடு இதை விட்டுவிட வேண்டும் என்ற ஆர்வமும் இருந்ததால் இவ்வளவுக்கு நன்றாகி விட்டார் என்றாள்.

“இன்னும் ஒரு சிறு முயற்சி அவர் பக்கம் இருந்து வர வேண்டும். அண்ணனால், உன்னால் என்று எண்ணாமல், தன் முயற்சியாலும் சாதித்திருப்பதாகக் கருதவேண்டும். அந்த உறுதி வந்துவிட்டால், அப்புறம் சிறு கவலை கூட வேண்டாம். “ எனன்றாள் அவள்.

“அந்த நாள் சீக்கிரமாக வந்து விட்டால் நல்லது. அந்தப் பெண் பவித்ரா வேறு துளைத்தெடுக்கிறாள். முழுமையான ஓய்வு எடுக்கப் போனான், அவன் இருக்குமிடம் எனக்கே தெரியாது என்று எத்தனை நாள்தான் புளுகுவது? இப்போது, இது பற்றிய விவரம் தெரிந்த நீயே சொல்லும்போது, ரொம்ப நிம்மதியாக இருக்கிறது. எல்லாம் சீக்கிரமே நடக்கும் நம்பிக்கையும் வருகிறது!” என்று முறுவலித்தான் வசுநந்தன்.

இவனெல்லாம் ரொம்பச் சிரிக்கக் கூடாதுப்பா என்று உள்ளூர எண்ணிக் கொண்டாள் சௌரதி. அதே சமயம், அவர்களது நம்பிக்கை பலித்து, ரகுநந்தன் வெகு விரைவில் குணமாகி, வசுநந்தன் இன்னமும் முழுமையாகச் சிரிப்பதைக் காண வேண்டும் என்றும் அவள் ஆசைப்பட்டாள்.

மற்றது எப்படியோ? தம்பி பற்றி அவனது சிரிப்பை விரைவில் அவள் காணத்தான் போகிறாள்! அது மட்டும் எப்படியும் நிச்சயம்!

ஆனால், இந்த நம்பிக்கை பொய்யாகும் விதமாக, ரகுவுடன் எப்போதும் கூடவே இருக்கும் பணியாள் மாதையன், மறுநாள்

சௌரதியிடம், வாடிய முகத்துடன் வந்து நின்றான்.

“என்ன மாதையன்? என்ன விஷயம்? ஏன் முகம் ஒரு மாதிரி இருக்கிறது? உடம்பு சரியில்லையா? விடுப்பு வேண்டுமா?” என்று பரிவாகக் கேட்டாள் அவள்.

“ஐயோ, எனக்கு ஒண்ணுமில்லம்மா. நான் நல்லாத்தான் இருக்கேம்மா.” என்றான் அவன் . “ஆனால் . . “ என்று தயக்கத்துடன் இழுத்தான்.

வயிற்றுக்குள் ஏதோ பிசைய, “என்ன மாதையா? என்ன சொல்லு. ரகு ஏதேனும் சொன்னாரா?” என்று அவசரமாகக் கேட்டாள் சௌரதி.

“ஆ .ஆமாங்கம்மா! நம்ம சின்னத் தம்பி என் கிட்டே வந்து, மாதையா, மாதையா இங்க வான்னு தனியாக் கூட்டிப் போச்சுது. சரிய்யான்னு கூடப் போனாக்க, ஏதோ மருந்து வாங்கி வரச் சொல்லுது. இத்த எதுக்காகத் தனியாக் கூட்டிப் போய்ச் சொல்லணும்? வயசாளி, நான் எங்கய்யா போய் வாங்க முடியும். வேணுமானாப் பெரிய தம்பி கிட்டே சொல்லி வாங்கலாமின்னு சொன்னா, ஐயாயிரம் ரூபா தர்றேன்., யாருக்கும் சொல்லாதேன்னு சொல்லுதும்மா! எனக்குப் பக்குன்னு ஆயிட்டுது. இது, நெசமான நல்ல மருந்துன்னா, என்னத்துக்கு ஒளிவு மறவு? என்னமோ தப்பு மருந்தைத் தானாத் தின்னு, அதாலேதானே சின்னத் தம்பிக்கு இவ்வளோ கஸ்டமாம்! வெளியே சொல்லாதிருக்க, அஞ்சு ஆயிரமின்னா? தப்பாத்தானே இருக்கணும்? அதாம்மா உங்க கிட்டே ஓடியாந்தேன். “ என்று கவலையாகச் சொன்னான் மாதையன்.

பணத்தை வாங்கிப் பைக்குள் போட்டுக் கொள்ளாமல், இந்தக் காலத்தில் கூட, எவ்வளவு விசுவாசமாக இருக்கிறான்!

வசுநந்தனையும் பார்த்தாலே, இவன் முகம் மலர்வதைக் கண்டிருக்கிறாள்!

சகோதரர்களிடம் மாதையனுக்கு அவ்வளவு பிரியம்!

ஆனால், அவன் சொன்ன சேதியில் சௌரதிக்குக் கதி கலங்கிவிட்டது எனலாம்.

முன்தினம்தான், அவள் அவ்வளவு நம்பிக்கையாகச் சொன்னதென்ன? நேர் மாறாக இன்று நடப்பது என்ன?

வசுநந்தன் நொந்து போவானே என்று, சௌரதியின் மனம் துடித்தது.

சட்டென எழுந்து, “சரியாகத்தான் செய்திருக்கிறாய், மாதையா.

இப்போதே ரகுவிடம் போய்ப் பேசுகிறேன். ஆனால் நீ சொல்லி நான் உடனே போனதாக இருக்க வேண்டாம். எங்கேயாவது போய்விட்டு, சற்றுப் பொறுத்து வா.” என்று பணியாளிடம் கூறிவிட்டு, சௌரதி கிளம்பிப் போனாள்.

அத்தியாயம் -9

போய்ப் பார்த்தால், ரகுநந்தன் அன்று மிகவும் சோர்வாக இருந்தான்.

வழக்கமான உற்சாகத்துடன் கூடிய "குட்மார்னி' இல்லை., வரவேற்பான புன்னகை, பார்வை எதுவும் இல்லை.

இது போலப் போதைப் பிரச்சினைகளில், பழைய அலை அடிப்பது . . முதலில் அடிக்கடியும், பிறகு எப்போதேனும் தோன்றுவது இயல்புதான்.

ஆனால், ரகுவிடம் அவளுக்கே பெரும் நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. எனவே இப்போது ஏமாற்றமும் பெரிதாக இருந்தது.

அவனைச் சற்றுக் கூர்ந்து பார்த்ததில், அவன் போதை மருந்தின் ஆசையில் அதைக் கேட்பதாக அவளுக்குத் தோன்றவில்லை. இது, வேறு தவிப்பு!

உள்ளே போய் இன்னோர் இருக்கையில் அமர்ந்து, "என்ன ரகு, . ..காமிராவை மிஸ் பண்ணுகிறீர்களா?" என்று மெல்லக் கேட்டாள்.

பார்வையைக் குட அவள் புறம் திரப்பாமல், "காமிராவை அல்ல. அவளை! என் பவியை! " என்று சோர்ந்த குரலில் பதில் வந்தது.

"ஓ!" என்றாள் செளரதி.

எதையுமே மறைக்காமல் அவளிடம் பேசுகிறவன், ரகுநந்தன். தொழிலை விடவும், அவனுடைய அந்தப் பவித்ரா பற்றிக் காது ஜவ்வு கிழியும் அளவுக்கு அவளிடம் சொல்லியிருக்கிறான்.

அவளது தோற்றம், பேச்சு, நடை, எடை, பாவனை . . எல்லாமே!

இப்போது புதிதாக என்ன?

என்ன என்று அவன் சொன்னான்.

"இன்று அவளை, நான் முதல் முதலாகச் சந்தித்த நாள். வேறு ஒரு படத் தொடக்க விழா! பவியுடைய அப்பா ஃபைனான்சியர் என்பதால், கூட அவளும் வந்திருந்தாள். முதல் முறையாகப் பார்த்ததுமே, எங்கள் இருவருக்கும் இடையே ஏதோ தோன்றிவிட்டது. ஆனால் அப்போதே போதை மருந்தை லேசாகத் தொடங்கியிருந்தேன். பவியைப் பார்த்த பிறகு, அவளுடன் பேசிப் பழகத் தொடங்கிய பிறகு, கிட்டத்தட்ட விட்டும் விட்டேன்.

“ஆனால், அடுத்து இந்தப் படத்தின் வெளியீடு, தோல்வி!

“அவள் அதை அலட்சியம்தான் செய்தாள் என்றாலும், அவள் முன் எனக்குத்தான் தலைக் குனிவு தாங்கவில்லை. முதலில் அளவு சற்றுக் குறைவாக இருந்தபோது, அவளிடம் எளிதாக மறைக்க முடிந்தது. பிறகு அடிக்கடி போட வேண்டிய நிலைமை. மறைக்க முடியாது போலத் தோன்றவும், முழு ஓய்வு தேவை என்று அவளுக்கு எழுதி வைத்துவிட்டு, அண்ணனிடம் ஓடி வந்துவிட்டேன்.

“அதன் பின் நடந்தது உங்களுக்குத் தெரியும், சௌரதி. முழுமையாக ஜெயித்துவிட்டதாகத்தான் நினைத்தேன். ஆனால், இன்று தாங்கவில்லை. . .

“ஏன் தெரியுமா? முதலில் சந்தித்த இந்த நாளை நினைவில் கொண்டு, சென்ற ஆண்டு இதே நாளில்தான் நாங்கள் திருமணம் செய்வதாக முடிவு செய்தோம். அடுத்த ஆண்டு . .அதாவது இன்றைத் தேனிலவாகக் கொண்டாடவும் தீர்மானித்திருந்தோம். “ஆனால், என்ன மாதிரி உட்கார்ந்திருக்கிறேன், பார்த்தீர்களா? இன்று அவளுக்கும் எவ்வளவு வேதனையாக இருக்கும்? அவளது அழகான பூமுகம் கசங்கிக் கண்ணீரில் . . .என்னால் நினைக்கக் கூட முடியவில்லை, சௌரதி!

“நான் அவளை முதலில் சந்தித்தபோது, பூ மாதிரி என்ன அழகு என்றுதான் நினைத்தேன்! ஆனால் அந்தப் பூ இப்போது எப்படி இருக்கும் என்று நினைக்கும்போது . . என்னால் முடியவில்லை, சௌரதி! அதனால்தான் . . .

“மாதையன் சொல்லித்தானே வந்தீர்கள்? என் நிலைமை உங்களுக்குப் புரிகிறதுதானே? நீங்கள் சொன்னால் அவன் செய்வான் . அதனால் . . இந்த ஒரு தரம் மட்டும் . . .”

கேட்பதே தப்பு என்று புரிந்ததால், ரகுநந்தன் குனிந்த தலையை நிமிர்த்தக் கூட இல்லை. முடியவில்லை!

அவனது தவிப்புப் புரிந்தபோதும், இந்த “ஒரு தடவை” ஒரே தடவையாக நிற்காது என்று அறிந்திருந்ததால், சௌரதி அதற்கு இடம் கொடுக்க விரும்பவில்லை.

வேறு யோசித்து, “பவித்ராவைப் பூ என்றீர்களே, அந்தப் பூவை நீங்களே நாசம் செய்வீர்களா?” என்று சற்றுக் கடுமையான குரலில் கேட்டாள்.

“மாட்டேன், மாட்டேன். மாட்டவே மாட்டேன்! ஆனால் ஒரே ஒரு

தரம் . . இன்று மட்டும் . . “ என்று கெஞ்சலாகக் கேட்டான் அவன்.

“இந்த ஒரே ஒரு தரம் என்று தொடங்கினால், அப்புறம் அந்த ஒரே ஒருதரம் இன்னொரு தரம், இன்னும் ஒரே ஒரு தரம் என்று ஒரேயடியாக உங்களை உள்ளே இழுத்துவிடும், ரகு. இது பற்றி நான் அறிந்தவள் அல்லவா? என் சொல்லை நம்புங்கள். கடைசியாகப் பவித்ரா உங்களைப் பிரிந்து, வாழ்நாள் முழுதும் வாடுவதற்கு, நீங்களே காரணம் ஆகாதீர்கள். அந்த மாதிரி நிலைமையை அவள் தாங்குவாளா? அல்லது நீங்கள்தான் தாங்குவீர்களா? “ என்று கேட்டாள் அவள்.

“ஆனால் இன்று அவளை மறக்க முடியவில்லையே!” என்றபோது, அவன் கண்களில் கண்ணீரே பெருகலாயிற்று.

“மறப்பானேன்?” என்று கேட்டாள் சௌரதி.

அவன் திகைப்புடன் நோக்கவும், “பவித்ராவை உங்களால் மறக்க முடியாது என்று எனக்குத் தெரியாதா? மறக்க முயற்சி செய்து. அது முடியாமல் வருந்துவதை விட, அவளைச் சந்தோஷமாக நினையுங்கள். இன்னும் உருப்படியாக, அவளைப் பற்றி எழுதுங்களேன். ஒரு கடிதமாக. . .அவளைப் பற்றி நினைப்பது, தேடல், வாடல் எல்லாமே! பிறகு எல்லாம் நன்றாக ஆன பிறகு அவளிடமே காட்டலாம். புரிந்துகொண்டு இன்னும் அன்பாக இருப்பாளே! அந்த நல்ல நாட்களை எதிர்பார்த்து எழுதுங்கள்! மனதில் மேலே மேலே அடைப்பதை வார்த்தைகளில் கொட்டிவிட்டால், மனமும் லேசாகிவிடும். அப்படியே, இந்தப் படுகுழியும் மறந்துவிடும்! “ என்றாள் அவள்.

என்னவோ இந்த யோசனை பிடித்துப் போய் எழுந்து சுற்றுமுற்றும் பார்த்தவன், அவளிடமே திரும்பி வந்து, “எதில் எழுத? லெட்டர் பாட் எதுவுமே இல்லையே! யாருக்கும் எந்தத் தகவலும் கொடுக்கக் கூடாது என்று, மொபைல், பென், பேப்பர் எதுவுமே வைத்துக் கொள்ளவில்லையே! எப்படி எழுதுவது?” என்று கேட்டான்.

“இருங்கள். பரீதியிடம் ஏதாவது இருக்கும். இதோ போய் வாங்கி வருகிறேன்.” என்று எழுந்து அடுத்திருந்த அவர்களது குடிலுக்குச் சென்றாள்.

வாயிலில் நின்று, எழுதக் காகிதம் கேட்க எண்ணித் தங்கையை அழைத்தால், பதிலே வரவில்லை. உள்ளே போய்ப் பார்த்தால், குளியல் அறையில் ஷவரை முழுதாகத் திறந்து முழு வேகத் தண்ணீரில் குளிக்கும் ஒலி கேட்டது.

குளிக்கும்போது கூப்பிட்டால், ப்ரீதிக்குப் பிடிக்காது. ஒன்று பதில்

சொல்ல மாட்டாள். அல்லது பெரிய வாக்குவாதமே நடக்கும்..

அதற்கு நேரமில்லை. ரகுநந்தனின் மனம் இந்தத் தாமதத்தில் மறுபடி சோர்ந்து, இது வேண்டாம் என்று ஒதுக்கிவிடுமுன், எழுதும் கருவிகளைக் கையில் கொடுத்தாக வேண்டும்.

அவசரமாகச் சுற்றுமுற்றும் பார்த்தபோது, கையில் கிடைத்த தடிமனான பெரிய டிராயிங் நோட்புக் கிடைத்தது. அது, விலை கூடுதல் என்று ஞாபகம்தான். ஆனால், இப்போது பணம் பிரச்சினை ஆகாது! அந்தக் கணக்கைப் பார்த்துக் கொண்டிருக்கவும் கூடாது.

அந்த ஏ4 காகிதங்கள் அடங்கிய நோட்புக்கை எடுத்துச் சென்று ரகுநந்தனிடம் கொடுத்தாள். கைப்பையில் இருந்து, பால் பென்னையும் எடுத்துக் கொடுத்தாள்.

என்ன பெரிதாக? இந்த ரகுவுக்காகத்தானே, அவர்கள் இங்கே வந்திருப்பதே! அவன் எழுதப் போவது, ஒரு பக்கமோ, இரண்டு பக்கமோ? அதற்காகத் தங்கை ஒன்றும் சொல்ல மாட்டாள் என்று சௌரதி மனப் பூர்வமாக நம்பினாள்.

ஆனால், நம்பிக்கை எல்லாம் நிஜமானால், அப்புறம் வாழ்க்கையில் என்ன இருக்கிறது?

உள்ளே அடைத்துக் குமுறிக் கொண்டிருந்ததற்கு ஒரு வடிகால் கிடைத்த மாதிரி உணர்வில், ரகுநந்தன் எழுதிக்கொண்டே போனான்.

பக்கம் பக்கமாக!

எதையேனும் யோசிப்பதற்குக்கூட நிறுத்தக் காணோம். சௌரதிக்கும் குறுக்கிடப் பிடிக்கவில்லை. ஆனால், நேரம் போய்க்கொண்டே இருந்தது, வேறு விதமாக அவளைக் கவலைப்பட வைத்தது.

ப்ரீதி குளித்து முடிக்க நேரமாகும். குளித்துவிட்டு வந்தாலுமே, உடனே இந்த நோட்டுப் புத்தகத்தைத் தேட மாட்டாள்.

முகம் திருத்தி, க்ரீம் போட்டுத் தேய்த்து, கண்ணாடியில் பார்க்கும்போது உடை சரியாக அமைந்து . . .இதெல்லாம் முடிய நேரமாகிவிடாதா?

சௌரதி மனக்கணக்குப் போட்டுக் கொண்டிருக்கும்போதே, ப்ரீதியே அங்கே வந்து நின்றாள்.

வந்ததுமே, ஒரே கத்தல்! “அறிவிருக்கிறதா உனக்கு? மூளையிருக்கிறதா? நான் குளிக்கிறபோது ஓசைப்படாமல் வந்து, என்

கான்சான் பேடைத் திருடிக்கொண்டு வந்திருக்கிறாயே! திருட்டு . . .திருட்டுப் பூனை! “

சௌரதிக்கு அதிர்ச்சிதான். மரியாதையே இல்லாமல் என்ன பேச்சுப் பேசுகிறாள்! மரியாதை கூட வேண்டாம், என்ன ஏது என்று விவரம் கேட்கவேனும் வேண்டாமா?

தங்கையின் பேச்சு ஊசியாகத் தமக்கையைத் தைத்தது. அதை விடவும், இதனால் ரகுநந்தன் பாதிக்கப்பட்டுவிடக் கூடாதே என்பதுதான் அவளுக்குப் பெரிதாகத் தோன்றியது.

எனவே, “ப்ரீதி, ரகுநந்தன் எழுத எடுத்து வந்தேன். அது ஒன்றும் உலக மகாக் குற்றம் அல்ல. ப்ளீஸ், வாயை அடக்கிப் பேசு!” என்று சின்னவளை அதட்டினாள்.

ஆனால், எரிகிற தீயில் எண்ணையை ஊற்றியது போலப் ப்ரீதி இன்னமும் ஆங்காரமாகக் கத்தினாள்.

எதற்காக அடங்குவது? அவளுக்கு எல்லாம் தெரியுமாம். அவள் குளிக்கிறபோது, பார்த்து உள்ளே வந்து, விலை உயர்ந்த, இந்தக் கான்சன் பேடை, சௌரதி திருடிக் கொண்டு வந்திருக்கிறாள். இப்படிப்பட்ட இவள் சொல்ல, அவள் என்ன அடங்குவது?

நியாயமாகப் பார்த்தால், தப்பு செய்த சௌரதிதான், ப்ரீதிக்குப் பணிய வேண்டியவள்.! திருட்டுக் குற்றம் செய்தவள்!

கோபத்தில், ப்ரீதியின் வாயில் வார்த்தைகள் அனலாய்ப் பொரிந்தன.

தனக்கு ஒன்று செய்யப் போய், சௌரதி அவளுடைய தங்கையிடம் அவமானப் படுவது பொறுக்காமல், ரகுவும் குறுக்கிட்டு, “அக்காவிடம் மரியாதையாகப் பேசு!” என்று சின்னவளை அதட்டினான்.

தங்கையின் குணம் அறிந்த சௌரதி, அவள் ஏதாவது தைக்கச் சொல்லி, ரகு அதிகமாக நொந்து விடக் கூடாதே என்று, இருவருக்கும் இடையே ஓடி வந்தாள்.

ப்ரீதியின் பக்கம் திரும்பி நின்று, “யோசித்துப் பேசு, ப்ரீதி. நாம் இங்கே எதற்காக வந்தோம் என்பதை மறக்காதே!” என்று வேகமாகக் கூறினாள்.

“அதை, என் கான்சன் பேடைத் திருவதற்கு முன்னால் நீ யோசித்திருக்க வேண்டும்! செய்வதெல்லாம் செய்துவிட்டு, என்னைப் பேச விடாமல் அடக்குகிறாயா?” என்று உச்ச ஸ்தாயியில்

கூச்சலிட்டாள், மற்றவள்.

சௌரதி கூறியபடி, வேறு புறமாகக் கொஞ்ச நேரம் சுற்றிவிட்டுத் திரும்பி வந்த மாதையனுக்குச் சற்றுத் தூரத்திலேயே கோபக் குரல்கள் கேட்டன.

ஓடி வந்து ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தவன், மூவரும் நின்ற நிலையையும், கத்திப் பேசுவதையும் பார்த்து அரண்டு போனான்.

கதி கலங்கிப் போன அவன் விழுந்தடித்துக்கொண்டு, திரும்பி ஓடிப் போனான். சுமார் அரை மணி நேரம் கழித்து, அங்கே வேகமாக வந்து சேர்ந்த வசுநந்தனுக்குச் சற்று நேரம் ஒன்றும் புரியவில்லை.

மாதையன் அச்சத்துடன் அவனிடம் தெரிவித்தற்கு நேர் மாறாக, அங்கே முழு அமைதி நிலவியது.

சன்னச் சிரிப்பும், சிறு குரலும் வந்த பக்கமாகச் சென்று பார்த்தால், குடிலின் அந்தச் சுவரை ஒட்டி அமர்ந்து, ப்ரீதி, ரகுநந்தனுக்கு வரையக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தாள். “இப்படி ரகு அண்ணா, இது போல!” என்று

இன்னும் பார்வையால் துழாவுகையில், வீட்டினுள் ஜன்னலோரமாக நின்று, சௌரதி, இதைப் பார்த்துக் கொண்டிருப்பதும் தெரிந்தது!

ஆளுக்கொரு ஸ்கெட்ச் பாடை வைத்துக்கொண்டு, வரைவதில் ஈடுபட்டிருந்த சின்னவர்கள் கவனம் அதிலேயே இருந்தது. வசுநந்தன் வந்து எட்டிப் பார்த்ததை, அவர்கள் அறிந்ததாகவே தெரியவில்லை.

“ஊகூம் ரகு அண்ணா, கோடுகளை வரையும்போது, இடையில் நிறுத்தக் கூடாது . . நிறுத்தினால், அந்த இடத்தில் அடர்த்தி, வளைவு இப்படி ஏதாவது வேறுபாடு வந்துவிடும். ஒரே கோட்டின் தொடராகத் தோன்றாது! திரும்பப் போடுங்கள் . . “ என்ற ப்ரீதியின் குரலைக் கேட்டபடி, குடிலின் படியேறிச் சென்று, சௌரதியின் பக்கம் சென்று, ஜன்னல் வழியே அவனும் சின்னவர்களைப் பார்த்தான்.

அவள் சிறு வியப்புடன் நோக்கவும், “மாதையன் சொன்னதைக் கேட்டுப் பதறிப்போய் ஓடி வந்தேன்.” என்றபடி கைவிரல்களால் தலை முடியைக் கோதிவிட்டான்.

இறுக்கம் தளர்விக்கும் செயல்!

“என்ன பதற்றம்? அவன் அப்படி என்ன சொன்னான்? “ என்று

அவள் கேள்வியாக நோக்கவும், அவன் விளக்கம் உரைத்தான்.

“முதலில், மையத்தில் சேர்த்த புதிதில் மருந்து கேட்டு, ரொம்ப முரடனாக அடிதடி வரை கூடப் போனானாம். மாதையன் பெரிய சண்டை எனவும், அது போலப் பழைய அலை தாக்கிவிட்டதோ என்று பயந்து விட்டேன். பெண்களாயிற்றே, உங்கள் நிலை என்ன ஆயிற்றோ என்று ஒரே பதற்றம். அப்படி எதுவும் நேர்ந்தால், என்னை நம்பி உங்களை அனுப்பிய டாக்டர் அங்கிளுக்கு எப்படிப் பதில் சொல்வேன்? “ என்றான் கவலையோடு.

ஆனால், அவனது கவலையைப் பகிர்ந்து கொள்ளாமல், “அப்படி என்ன ஆகி விடும்?” என்று இலகுவாக வினவினாள் செளரதி.

“சொன்னேனே! அடிதடி வரை போனான் என்று. அங்கே ஓர் அட்டெண்டரின் கையே முறிந்துவிட்டது. நீங்களோ பெண்கள்!” என்று அவன் விளக்கினான்.

தலை சரித்து அவனைப் பார்த்தாள் அவள். “பெண்கள் என்றால், என்ன சார்? எதுவுமே இயலாத புழுக்களா? இதையெல்லாம் எதிர்கொள்ளும் வகையில் தற்காப்புக் கலை பயின்றவள்தான் நானும். அதனால்தான் தனியிடம் என்றாலும் டாக்டர் சார் என்னைத் தைரியமாக அனுப்பினார். நானும் பயமற்றே வந்தேன். நம் ஆக்ஷன் பட வீராங்கனை மாதிரி, ஒரே நேரத்தில் பத்திருபது பேரை அடிக்க முடியாவிட்டாலும், இரண்டு பேரை என்னை நெருங்காமல் பண்ண என்னால் முடியும்.” என்றாள் புன்னகையோடு.

ஓ! இவளிடம் ஒவ்வொன்றாக மாறும்படி ஆகிறதே என்று எண்ணும்போதே, வசுநந்தனின் உள்ளம் குறுகுறுத்தது.

“இரண்டு பேரில் ஒருவர் . . . பாதிக்கப்பட்ட என் தம்பி! எதிர்பார்க்கப்பட்ட அந்த இரண்டாமவர் யாராக இருக்கக் கூடுமோ?” என்று ஒற்றைப் புருவம் தூக்கி அவன் வினவிய விதத்தில் அவளுக்குச் சிரிப்பு வந்தது.

புன்னகை விரிய, “வேறு யார்? தம்பிக்காகப் பதறித் துடித்துக்கொண்டு வருகிற அண்ணனாகத்தானே இருக்க முடியும்? நீங்களே சொல்லுங்களேன்!” என்று முடிவான பதில் சொல்லும் பொறுப்பை அவனிடமே தள்ளி விட்டாள். செளரதி.

சிரித்துவிட்டு, “பரவாயில்லை. என்னை அடித்துப் போட்டு விடுவதாக என்னிடமே சொல்லுகிறாயே! தைரியசாலி என்று ஒத்துக் கொள்ள வேண்டியதுதான். “ என்றான் அவன் பதிலுக்கு

“தைரியசாலிப் பட்டத்தை விட்டுவிட மனமில்லைதான். ஆனால், மாற்றிப் பேசவும் விடக் கூடாதில்லையா? உங்களை அடித்துப் போட்டுவிடுவேன் என்று நான் சொல்லவே இல்லை. நெருங்க விடாமல் தடுக்க முடியும் என்றது மட்டும்தான் என் வசனம்.”

“வெறும் சொல் கணக்குப் பார்த்தால் நீ சொல்வது சரியே. ஆனால், உன் தற்காப்புக் கலை முறையில், கையையும் காலையும் ஆட்டிக்கொண்டு ஆ ஊ என்று நீ கத்துவதை, அணிந்திருக்கும் உடை நலுங்காமல், தலை முடி கலையாமல், நான் சும்மாப் பார்த்துக்கொண்டு பயந்து நிற்பேன் என்றா எண்ணுகிறாய்? பிரமாதமான கற்பனை! சற்று அதிகப்படித் துணிச்சலானதும் கூட!”

விழி மலர அவனை நோக்கினாள் சௌரதி. நல்ல உடல் கட்டுதான்.

நீச்சல் ஜிம் என்று ரகு சொன்னது நினைவு வந்தது. போர்க்கலைகளும் பயின்றிருக்க மாட்டான் என்று எப்படிச் சொல்ல முடியும்?

புன்னகையோடு, “ஆராய்ச்சி முடிந்துவிட்டதா? எத்தனை மார்க்? இனி நாமும் அமரலாமா?” என்று கேட்டு அவளுக்கு ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுவிட்டுத் அவனும் ஒன்றில் அமர்ந்தான்.

பட்டிக்காடு மாதிரிப் பார்த்துவிட்டாளே! அவனும் கவனிக்கும்படியாக வேறு! முகம் சூடேறிச் சிவப்பதைப் பாராமலே சௌரதியால் உணர முடிந்தது.

அதையும் கவனித்து அவன் வியந்தான். “ஹோ, நிஜமாகவே உனக்கு முகம் சிவக்கிறதே! பட்டையாக “ரூஜ்” தீற்றாமல் இயற்கையாக முகம் சிவப்பதை, நான் முதல் முறையாக இப்போதுதான் பார்க்கிறேன்.”

பேசுவதற்கு வேறு விஷயம் கிடைத்ததை அப்பாடி என்று ஏற்று, “பெண்களுக்குச் சற்று மிருதுவான சருமம். வவந்து அசடு வழியும்போது முகம் சிவப்பது இயற்கைதானே? “ என்றாள் அவள்.

“இயற்கையா? அது எப்படித் தெரியும்? ஒரு சென்டிமீட்டர் திண்ணத்தில் பவுடர், கிரீமுக்கு அடியில் சிவப்பதையும் இல்லாததையும் எப்படிப் பார்ப்பது?”

“ஆகா, பெண்களைப் பற்றி இப்படி எதையாவது சொல்வதே உங்கள் இனத்துக்கு வழக்கம் ஆகிவிட்டது! “ என்றாள் சௌரதி மறுக்கும் குரலில்.

“ஆனால், பெரும்பாலும் பெண்கள் அப்படித்தானே தீற்றிக் கொள்கிறார்கள்? ஆண்களைக் கவர்வதற்காக . . “ என்றவனை முடிக்க விடாமல், “அதெல்லாம் இல்லை. அபூர்வமாகச சிலர் தவிர யாரும் கண்டதை முகத்தில் போடுவதே கிடையாது.” என்றாள் அவள்.

இப்போது உற்றுப் பார்த்தவன் அவன். ஆராய்கிறவன் போல அவள் முகத்தைப் பார்த்துவிட்டு, “நீயும் உன் தங்கையும் வேறு விதம். ஒத்துக் கொள்ளுகிறேன். உன் அம்மா உங்களை நன்றாக வளர்த்திருக்கிறார்கள்!” என்றான் அவன் மெச்சுதலாக.

வசுநந்தனின் ஆராய்ச்சியால் உள்ளூர ஏற்பட்ட லேசான படபடப்பை வெளிக்காட்டாமல் சமாளித்துக் கொண்டிருந்தவள் அவள். சற்றும் எதிர்பாரமல், அவன் அன்னையை குறிப்பிட்டது, சௌரதியைப் பலமாகத் தாக்கிவிட்டது.

பெண்களை நன்றாகத் தாயார் வளர்த்தாளா , அல்லது அவர்கள் தாமாகவே நல்ல விதமாக வளர்ந்தார்களா? யார் சொல்ல முடியும்? ஆனால் . . .

அவள் முகம் வாடியதைக் கவனித்து, “சாரி சாரி. அம்மா நினைவைக் கிளப்பி விட்டுவிட்டேன். ரொம்ப சாரி. “ என்று அவன் வருத்தம் தெரிவித்தான்.

“இல்லையில்லை. அப்படி ஒன்றுமில்லை. ஆனால் . .சாரி, இன்னும் . . வந்து . .அந்தப் பேச்சு . ..எஎதற்கு? “

அவள் சமாளிப்பதற்காக அரும்பாடு படுவதைக் கண்டும் கவனியாதது போல அவள் பேசினான்.

சளபுளவென்று சின்னவர்களின் பேச்சுச் சத்தம் மனதை ஈர்த்தது போல அந்தத் திசையில் நோக்கி, “அப்போது என்ன நடந்தது? மாதையன் கூறியதில் நான் மிரண்டே போய்விட்டேன்.” என்றான்.

பெரிய மூச்சை எடுத்து விடுவதும் கை விரல்களின் இறுக்கம் தளர்வதும் ஓரக் கண்ணில் பட்டபோதும், அதையும் காணாதவனாகத் தம்பி இருந்த திசைப் பக்கமே பார்த்தபடி வசுநந்தன் அமர்ந்திருந்தான்.

ஒருவாறு தன்னை சமாளித்துக்கொண்டு, சௌரதி நடந்ததைச் சொன்னாள்.

“ரகுவின் மனம் பழைய நிலைக்குப் போய்விடக் கூடாது என்பதுதான் முக்கியம் என்று ஓடி வந்தேன். எழுதக் காகிதம் தேடினால், கைக்குச் சட்டென்று அந்த கான்சன் ஷிட் பாட் தான் அகப்பட்டது. ரகுவின் மனம் சற்றுப் பேதலித்திருந்த சமயத்தில், மற்றதைத் தேடி

நேரத்தை வீணாக்கக் கூடாது என்று அதை எடுத்துக்கொண்டு ஓடினேன். அது விலை கூடுதல் என்பதாலோ என்னவோ, ப்ரீதி பொங்கிக் கொட்டிவிட்டாள்.

“அவளும் மனமற்று வேறு வழியின்றி, இங்கே வந்தவளா, காச் பூச்சென்று கத்திக் கூச்சலிட்டதில், எனக்கும் கோபம் வந்து, என்னவோ உலகமகாக் குற்றத்தைச் செய்த மாதிரி என்ன காட்டுக் கத்தல், அடக்கிப் பேசு என்று அதட்டி விட்டேன்.

“உங்கள் தம்பிக்கும் அவள் பேசிய முறை பிடிக்காமல், மரியாதையாகப் பேசு எனறாரா? அவள் இன்னமும் எகிறினாள். அது, “என் கான்சான் ஷிட். ஒரு ஷீட் இன்றைக்கு முப்பது ரூபாய்! ஒரு முழு பேட் விலை என்ன ஆகும்? அதைப்போய் உங்களுக்கு ச் சும்மா எழுதக் கொடுப்பாளா . . “ என்று அவள் இன்னமும் எகிற, பிரச்சினை எங்கே போய் நின்றிருக்குமோ?

“சட்டென ரகு அவள் கையைப் பிடித்து, சாரிம்மா. நான் மறுபடியும் பழைய வழிக்குப் போய்விடுவேனோ என்று பயந்து அவசரத்தில் சௌரதி செய்தது. எனக்காக . .ஒரு மனநிலை பாதிக்கப்பட்ட மனிதனுக்காகத் தயவு பண்ணி மன்னித்துவிடு என்று மன்னிப்புக் கேட்கவும் சட்டென ப்ரீதி இளகிவிட்டாள். அப்படியே எல்லாம் அடங்கிவிட்டது. . . “ என்றவள் ஜன்னலுக்கு வெளிப்புறத்தைத் தலையசைத்துக் காட்டினாள்.

““நீங்களே பாருங்களேன்! பெட்டிப் பாம்புகள் போல, இரண்டு பேருமே எப்படி அடங்கிவிட்டார்கள்!” என்று புன்னகையோடு முடித்தாள் அவள்.

“ஆக, உன் மேல் தப்பே இல்லாததற்கு இந்தக் கூத்தாகிவிட்டதாக்கும்! ஆனால் செய்த தப்பைப் ப்ரீதியே சரிப்படுத்தவும் செய்கிறாள். போகட்டும், அவளது இழப்பை நாமும் சீர் செய்துவிடுவோம். தொழில் தொடர்பாக ஒரு வாரத்தில் சென்னைக்குப் போகிறேன். ப்ரீதிக்கு என்னென்ன வேண்டும் என்று எழுதிக் கொடுத்தால் வாங்கி வருகிறேன். முக்கியமாக இந்த கான்சான் ஷிட்டை மறந்துவிட வேண்டாம்! அது மட்டும்தான் என்றும் நினைக்க வேண்டாம். அவளுக்கு எது தேவை என்றாலும், அனைத்தையுமே வாங்கி வருகிறேன்.” என்றான் வசுநந்தன்.

பேச்சினூடே சௌரதியை ஒன்று உறுத்தியது.

மாதையன் சொன்னதைக் கேட்டுப் பயந்து வந்ததாகச் சொன்னானே! அப்படியானால், இங்கிருந்து வெளி உலகத்

தொடர்புக்கு ஏதோ இருக்கிறதுதானே? இல்லாத மாதிரி இத்தனை நாளும் என்ன பாவனை? எதற்காக? அல்லது, யாருக்காக?

மனதில் தோன்றிய பதிலும் அவளுக்கு உவப்பாக இருக்கவில்லை.

அவளது முகத்தில் வேறுபாட்டைக் கண்டு, விவரம் அவன் கேட்டான். "என்ன விஷயம்?"

என்னவென்று சொல்வது? சரியாகச் சொல்வதானால், அவளுக்கும், அதற்கும் ஒன்றுமில்லைதானே?

"அது . . பரவாயில்லை. அது என் வேலைக்குத் தொடர்புடையது அல்ல. விட்டு விடலாம்." என்றாள் அவள் எந்த உணர்ச்சியும் காட்டாத குரலில்..

தன் கூர் பார்வைகளில் ஒன்றைச் செலுத்திய வசுநந்தனின் முகம் தெளிந்தது.

"ஓ . . . ரைட், மாதையன் என்னிடம் எப்படிச் சொன்னான் என்பதுதானே?" என்று வினவினான்.

"இப்போதும், என்னிடம் அதை நீங்கள் சொல்ல வேண்டியத் தேவை இல்லை. உங்களிடம் கட்டாயம் தெரிவித்தாக வேண்டிய முக்கியமான விஷயம் ஏதேனும் நேர்ந்தால், அதை மாதையனிடம் சொன்னாலே, செய்தி உங்களை அடைந்துவிடும் என்று தெரிகிறது. அது எனக்குப் போதுமானது. " என்றாள் அவள் பழைய குரலிலேயே.

சற்று நிம்மதியான பெருமூச்சு ஒன்று அவனிடம் இருந்து வெளிப்பட்டது. லேசாக முறுவலித்து, "அனுசரணையாகப் பேசுகிறாய் சௌரதி. எனக்குமே இந்தத் தொடர்பு விஷயம் வெளியே தெரிவதில் விருப்பம் இல்லைதான். தெரியக் கூடாதது, முக்கியமாக என் தம்பிக்குத்தான். அவன் வெளியே பேசத் தொடங்கினான் என்றால், மீடியாக்காரர்கள் எப்படியாவது நூல் பிடித்து, இங்கே வந்துவிடுவார்கள். அப்புறம், அவன் மறைக்க விரும்பும் ரகசியம் பகிரங்கமாகி விடும். உன் தங்கையுமே, செய்துவிட்டு யோசிக்கிறவளாகவே தோன்றுகிறாள். . .என்ன?" என்று அவளது புன்னகையைப் பார்த்துவிட்டுக் கேட்டான் வசுநந்தன்.

"நானுமே, அடிக்கடி அவளை அப்படித்தான் சொல்வேன். செய்துவிட்டு யோசிக்கிற ரகம் என்பேன். யோசித்துச் செயல்படுவதற்குப் பதிலாக உல்டாவாகச் செயல்படுகிறவள்! " என்றாள் சௌரதி, இயல்பாக.

தலையை ஒப்புதலாக ஆட்டி, "நூறு சதம் ஒத்துக் கொள்ள

வேண்டிய விஷயம்! “ என்றான் அவனும்.

இறுக்கம் மறைந்துவிட, வசுநந்தன் அவனுடைய தம்பியைப் பற்றிப் பேசினான்.

நிறைய, மாசிலாமணி சார் மூலமாக, சௌரதி அறிந்த விஷயங்களே

சும்மாவே படங்களின் வெற்றி தோல்வி பற்றி ரொம்பவும் மனதை அலட்டிக் கொள்வான். படத்துக்கு ஏற்றபடி உடம்பை மாற்றுவதாக உணவு உடல் பயிற்சி எல்லாம் தீவிரமாகக் கடைப்பிடித்ததில், உடலோடு மனமும் வலுவிழந்து போயிற்று.

சோர்வை அகற்ற என்று யாரோ தொடங்கி வைத்த போதைப் பழக்கம்!

புது விஷயமாக, நந்தன் சகோதரர்களுடைய பெற்றோர் பெரும்பாலும் வெளிநாடுகளில் இருப்பது, தெரிய வந்தது. வேலை என்று போனவர்கள் அங்கேயே தங்கிவிட்டார்கள் என்றான் வசுநந்தன்.

“தாத்தா பாட்டியிடம் வளர்ந்த எங்களுக்குத்தான் நாட்டை விட்டுப் போக மனதில்லை. அதிலும் எனக்கு . . .பெயருக்குச் சரியாக இந்தப் பூமியின் புத்திரன் என்று கேலி கூடச் செய்வார்கள். இந்தப் பிரதேசத்தின் மேல் அவ்வளவு பற்றுதல். தம்பி இந்தியாவுக்குள் இருக்க வேண்டும் என்பான். எங்களில் யாராவது திருமணம் செய்து அடுத்த தலைமுறையைப் பார்க்க மட்டும்தான் வருவோம் என்று பெற்றவர்கள் பிடிவாதம். ஒருவாறு தம்பி ஒத்து வந்து, நிச்சயம் எல்லாம் நடந்தது. சந்தோஷமாக அவனது திருமணத்தை எதிர்பார்த்தால், திடீரென்று இந்த போதை மருந்து குண்டைப் போட்டுவிட்டான்.

“அப்பா அம்மாவுக்குமே தெரியக் கூடாது என்றுதான் முதலில் நினைத்தோம். ஆனால் இங்கே யாருக்கும் தெரியாமல் இருப்பதற்காக, அவர்கள் மூலமாக அங்கேதான் முதல் சிகிச்சை செய்ய முடிந்தது. அவனுக்கு முக்கியம், காதலி பவித்ராவுக்கு எதுவும் கசிந்துவிடக் கூடாது. அடுத்து, தொழில் இடத்திலும் கெட்ட பெயர் வந்துவிடக் கூடாது. கறுப்பென்றாலே காக்காயாக வாந்தி எடுத்ததாக மாற்றிச் சொல்லிவிடக் கூடிய தொழில். எந்நேரம் போதையில் மயங்கிக் கிடப்பான்., எதற்கும் லாயக்கில்லை., சொன்ன நேரம் நடிக்கவும் வரமாட்டான் . . . இப்படியெல்லாம் பரப்பி விடுவார்களே என்று அஞ்சினான்.

“அப்பா அம்மாவால் முடிந்தது, செய்துவிட்டார்கள். இனி,

இறுக்கம் அடியோடு தளர்வதுதான் முக்கியம். வளர்ந்த இடம் என்பதோடு, ரகசியம் காக்கக் கூடிய இடமாகவும், தேவைப்பட்டது. .

“நல்லவேளையாக நான் இப்படி ஒரு சொத்தை வாங்கியதால், அவனை இங்கே வைத்துப் பராமரிக்க முடிந்தது . . .என்ன?” .

ஏதோ கேட்க, சௌரதி வாயெடுத்தாள்தான். ஆனால், லேசாக முகம் கன்ற, உடனே நிறுத்திக் கொண்டாள். இந்தக் கேள்வி ரொம்பவும் அதிகப்படி!

ஆனால், வசுநந்தன் “என்ன? என்ன தெரிய வேண்டும்? சொல்லு , என்ன சொல்லு!” என்று பிடிவாதமாகக் கேட்டான்.

இன்னமும் கன்றி, “இது எனக்குக் கொஞ்சமும் சம்பந்தம் இல்லாதது சார்.”“ என்றாள் சௌரதி.

“பரவாயில்லை கேட்டுவிடு. விஷயம் தெரிவதால் ஒரு தப்பும் நேராது. கூடவே, தெரிந்து கொள்வதால், தப்பான எண்ணங்கள் மாறலாம் அல்லவா?”

“அதில்லை . . அவர் நடிகர். நடித்து வருவது தனி சம்பாத்தியம். ஆனால் .சொத்து . .” என்று நிறுத்திக் கொண்டாள்.

அதிகப்படிதான் உனக்குத் தேவையில்லாதது என்று சொல்லப் போகிறான் என்று காத்திருந்தால், அவன் வேறு பேசினான். விளக்கமே கூறினான்.

“சொத்து பொதுதானே என்கிறாயா? “நான் வாங்கியது” என்றதில் யோசித்திருப்பாய். தாத்தாவினதும் நல்ல வருமானம் தந்த எஸ்டேட்தான். ஆனால் தம்பிக்கு நடிப்பில் வெறி. கதாநாயகன் வாய்ப்புத் தந்தாலும், படத்தை எடுப்பதற்குப் பெரும் பணம் முதலீடு பண்ணச் சொன்னார்கள். நம்பகமான நண்பர்கள் மூன்று பேர் சேர்ந்து செய்த முயற்சி. கதை எல்லாம் ரொம்ப நன்றாக இருந்ததால், நானே தாத்தாவிடம் சிபாரிசு செய்தேன். பிற்பாடு மீட்டுவிட நான் சொன்ன கணக்கு தாத்தாவுக்கு ஒத்துக் கொள்ளும்படி இருந்ததால், முழுச் சொத்தையும் அடமானம் வைத்து அந்தப் பணத்தோடு, அதுவரை சேமித்ததையும் கொடுத்தார். அதே சமயம், சொத்து எனக்கு என்று தம்பியின் ஒப்புதலோடு எழுதியும் வைத்துவிட்டார். அவனுக்குக் கொடுத்த பணம், சொத்தின் மதிப்பில் பாதிக்கு மேலாக இருந்ததால், அவன் அதைத் திருப்பித் தருவதாகவே சொன்னான். . . “

சொல்லிக்கொண்டு வரும்போதே அவளது விழிகள் விரிவதைப் பார்த்து, “ஆமாம், நாங்கள் யாருமே கெட்டவர்கள் இல்லை, சௌரதி.

நியாயம் தவறுகிறவர்களும் இல்லை. ஆனால், புது முயற்சி செய்கிறவன் கடன் சுமையோடு செல்ல வேண்டாம் என்று நினைத்து, தாத்தாவும் நானும் திருப்பித் தரவேண்டாம் என்றுவிட்டோம். முதல் படம் சாதாரண வெற்றிதான் ஆனால், இரண்டாவது, மூன்றாவது நல்ல வெற்றி. இரண்டாவதின் வசூல் பட வினியோகஸ்தருக்குப் போனாலும், அடுத்ததில் நிறைய வந்தது. தம்பி திருப்பிக் கொடுக்க வந்ததை, அவனையே வைத்துக் கொள்ளச் சொல்லிவிட்டோம். மும்பையில் நல்ல வீடு வாங்கினான். பால் காய்க்கும்போது பெற்றோர் வந்தார்கள். எல்லாம் எதற்குச் சொல்கிறேன் என்றால், தம்பி உள்ளத்தில் மிகவும் நேர்மை உள்ளவன். இந்தப் பழக்கம்தான் . . . ஆனால் முதல் சிகிச்சை கொடுத்த மையத்திலேயே, ரகு மனதில் இது பற்றி வருத்தம், கழிவிரக்கம் இருக்கிறது. கட்டாயம் திருந்தி விடுவார். மேற்கொண்டு தூண்டுதல் இல்லாமல் நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றுதான் சொன்னார்கள்.” என்று விளக்கமாகத் தெரிவித்தான்.

பெரிய விளக்கம்தான். அவளுக்கு, அவன் சொல்லத் தேவையில்லாததும் கூட. ஆனால், அவனைப் பற்றிய விவரம் அறிவது அவளுக்கு சந்தோஷமாக இருந்தது. புரியாத மகிழ்ச்சிதான். ஆனால், மகிழ்ச்சி, மகிழ்ச்சிதானே?

அத்தியாயம் -10

அந்தக் குடும்பத்தில் எல்லாமே செளரதிக்கு ஆச்சரியமாக இருந்தது.

பெற்றோர் வெளிநாட்டில் வளத்தை நாடிச் செல்வதும், அங்கேயே தங்கி விடுவதும், பிள்ளைகள் தாத்தா பாட்டியிடம் வளர்வதும் அதிசயம் அல்ல. சொல்லப் போனால், அது சகஜமாகிவிட்ட ஒன்று என்று கூடச் சொல்லலாம்.

ஒன்று அப்படி. அல்லது, பேரப் பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ள என்று, தாத்தா பாட்டிகள், பிள்ளளைகள் வேலை பார்க்கும் நாடுகளுக்குப் போய் வருவது.

எனவே அது பெரிய விஷயம் அல்ல.

ஆனால், ஒரு தாத்தா சொத்தை எல்லாம் அடமானம் வைத்துப் பேரன் சினிமாவில் நடிக்க உதவியது, அவளுக்கு வியப்பை அளித்தது.

முதல் பேரனும் சொன்னாலும், மூத்த தலைமுறை அதை ஒப்புவது அதிசயம்தானே?

அடுத்து வசுநந்தன்.

மொத்த சொத்தையும் அவன் அடமானம் வைக்கத் துணிந்தது, தம்பி ஜெயிப்பான் என்ற நிச்சயத்தினால் இருக்கலாம். ஆனால், பிறகும் அதை வாங்கிக் கொள்ளவில்லை.

பொதுவாக, வெறும் உல்லாசத்துக்காகப் போதை மருந்து எடுப்பவர்கள் மிகவும் குறைவு. ஏதா வது குறை, கவனிப்பு இன்மை, அன்புக்கு ஏக்கம், குடும்பத்தில் சச்சரவு என்ற பல காரணங்கள் இருக்கும். அப்படிப் பட்ட அன்பற்ற அண்ணன் என்று நினைத்தது, தவறாக இருக்கிறது என்று எண்ணினாள் செளரதி.

வசுநந்தன் தொழில் தொடர்பாக வருவதும் போவதுமாக இருப்பவன். அந்த முறை, அடுத்து வாரக் கடைசியும் வந்துவிடவே, திரும்பிப் போகாமல் அங்கேயே தங்கி விட்டான்.

தம்பியோடு இருந்து சேர்ந்து நாலு பேருமாகப் பேசி, சீட்டு விளையாடி, ஷட்டில் விளையாடி . . .ஒரு நட்புணர்வு உண்டாயிற்று.

அவளிடம் மன்னிப்புக் கேட்டதோடு, மாணவனாகச் சித்திரம் வரையத் தொடர்ந்து கற்றுகொண்ட ரகுநந்தனை, ப்ரீதிக்கும் மிகவும்

பிடித்துப் போயிற்று.

“வரையக் கற்க வேண்டும் போல எப்போது தோன்றினாலும், கூப்பிடுங்கள், ரகு அண்ணா. உடனே வந்து கற்றுத் தருகிறேன்.” என்று வாக்குக் கொடுத்தாள்.

அவனும் கற்றுக் கொள்ளத்தான் செய்தான். ஏனெனில் பவித்ராவின் ஃபோட்டோக்களை வைத்துக்கொண்டு, அதை வரி வடிவமாக வரைவதில் அவனுக்கு ஆர்வம் மிகுதியாக இருந்தது. நிறைய வரையவும் செய்தான்.

“இதைப் பார்த்தால், பவித்ரா அக்கா உங்களை அடிக்க வரப் போகிறார்கள்!” என்று கேலி செய்த போதும், ப்ரீதி பொறுமையாகக் கற்றுக் கொடுத்தாள்.

தங்கைக்கு அந்தக் கலையில் இருந்த ஆர்வமும், திறமையும் பற்றி, சௌரதிக்கு முழுமையாகப் புரிந்ததே அப்போதுதான் எனலாம். சென்னை சென்றதும், சரியான இடம் தேடி, அவளைச் சேர்க்க வேண்டும் என்று, மனதில் குறித்து வைத்தாள்.

அன்று அண்ணனோடு போட்டி போட்டுக்கொண்டு நீந்தியதில், ரகுநந்தன் அசந்து தூங்கிவிட, மாதையனை அவனுக்குத் துணையாக விட்டுவிட்டுப் பெண்கள் இருவரையும், அவனது எஸ்டேட்டில் “வ்யூ” காட்ட, வசுநந்தன் அழைத்துச் சென்றான்.

ஓர் இடத்தில் சிறு அருவியாகத் தண்ணீர் விழ, பூஞ்சிதறலாக அது காற்றில் பரவ, மரம் செடி கொடிகளுடன், மெய்யாகவே பார்க்கப் பரவசமாக இருந்தது.

ப்ரீதி ஸ்கெட்ச் பேடுடன் கிளம்பிவிட்டாள். “நான் இதில் அந்தப் பக்கமாக மேலே போய்ப் பார்க்கப் போகிறேன். அங்கிருந்து பார்ப்பதற்கு, இந்த நீர்ச்சிதறல் இன்னும் அழகாக இருக்கும் போலத் தோன்றுகிறது. இருக்கும்தானே, வசுநந்தன் சார்?” என்று அவனிடம் கேட்டாள்.

“ம்ம்! இருக்கும். லேசான பனி மூட்டம் போல இருக்கும்.” என்றான் அவன்.

“நினைத்தேன்!” என்றாள் அவள் உற்சாகத்துடன். “அதைப் படத்தில் கொண்டு வர முடிந்தால் . . “ என்று மேலே ஏற ஓடினாள்.

“ஒரு நிமிஷம் பொறு, ப்ரீதி.” என்று தங்கையை நிறுத்தி, ஒரு பெரிய ஃப்ளானல் கைக்குட்டையை எடுத்து நீட்டினாள்.

வசுநந்தனின் எச்சரிக்கையை ஏற்று, எடுத்து வந்ததுதான். அந்த நினைவே இல்லாமல் ப்ரீதி கிளம்பியிருந்தாள்.

“காதை மறைத்து கைக்குட்டை மாதிரி ஸ்டைலாகக் கட்டிக்கொள். குளிரோ, ஈரமோ தாக்காது.” என்று கொடுத்தாள்.

கையில்லாத டாப் வேறு அணிந்திருந்த ப்ரீதிக்குக் கொஞ்சம் குளிராகத்தான் இருந்தது.

ஆனாலும், தமக்கையின் கையிலிருந்து, கைக்குட்டையை வெடுக்கெனப் பிடுங்கிக்கொண்டு, “இதை நீ எனக்குச் சொல்லியாக வேண்டுமாக்கும்? நானே அதற்காகத்தான் திரும்பி வந்தேன்.” என்று சிடுசிடுத்துவிட்டுப் போனாள் அவள்.

அத்தோடு சென்றிருந்தால் கூட நன்றாக இருந்திருக்கும்!

“தங்கையிடம் மகா அன்பு மாதிரிக் காட்டிக் கொள்ள வேண்டுமாம்!” என்று, மேடை ரகசியமாக உரக்க முணுமுணுத்தபடி சென்றதுதான், அதுவும் வசுநந்தனின் காது கேட்கக் கூறிச் சென்றதுதான் மூத்தவளுக்குச் சங்கடமாக இருந்தது.

மரியாதையற்ற போக்கு, எடுத்தெறிந்து பேசுவது, வேண்டும் என்றே மட்டம் தட்டுவது எதுவுமே அவன் கண்களுக்குத் தப்பவில்லை என்று, சௌரதிக்கு சந்தேகம் இருந்தது.

அதை உறுதிப்படுத்துவது போல, “ஏன் இப்படி?” என்று சுருக்கமாகக் கேட்டான் அவன்.

முன்பானால், “இது உங்களுக்குச் சம்பந்தம் அற்றது” என்று சொல்லி முடித்திருப்பாள். ஆனால், வசுநந்தன் இப்போது சகஜமாகப் பழகத் தொடங்கி இருந்ததால், அப்படி வேற்றாளாக விலக்கி நிறுத்தி முடித்துவிட, அவளால் இயலவில்லை.

எனவே, “நான்தான் சொன்னேனே, அவளுக்கு இங் . . சென்னையை விட்டு இங்கே வர விருப்பம் இல்லை, என்றேனே!” என்றாள் மெதுவாக.

“அது முதலில். இப்போது அவளே இங்கே அது, இது என்று ரசித்து மகிழ்கிறாளே! ஆனால், ரகு வேறு சொன்னான். ப்ரீதி உனக்குத் தங்கைதானே? அவளிடம் எடுத்துச் சொல்லலாமே. பார், நான் கூட முதலில் உன்னைத் தப்பாக நினைத்தேன்தான். உன் கண்ணீரைப் பார்த்தபோதுதான் தாயார் விஷயம் . .வெகு சமீபத்தில் அம்மா போனது நினைவு வந்தது. அவள் சின்னப் பெண். அந்த நேரத்துத் தனிமை இன்னும் அதிகம் தாக்கியிருக்கும். அதிலிருந்து தேற வழியில்லாமல், ஒரு

வகையில் தந்தையையும் இழந்த நிலை எனும்போது . .ரொம்பக் கஷ்டமே. யாராலும் தாங்க முடியாதுதான். தங்கையிடம் எடுத்துச் சொல்லலாமே! “ என்றான் அவன்.

இதற்கு என்ன சொல்வது?

அவனது குடும்பம் பற்றி, வேறுபாடின்றி வசுநந்தன் நிறையச் சொன்னான். ஆனால், இது சொல்லக் கூடியது இல்லையே!

அவளது பதிலுக்குக் காத்திராமல், அவனே தொடர்ந்து பேசினான்.

“ஆனால், உன் தந்தையை நினைத்தால் ரொம்பவும் ஆச்சரியமாக இருக்கிறது! அவருக்கு மனைவியிடம் எவ்வளவு அன்பு இருந்திருந்தால், இப்படி வாழ்வையே வெறுத்து, அழகான இரண்டு மகள்களைக் கூடத் துறந்துவிட்டுத் துறவியாவார்?” என்று அவன் வியந்த போதுதான் அவளால் பொறுக்க முடியாமல் போயிற்று.

தன்னை மீறி, “ஆ . .மாம். ரொம்ம் . .ப அன்பு!” என்றபோது, குரலில் பேதம் தவிர்க்க முடியாது போயிற்று.

அந்தப் பேதம் புரியாத அளவுக்கு அவன் அசடனும் அல்ல.

பாறைகளைப் பற்றி மேலே ஏறிக் கொண்டிருந்த சின்னவளை அவ்வப்போது கவனித்தவாறே பேசிக் கொண்டிருந்த வசுநந்தன், இந்தக் குரல் பேதத்தில் சட்டெனத் திரும்பி அவளைப் பார்த்தான்.

ஆனால், பொறுக்க மாட்டாமல் வார்த்தைகளை உதிர்த்ததுமே, அவனது கூர்ப் பார்வையை எதிர்பார்த்த சௌரதி அவசரமாகத் தலையைத் திருப்பியிருக்க, அவளது பக்கவாட்டுத் தோற்றம்தான், அவன் கண்ணில் பட்டது.

அதிலுமே, அவளது துன்பம் புரியாமல் இல்லை!

என்ன வருத்தம்? தந்தையின் துறவு மகள்களுக்கு இரட்டை இழப்பாகி விட்ட வேதனையா? இருக்கத்தான் செய்யும். துறவு கொண்டது, மனைவியிடம் அவரது அன்பைக் காட்டினாலும், பெற்ற மகள்களைப் பற்றிய பொறுப்பையும் அல்லவா துறந்து . . இல்லை, கைகழுவிவிட்டுப் போனதாகவும் எண்ணலாமே!

இதைப் பெற்றோரிடம் பாசம் மிகுந்த மகள்கள் எப்படித் தாங்குவார்கள் என்று யோசிக்காதது தப்புதானே?

ஆனால் தங்கையின் பெரிய குற்றச்சாட்டு, அம்மா இறக்கையில் . . . அதற்கும் ஏதாவது விளக்கம் இருக்குமோ?

ஆனால் அது பற்றி வசுநந்தன் தொடங்கும்போதே, சௌரதி

அவனைத் தடுத்தாள். “மேலே .சொல்லாதீர்கள். நெஞ்சு ரணமாக வலிக்கும் அளவுக்குப் ப்ரீதி பலமுறை என்னைக் குதறித் தீர்த்துவிட்டாள். மேலும் அது பற்றிப் பேசுவதில், வலிதான் இன்னும் அதிகம் ஆகும். எதற்கு வீணாக?” என்றாள் இறுகிய குரலில்.

தட்டிக் கழிப்பது போலத் தோன்றவும், அவனுக்குக் கொஞ்சம் ஒரு மாதிரி இருந்தது.

யோசனையாகப் பார்த்த அவனது மனதில் ஓடுவது அவளுக்குப் புரிந்தது. தடையற்று அவன் பேசுவது போல, அவளும் எல்லாம் சொல்வாள் என்று எதிர்பார்க்கிறான். பெரிதாக வேறு எதுவும் கிட்டாவிட்டாலும், நல்ல நட்பு அவளுக்குக் கிடைக்கக் கூடும். ஆனால், அதற்குக் கூட, அவள் கொடுத்து வைக்கவில்லையே!

என்னிடம் என்ன ஒளிவு மறைவு என்று, சிறு கோபத்துடன் எண்ணிவிட்டு, வசு அதற்காக ஆச்சரியமும் அடைந்தான். இல்லை. இதை மெதுவே யோசிக்க வேண்டும்.

ஒரு வேலையைப் பொறுப்பேற்றுச் செய்ய வந்தவள், அதை ஒழுங்குமுறையாகச் செய்தால் போதும். தாயோடு ஒரு வகையில் தந்தையையும் இழந்த நிலையில், அதையே சொல்லி வசதியும் வாய்ப்பும் தேடாதிருப்பதே பெரிய விஷயம். சொல்லப் போனால், அவள் பற்றிப் பரிதாபம்தான் படவேண்டும்.

வசுநந்தனின் மனம், சௌரதிக்காக வக்காலத்து வாங்கும்போதே, அவனுக்கு ஏதோ நினைவில் உறுத்தியது.

கலக்கத்துடன் அவள் நின்றது எதையோ நினைவூட்டியது. என்ன அது?

“உன்னை நான் பார்த்திருக்கிறேன் !” என்றான் திடுமென.

பேச்சு மாறியது, சௌரதிக்கு ஆறுதல் அளித்தது.

“பெரிய விஷயம் போலச் சொல்லுகிறீர்கள்! தினமும்தான் பார்க்கிறீர்கள்!” என்றாள் அவள்.

“இல்லை! முன்பே பார்த்திருக்கிறேன்.” என்றான் அவன் மறுபடியும்.

“ஆமாம்! இங்கே வருமுன் சென்னையில்!”

“இல்லையில்லை! அதற்கும் முன்பாகப் பார்த்தேனே. . . அன்று . .. அப்போதும், இதே சுடிதான் அணிந்திருந்தாய். முகத்தில் இதேபோல வலியை சமாளிக்கும் பாவனை! இரண்டும் சேர்த்துப் பார்க்கையில்

தெளிவாகத் தெரிகிறது. . .நான் உள்ளே வந்தபோது, நீ வேகமாக, வெளியே போய்க் கொண்டிருந்தாய். கரெக்ட். அது மும்பையில். மும்பைக்குப் போயிருந்தாய்தானே? “

“ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டுவது” இதுதானா? எந்தப் பிறவியின் தீவினை?

இவனிடம் மறுப்பதில் பயனில்லை. மடத்தனம். அதுவும், இவ்வளவு தெளிவாகச் சொல்லும்போது! சரியாகவும்!

தந்தைக்குப் பிடித்தமானது என்று, இதே சுடியையே சௌரதி அன்று அணிந்திருந்தாள்! அது இவளது மடத்தனம்!

அடி பட்ட பறவையாய்க் குற்றுயிரும் குலை உயிருமாகத் தட்டுத்தடுமாறி அவள் அங்கிருந்து வெளியே விரைந்து சென்றுகொண்டிருந்தபோது, பார்த்திருப்பான் போலும்!

ஆனால், அங்கே யார் நின்றார்கள், யார் வந்தார்கள் என்று, அவளுக்கு என்ன தெரியும்? உடம்பு, உள்ளம் எல்லாம் தீயாய் எரிய, அவள்தான் அந்த இடத்தை விட்டுத் தூர தூரமாக ஓடிக் கொண்டிருந்தாளே!

ஆஆனால், இவனிடம் இப்போது என்ன சொல்வது?

இவனே, முன்போல இளக்காரமாகப் பேசிக் கொண்டிருந்தால், என் விஷயம்., நீ என்ன கேட்பது என்று சொல்லி விடலாம்.

ஆனால் கடவுளே! இப்படிப் பரிவாகப் பழகும்போது, எப்படி சமாளிப்பது?

என்ன முயன்றும், முகத்தை இயல்புக்குக் கொண்டுவர, அவளால் முடியவில்லை. மும்பையில், அந்த டீவியில் பார்த்த காட்சி வேறு, திரும்பத் திரும்பத் தோன்றித் திருக்கை மீன் சாட்டையாக, அவளது நெஞ்சிலேயே அடித்துக் கொண்டிருந்தது.

அருகில் இருந்த பாறை மேல் சாய்ந்து, சில கணங்கள் தலை குனிந்து நின்றாள்.

பிறகு, “ஆஆமாம். நீங்கள் சொல்வது சரிதான். ஆனால், அங்கே போபோன இடத்தில் ஒரு பெரிய இழப்பு தெரிய வந்ததால் . . ப்ளீஸ் வசு, ரொம்பவும் முயன்று, இதை மறந்து கொண்டிருக்கிறேன். மறுபடி நினைக்கச் செய்யாதீர்கள்!” என்றாள் தழுதழுக்கும் குரலில் மன்றாடலாக.

புரியாத திகைப்பை விட, அவளது வேதனை அவனை அதிகம்

பாதித்தது போலும்.

“என்னம்மா, வேண்டாம் என்றால் போதாதா? இவ்வளவு கெஞ்ச வேண்டுமா? விட்டுவிடு. நாம் வேறு பேசலாம்.” என்றான் அவன் இதமாக.

சொன்னது போலவே, வேறு பேசவும் தொடங்கினான்.

“அன்று உன்னிடம் சொன்னேனே, அது போல, நாளை மறுநாள் நான் சென்னைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ப்ரீதிக்கு என்னென்ன வேண்டும் என்று லிஸ்ட் போட்டாயிற்றா?” என்று அது பற்றி விசாரித்தான்.

இந்த லிஸ்ட் போடுகிற வேலை, ப்ரீதிக்கு உற்சாகமாக இருந்தது.

ஸ்கெட்ச் பேட்களில் தொடங்கி, சில சைஸ் பிரஷ்கள், கலர்கள், சில கான்வாஸ் ஷிட்கள் என்று எழுதிக் கொடுத்தாள்.

“என்ன, கான்சான் ஷிட் பேடைக் காணோம்.” என்று கேலிக் குரலில் கேட்டபடி, வசுநந்தன் அதை லிஸ்டில் எழுதியபோது, எல்லோருக்கும் சிரிப்புதான் வந்தது.

அப்போது ப்ரீதி, இன்னோர் உதவி கேட்டாள்.

“வசுநந்தன் சார், நான் முன்பு வரைந்தது எல்லாம் கொஞ்சம் வேறே மாதிரி. இப்போது எனக்கு சில ஷேடுகளை அடிப்படையாகக் கொண்டு வரையத் தோன்றி, அப்படி வரைந்தது, எனக்கே பிடித்தும் இருக்கிறது. இனிமேல், இந்தப் பாணியில்தான் வரைவதாக இருக்கிறேன். அதனால், முன்பு வரைந்ததை எல்லாம் கட்டித் தந்தால், என் பழைய ஓவிய ஆசிரியரிடம் கொடுத்துவிட முடியுமா? யாராவது ஆள் மூலமாக அனுப்பினால் போதும். அவருக்கு இவை பயன்படும். சிறு டச்சப் செய்து, கண்காட்சியில் விற்றுக் கொள்வார். எனக்கு நிறையக் கற்றுத் தந்தார். குரு தட்சிணை மாதிரிக் கொடுக்கலாம் என்று நினைத்தேன். ப்ளீஸ் சார்!” என்று கேட்டுக் கொண்டாள்.

அவளது “பழைய ஓவிய ஆசிரியர்” என்ற வார்த்தைகள், சௌரதியின் காதுகளில் தேனாகப் பாய்ந்தது

இனிக் கவலை இல்லாமல் சென்னை செல்லலாம் போலிருக்கிறதே! வெளியூரெல்லாம் போகத் தேவையில்லாமல், மாசிலாமணி சாரின் மையத்திலேயே தொடர்ந்து பணி புரியலாம்!

ஏதோ உறுத்தியதை அலட்சியம் செய்து, “ஆமாம் சார், எல்லாவற்றையும் ஒழுங்காகக் கட்டி வைத்து விடுகிறோம். இங்கே

எடுத்துப் போனால், அங்கே அப்படியே கொடுத்து விடலாம். உங்களுக்குப் பிரச்சினையே இராது. “ என்றாள், பெரிய விழிகளால் அவனை நோக்கி.

அந்தக் கண்கள் கேட்டுக் கொண்டதைச் செய்ய, அவன் மறுக்கவில்லை.

அதன்படி, ப்ரீதியின் பழைய சித்திரங்கள் எல்லாம் பார்சலாகக் கட்டப்பட்டு, வசுநந்தனோடு சென்னைக்குச் சென்று, அங்கே “நந்தன்” நிறுவனத்தின் மூலம் பரந்தாமனிடம் சேர்ப்பிக்கப் பட்டன.

சென்னையில் இருந்து திரும்பி வரும்போது, ப்ரீதி பொடுத்திருந்த லிஸ்டில் இருந்த அத்தனை பொருட்களும் வசுநந்தனோடு வந்து சேர்ந்தன.

கொஞ்சம் கூடுதலாகவும்.

எல்லாவற்றையும் பிரித்துப் பார்த்த ப்ரீதிக்கு ஆனந்தம் தாங்கவில்லை.

ஆனாலும், “சார், என்னசார் நீங்கள். எல்லாம் ரொம்ப விலை உயர்ந்ததாக வாங்கிவிட்டீர்களே! இதற்கு அடுத்த ரகமே எனக்குப் போதுமே, சார்! இப்போது நிறையச் செலவாகிவிட்டதே!” என்று சற்றுச் சஞ்சலமாகவும் கூறினாள்.

கவலைப்படாதே கொடுத்துவிடலாம் என்பது போல சௌரதி ஜாடை செய்வதைக் கவனியாதவன் போல, “என்னம்மா செய்வது? என் தம்பிக்குக் கற்றுக் கொடுக்கும் குருவுக்கு, இதை விட மட்டமாக நான் வாங்கிக் கொடுக்க முடியுமா? இது, குரு தட்சிணையாக்கும் சின்னப் பெண்ணே! இதற்கெல்லாம் விலை போடவே கூடாது. அப்புறம், சிஷ்ய தோஷம் என் தம்பியைப் பேயாகப் பிடித்துக் கொள்ளும்!” என்று வசுநந்தன் கூறிய தினுசில், எல்லோர் முகங்களிலுமே புன்னகை மலர்ந்தது.

தொடர்ந்த சில நாட்கள், சௌரதியின் வாழ்க்கையில் மறக்க முடியாத நாட்களாக அமைந்தன.

தன் தொழில் தொடர்பான கடமைகளை விட்டுவிட்டு, வசுநந்தன் அங்கேயே இருந்தான் என்று சொல்ல முடியாது. ஆனால், கடமையாற்றச் செல்லுமுன் காலையிலும் வேலை முடிந்து வந்ததும் மாலையிலும் எல்லோரும் சேர்ந்து இருக்கும்படி பார்த்துக் கொண்டான்.

அந்தச் சமயங்களில் பேச்சும் சிரிப்புமாக அந்த இடமே கலகலத்தது.

ஒரு கொடிய பழக்கத்தில் இருந்ததே மறந்தாற்போல, ரகுநந்தனின் குரல்தான் இன்னமும் உரக்கக் கேட்டது.

ரசித்துப் பார்த்தபடி, "இப்பத்தானுங்கய்யா, நம்ப வூடு மாதிரி இருக்குதுங்கோ!" என்று லட்சுமியும் மாதையனும் கூறுவதைக் கேட்கையில், சகோதரர்களின் குணம் பற்றி சௌரதியால் தெளிவாக அறிய முடிந்தது.

ஒருவனின் கெட்ட பழக்கம், எப்படி எல்லாவற்றையும் இருட்டடித்து விட்டிருந்தது!

ஆனால், இனி அந்தப் பிரச்சினை இராது என்று நூறு சதவீதமாக அவளால் நம்ப முடிந்தது.

அதன் பொருள், இங்கிருந்து கிளம்பும் நாள் வெகு விரைவில் இருக்கம் என்பதுதான். என்றாலும், கொடுத்த பணியை நல்லபடியாகச் செய்து முடித்தோம் என்கிற சந்தோஷம், அவளது புன்னகையை வாட விடாமல் காத்தது.

அதற்கும், வசுநந்தன் ஒரு நாள் குறித்திருந்தான்.

பவித்ராவின் படத்தை, அது அவள்தான் என்று தெரியும்படியாக ரகுநந்தன் என்றைக்கு வரைந்து முடிக்கிறானோ, அன்றைக்கு அவன் மும்பைக்குத் திரும்புவது பற்றித் தகவல் கொடுத்து விடலாம் என்று சொன்னான்.

ஆனால், தம்பி வரைந்த படம் ஒவ்வொன்றிலும் ஏதாவது குறை கண்டு பிடித்தவனும் அவனே!

"அண்ணா, நீ வேறு யாரையோ இங்கேயே பிடித்து வைக்க வேண்டும் என்று இப்படி இல்லாத குறையெல்லாம் கண்டு பிடிக்கிறாய் என்று எனக்குத் தோன்றுகிறது!" என்று ஒரு குறும்புப் பார்வையுடன் ரகுநந்தன் கூற, "ஏய், யாரையோ பார்க்கப் போகிற அவசரத்தில் தப்புத் தப்பாக வரைந்துவிட்டு என்னைச் சொல்கிறாயா?" என்று பெரியவன் பதில் கொடுக்க, இருவரும் கலகலப்பதைப் பார்ப்பதற்கே, மற்றவர்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

ரகுவின் முகத்தில் இருந்த தெளிவும் உறுதியும், சொந்த வெற்றியாக சௌரதிக்குத் தோன்றியது.

மொத்தத்தில் ஆனந்த மயமான நாட்கள்!

கருமி ஒருவன் தன் தங்க நாணயங்களைப் பத்திரப்படுத்துவது போல, சௌரதியும் இந்த சந்தோஷங்களை எல்லாம் மனப்

பெட்டகத்தில் பத்திரப்படுத்தி வைத்தாள்.

ஏனெனில், பின்னொரு காலத்தில் இந்த நினைவுகள் மட்டுமே அவளது சொத்தாக இருக்கப் போகின்றன என்பது, அவளுக்கு நிச்சயமே.

சௌரதி வயதுக்கேற்றபடி உற்சாகமான பெண்தான். நியாயமாக நடப்பதால் மகிழ்ச்சியை எதிர்பார்க்கிறவளும் கூட.

ஆனால் இந்த விஷயத்தைப் பொறுத்த வரையில், அவளால் சந்தோஷமாக வருங்காலத்தை எதிர்பார்க்க முடியவில்லை.

அப்படி சந்தோஷமான எதிர்காலம் அமையும் என்றால், அவள் இந்தப் பெற்றோருக்கு மகளாகப் பிறந்திருக்க மாட்டாள்.

அத்தோடு, ப்ரீதியின் பழைய படங்களை அனுப்பும்போது ஏற்பட்ட அந்த உறுத்தலும் அவ்வப்போது தோன்றி அவளைச் சஞ்சலப்படுத்திக்கொண்டேதான் இருந்தன!

கொஞ்ச காலமாக வாழ்வில் நேர்ந்த சம்பவங்களால், எதிலும் தயக்கமும் தவிப்பும் தோன்றுகின்றன என்று சௌரதி தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டாலும், அவளது உறுத்தலுக்கு, அவள் அறியாத ஒரு சரியான காரணம் இருந்தது.

அந்தக் காரணம், பரந்தாமன் ஒரு பாம்பு என்பதை, அவள் மறந்தது. கூடவே, அவரது பத்திரிகைத் தொடர்பையும்!

“நந்தன்” நிறுவனத்திலிருந்து வந்த பார்சலைப் பிரித்துப் பார்த்த பரந்தாமனுக்கு, அவை ப்ரீதி வரைந்தவை என்று உடனே புரிந்து போயிற்று. இதன் பொருளும் கூட. தமக்கையின் மருத்துவப் பணி முடிந்த பிறகும், ஓவியக்கலையைக் கற்க, அவள் இனிப் பரந்தாமனிடம் வரப் போவதில்லை!

பெரிய நஷ்டம் ஒன்றுமில்லை. ஆனால் அந்தப் பெண்ணுடைய அக்கா நல்ல அழகி! நல்லபடியாகச் சம்பாதிப்பவளும் கூட.

பெரியவர்கள் இல்லாத வீட்டில் போய் உட்கார்ந்து கொண்டால், அதிகாரம் பண்ணி, ஆனந்தமாகச் சாப்பிடலாம் என்று நினைத்தது நடக்கவில்லை. இனி இன்னோர் இடம் தேட வேண்டும். அவ்வளவே.

நன்றி தெரிவித்து, ப்ரீதி எழுதிய கடிதத்தை முழுதும் படித்துப் பாராமலே பரந்தாமன் கிழித்துப் போட்டார். யாருக்கு வேண்டும் இவளது நன்றியும் மண்ணாங்கட்டியும்?

குப்பையாய்க் கிடந்த கிழித்த கடிதத் துண்டுகளை அள்ளும்போது,

பார்சலைப் பிரித்த காகிதத்தையும் எடுக்க நேர்ந்தது.

“நந்தன்” நிறுவனம்! அவர் கேள்விப்பட்ட இடம்.

பரந்தாமனுக்குப் பொறி தட்டியது.

அப்படியானால், அக்காவும் தங்கையும், மறு வாழ்வு மையத்திலிருந்து அங்கேதான் யாருக்கோ சிகிச்சை செய்யப் போயிருக்கிறார்கள். அது யாருக்கு?

இதில் இன்னொரு முக்கிய விஷயம் இருக்கிறது. அந்த இடத்துக்காரனுடைய தம்பி வடக்கே பெரிய நடிகன். ஐந்தாறு படங்களிலேயே பிரபலமாகி விட்டவன்.

ஓயாத உழைப்பினால் சோர்ந்து போனதால், மூன்று மாதங்களாக யாருக்கும் தெரியாத இடத்தில் ஓய்வெடுக்கப் போயிருப்பதாகச் சொல்லி, மீடியாக் கண்ணுக்குக் காணாமலே போயிருப்பவன்!

இரண்டும் இரண்டும் நாலு! வேறு விடை வர வழியில்லை! முக்கியமான செய்தி. நிறையப் பணம் அறுவடை செய்யலாம்!

இங்கிருந்து செய்தியும் படமும் அனுப்புவதால், மும்பைப் பத்திரிகை உலகில் பரந்தாமனுக்குப் பரிச்சயம் உண்டு.

நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு நேராகவே கிளம்பிப்போனால், பெரிய பத்திரிகைகளில் அவரைச் சீண்டுவாரில்லை. செய்தி உண்மை என்பதற்குச் சான்று கேட்டார்கள். என்ன? ஃபோட்டோவுமா தருவார்கள்?

அல்லது, கையெழுத்துப் போட்டுக் கடிதம் தருவார்களா?

போகிறது என்று, “கிசுகிசு” பகுதியில் போடுவதாகச் சொல்லி அனுப்பினார்கள்.

உதிரிப் பத்திரிகைகள் ஒன்றிரண்டில் பெரிய செய்தியாகப் போடுவதாகச் சொல்லி, ஏதோ கொடுத்தார்கள். கிடைத்ததை வாங்கிக்கொண்டு பரந்தாமன் வீடு திரும்பினார்.

ஆனால், இந்த விஷயம் இத்துடன் முடியவில்லை.

“நந்தன்” நிறுவனம் என்ற பெயர், அதை அறிந்த ஓரிருவர் கவனத்தைக் கவர்ந்தது.

அதன் விளைவாக, இரண்டே நாட்களில், “நந்தன்” நிறுனத்தாரின் குடியிருப்பின் முன்னே ஒரு கார் வந்து நின்றது.

உள்ளே இருந்தவர்களைப் பார்த்ததும் அவசரமாகக் கதவு

திறக்கப்பட்டது.

குடில்களின் முன்னே வேகமாக வந்து நின்ற காரிலிருந்து இறங்கியவள் ஓர் அழகி. இறங்கிச் சுற்றுமுற்றும் பார்த்தபோது இவர்கள் நால்வருமாக அமர்ந்து சீட்டு விளையாடிக் கொண்டிருந்த இடம் கண்ணில் பட, விரைந்து அங்கே செல்லலானாள்.

“பவீ!” என்று ஆவலாக எழுந்த ரகுநந்தனைச் சட்டையே பண்ணாமல், வசுநந்தனை நோக்கிச் சட்டையைப் பிடித்து உலுக்காத குறையாக, அவள் கேட்டாள்.

“எத்தனை முறை கேட்டேன்? இவனை இங்கேயே வைத்துக்கொண்டு, தெரியாது, தெரியாது என்றாயே ! என்னிடம் ஏன் சொல்லவில்லை? ஒரு வேளை, இந்த ஜாதி, மதம் பார்ப்பதில்லை என்று நிச்சயம் வரை சென்றீர்களே! எல்லாம் பொய்யா?” என்று பொரிந்து கொட்டினாள்.

மின்னலாய்ப் பார்வையைச் சுழற்றிவிட்டு, “ஓஹோ? என்னை மறக்க வைக்கத் தம்பிக்கு .அழகான பெண் வேறு பிடித்து விடுகிறாயா? “ என்று கொதித்தாள்.

ஆனால் சட்டென முன்னே வந்து, “அளந்து பேசு, பவித்ரா! அவள் என் காதலி. வருங்காலத்தில் என்னை மணக்கப் போகிறவள்! “ என்று குரலை உயர்த்திச் சொன்னான் வசுநந்தன்.

எல்லோருக்குமே அதிர்ச்சியே என்றாலும், சிலையாய் உறைந்துவிட்டவள், சௌரதியே!

அத்தியாயம் -11

என்ன திடுமென வசுநந்தன் இப்படிச் சொல்லிவிட்டான்?

சந்தோஷமாக அதிர்ச்சியே என்றாலும், சற்றும் வெளியே காட்டாமல் பூட்டி வைத்திருந்த மனதில், அந்த ஆசை உள்ளே ஒளிந்திருந்தபோதும், சௌரதி எதையும் காட்டிக் கொள்ளவில்லை. , வசுநந்தன் உண்மையாகச் சொன்னான் என்று நம்பவுமில்லை.

அந்த நிமிஷத்தில், தம்பியின் வருங்கால மனைவி, அவனுடைய உயிர்க் காதலி, அவனைத் தப்பாக நினைத்துவிடக் கூடாது என்று, ரகுவுக்காக மட்டும் சொன்னது.

மறுத்துப் பேசி, அவனது முயற்சியை வீணாக்கி விடக் கூடாது என்று அவள் பேசாதிருந்தாள்.

வியப்புடன் நோக்கிய ப்ரீதியும், தமக்கையின் முகத்தில் தெரிந்த எச்சரிக்கைக்கு ரொம்ப நாட்களுக்குப் பிறகு மதிப்புக் கொடுத்துப் பேசாதிருந்தாள்.

அத்தோடு, அவளுக்குப் பிடித்துப் போயிருந்த ரகுவுடைய காதலியிடம் அவளது கவனம் குவிந்திருந்தது. ஆர்வத்தோடு அவளையும் ரகுவையும் மாறி மாறிப் பார்த்தாள் அவள்.

வசுநந்தனின் வார்த்தைகளை முழுதாக நம்பிவிடாத இன்னொருத்தி பவித்ரா. ஆனால், அவளுக்கு அதில் அதிக அக்கறையும் இருக்கவில்லை.

அவளுக்குத் தெரிய வேண்டியது எல்லாம், ரகுநந்தனின் காதல் உறுதியாக இருக்கிறதா, இல்லையா என்பதுதான்.

அவனது “முழு ஓய்வு” பற்றி, அவளுக்கு ஒரு வரி அனுப்பியிருந்தான்தான். ஆனால், அதன்பின் ஒன்றுமே இல்லை!

இந்த வாரத்தோடு சேர்த்தால், கிட்டத்தட்ட நாலு மாதங்கள்! ஒரு தகவலும் இல்லாது இருப்பது என்றால், காதல், கல்யாணம் என்பதற்கு எல்லாம் என்ன அர்த்தம்?

அதுவும், அண்ணனுக்குத் தெரிகிறது., அவளுக்குச் சொல்லவில்லை!

அந்த அண்ணனோ, அதற்கும் மேல்! தெரியாது, தெரியாது என்று பொய் மேல் பொய்யாக அளந்துகொண்டு!

இத்தனை நாள் . .மாதங்கள், அவளுக்கு ஒரு தகவலும் கொடுக்காமல் ரகு ஏன் இருந்தான்? எங்கே இருந்தான்?

இங்கேயே என்றால், கூடவே வைத்துக்கொண்டு, வசுநந்தன் ஏன் தெரியாது என்று பொய் சொன்னான்?

அவளை விலக்குவது தவிர, இதற்கெல்லாம் வேறு என்ன காரணம் இருக்க முடியும்?

பவித்ரா கெட்டிக்காரி என்று ரகு சொன்னது, செளரதிக்கு நினைவு வந்தது. ரைட் ராயல் வேறு!

சரமாரியாக அவள் தொடுத்த இந்தக் கேள்விகளுக்கு என்ன பதில் சொல்வது? யார் சொல்வது?

வசுநந்தன், செளரதி இருவருமே, இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்ல உரிமை இல்லாதவர்கள். சொல்வதோ, விடுவதோ . . .இருவருமே ரகுநந்தனைப் பார்த்தனர். அவன் யோசனையில் வெளியை வெறித்திருக்க, வசுநந்தன் தோளைக் குலுக்கிவிட்டுச் சும்மாவே இருந்தான்.

எப்படியும் இப்போது முடிவெடுக்க வேண்டியவன், ரகுநந்தனே!

அவனும் அதே முடிவுக்கு வந்தவன் போல, ஒரு பெரியமூச்சை எடுத்து வெளி விட்டுவிட்டு பேசத் தொடங்கினான். நேராகப் பவித்ராவைப் பார்த்துத்தான் பேசினான்.

“பவி . .பவித்ரா, என்னைப் பற்றி உனக்குத் தெரியாத விஷயம் ஒஒன்று இருக்கிறது. அது . . அது. .நான் போதை மருந்து . . “ என்று அவன் தடுமாறுகையில் பொறுமையிழந்தவள் போலப் பவித்ரா ஒரு பத்திரிகையை அவன் முன் வீசி எறிந்தாள்.

“அதைப் பற்றித்தான் இந்தப் பத்திரிகையிலேயே செய்தி வந்திருக்கிறதே! நீ இங்கே சிகிச்சை எடுப்பது உட்பட! செய்தியைப் பார்த்துவிட்டுத்தான், நான் இங்கே கிளம்பி வந்ததே! எனக்கு வேண்டியது, அதுவல்ல. என்னிடம் ஏன் மறைத்தாய்? “பெட்டர் ஹாஃப்” என்று பெரிதாக அளந்தாயே? பிறகு எனக்குத் தெரியாமல் என்ன ரகசியம்? அதுவும் எவ்வளவு காலம்? அதைச் சொல்லு முதலில்!” என்று குரல் உயர்த்தி, அதட்டிக் கேட்டாள்.

ரைட்ராயல்!

ஆனால், அவர்கள் இருவருக்கும் இடையே நடப்பது, அவர்களது விவகாரம். அதைப் பார்த்துக்கொண்டு நிற்க மனமின்றி, “வவந்து . .நான்

போகட்டுமா?” என்று வசுநந்தனிடம் மெல்லக் கேட்டாள்.

ஆனால், பதிலை பவித்ரா சென்னாள்.

“நீ ஏன் போக வேண்டும்? யார்தான் ஏன் போக வேண்டும்? உங்கள் எல்லோருக்கும்தான், எல்லாம் தெரிந்திருக்கிறதே! சும்மா இங்கேயே இரு. உன்னிடம் கூட, நான் ஏதாவது கேட்க வேண்டியிருக்கலாம்!” என்றவள் ரகுவிடம் திரும்பி, “உம்., சொல்லு என்னிடம் மட்டும் என்ன ஒளிவு மறைவு?” என்று கேட்டாள்.

“ஏனென்றால் . . பவி, உன்னால் இதை ஏற்க முடியாதோ என்று எனக்குப் பயம். ஏற்க முடியாது என்று , நீ பிரிந்து போய்விட்டால், நான் எப்படித் தாங்குவேன்? அந்த படத் தோல்வியை நீ பெரிதாக எண்ணவில்லை. ஆனால், எனக்கு மன அழுத்தம் தாங்க முடியவில்லை. இந்த மருந்து எடுப்பதை உன்னிடம் மறைப்பது, அதை விடக் கடினமாக இருந்தது. அதுதான் அண்ணனிடம் ஓடி வந்துவிட்டேன். முழு ஓய்வு என்கிற பெயரில் இதற்குச் சிகிச்சை எடுத்து, குணப்படுத்திக்கொண்டு முன் போலவே நல்லபடியாக உன் முன் வந்துவிட நினைத்தேன்.

“ஆனால் பவி, உன்னிடம் ஒன்றை மறைத்து எத்தனை காலம் வாழ்வது? உன்னிடம் உண்மை சொல்ல முடியாதுபோனால், அதன் பெயர் உயிர் நேசம் ஆகுமா? இது போலக் கேள்விகள் எல்லாம் இப்போது தோன்றுகின்றன.

“ஆனால், உண்மை இதுதான். போதை விஷயம் உனக்குத் தெரிந்தால் என்னை வெறுத்துவிடுவாயோ என்று யாருக்கும் தெரியாமல் ஓய்வு எடுப்பதாகச் சொல்லி இப்படி சிகிச்சை எடுத்தேன். நான் கேட்டுக் கொண்டதற்கு இணங்கியே, அண்ணன், அம்மா அப்பா எல்லோரும் உன்னிடம் மறைத்தார்கள். இதுதான் நடந்தது. இனி . .

“இனி என்னை ஏற்பதும் மறுப்பதும் உன் விருப்பம்! ஆனால், நீ இல்லாத வாழ்க்கையை என்னால் நினைத்துப் பார்க்கக் கூட முடியாது. . . இதற்கு மேல் என் தலைவிதி என்ன என்று, நீதான் சொல்ல வேண்டும்.” என்று சொல்லி முடித்துவிட்டு, அதற்கு மேல் நிற்க இயலாதவன் போல, தொப்பென உட்கார்ந்தான் ரகுநந்தன்.

சற்று நேரம் அங்கே நிசப்தம் நிலவியது. “ஊசி விழுந்தால் கேட்கும்” என்பார்களே, அதுபோல அமைதி !

திடுமென ஒரு காற்று வீச, இலைகள் சலசலத்தன.

சற்று நேரம் திகைத்து நின்ற பவித்ராவும் கலகலவென்று

சிரித்தாள்.சிரித்துவிட்டு, “செம வேடிக்கையாக இருக்கிறதுப்பா!” என்றாள் அவள்.

இதை எப்படி எடுத்துக் கொள்வது என்று எல்லோரும் புரியாமல் நோக்க, அவள் சொன்னாள்.

“நினைத்துப் பாருங்கள். இதையே ஒரு பெண் நடிகை செய்திருந்தால், அவள் ரகசியமாகப் பிள்ளை பெறவோ, அல்லது கருவைக் கலைக்கவோ போயிருப்பதாக பெரீதாக வதந்தி கிளம்பியிருக்கும். ஆண் என்பதால், அதிலிருந்து நீ தப்பினாய்

“அப்போதும் ரகசியத் திருமணம், ரகசியத் தேனிலவு என்று என்னென்ன பேச்சு தெரியுமா? எத்தனை நாள் என்னை அழ வைத்துவிட்டாய்!

“ரைட்! இப்போது உனக்கு ஒரே சாய்ஸ்! உடனே என்னுடன் மும்பைக்குக் கிளம்பு இல்லாவிட்டால், நமக்குள் அவ்வளவுதான்” என்று, கண்களை உருட்டி எச்சரித்தாள்.

எல்லோர் முகங்களுமே மலர்ந்து விகசிக்க, கண்களும் பற்களும் பளபளக்க, ரகுநந்தன் ஒளிர்ந்தான்.

அண்ணனைப் பார்த்து, “அண்ணா, எனக்கு மருந்துகள் கிடையாது. மன உறுதிதான் முக்கியம். பவி எனக்குப் பெரும் பலம். கொஞ்சம் மனம் ஒரு மாதிரி ஆனால், ப்ரீதி டீச்சர் கற்றுக் கொடுத்த மாதிரிப் படம் வரைய உட்கார்ந்து விடுகிறேன். அதிலேயே சரியாகி விடுவேன். “என்றுரைத்து, வாயெல்லாம் பல்லாகி நின்ற ப்ரீதியைப் பவித்ராவுக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

சௌரதியை அறிமுகம் செய்தபோது, அவளது கைகளைப் பிடித்துக்கொண்டு, “முதலில் ஒரு மாதிரிப் பேசிவிட்டேன் சாரி. ஆனால், பெரிய நன்றி உங்களுக்குத்தான் சொல்ல வேண்டும் என்று புரிகிறது. இன்னும்கூட, நான் இவரிடம் கவனிக்க வேண்டியது ஏதேனும் இருந்தால் அப்புறமாக மொபைலில் சொல்லுங்கள். பார்த்துக் கொள்ளுகிறேன்.

அங்கே நாலு படத் தயாரிப்பாளர்கள் இவருக்காக என்னைத் துளைத்து எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். முதலில் ரகு வருவதை, அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்! சீக்கிரம் கிளம்பு ரகு. கோவையில் ஃப்ளைட் பிடித்து, இன்றே மும்பை போய்விடலாம்.” என்று பவித்ரா அவசரப்பட்டாள்.

ஆனால், வசுநந்தன் முகத்தில் சிறு கலக்கம் தெரிந்தது. “இது பற்றி

வெளியே தெரிந்தால், தொழிலில் பாதிப்பு ஏற்படும் என்றாயே, ரகு! இப்போது பத்திரிகையிலேயே வந்துவிட்டதே .” என்று கீழே கிடந்த பத்திரிகையைக் காட்டிக் கேட்டான்.

“ஒரு பாதிப்பும் ஏற்படாது!” என்றாள் பவித்ரா, அழுத்தம் திருத்தமாக. “.வெளிப்படையாகப் பேசினாலே போதும். “மன இறுக்கம் தாளாமல் இப்படி இலகு வழி தேடிவிட்டேன். ஆனால் அது புதை குழியில் தள்ளுவது என்று புரிந்து, மருத்துவ உதவியோடு மீண்டும்விட்டேன் நல்லவேளையாக உள்ளுறுப்புகள் பாதிக்குமுன் சிகிச்சை பெற்று புது வாழ்வு பெற்றிருக்கிறேன். என் போல நிலையில் உள்ள எல்லோரும் நல்வாழ்வு பெறவே வெளிப்படையாகச் சொல்லுகிறேன்” என்று ஒரு பேட்டி போட்டாலே, இரண்டு பங்கு அதிக மதிப்பு ஏறும்.” என்று தெளிவாகக் கூறினாள் அவள்.

முகம் மலர, “அகவாழ்வு புற வாழ்வு இரண்டையுமே இவளிடம் ஒப்படைத்துவிட்டு நீ நிம்மதியாக இருக்கலாம், ரகும்மா. கிளம்பு கொஞ்சம் பழங்கள் எடுத்துப் போங்கள். கோவை விமான நிலையத்தில் கொண்டு வந்து தரும்படி ஏற்பாடு செய்கிறேன்.” என்றான் வசுநந்தன்.

புன்னகையோடு மற்றவர்கள் வழியனுப்ப, ரகுநந்தனும் பவித்ராவும் கிளம்பிச் சென்றார்கள்.

அதன்பின், செய்வது அறியாமல் சௌரதி அங்கேயே நின்றாள்.

வசுநந்தனோடு அவள் பேச வேண்டியது நிறைய இருந்தது.

முதலாவதாக, ரகுநந்தன் கிளம்பிப் போனதோடு, அவளது வேலையும் முடிவடைந்துவிட்டது. அவளும் கிளம்ப வேண்டியவளே.

எனவே, அது பற்றிப் பேச வேண்டும்.

பவித்ராவிடம் அவளைக் காதலி என்று குறிப்பிடதை, அவள் அப்படியே உண்மை என்று எடுத்துக் கொள்ளவில்லை. பெரும்பாலும், தம்பியைப் பற்றி, அவள் தப்பாகப் பேசுவதைத் தடுப்பதற்காகவே, வசுநந்தன் அப்படிச் சொல்லியிருப்பான் என்றுதான் அவளும் எண்ணினாள்.

ஆனால், எதுவுமே நடக்காதது போலக் குடிலுக்குத் திரும்பிச் செல்லவும் அவளால் முடியவில்லை. வேடிக்கையோ, வினையோ, என்ன காரணம் என்றாலும் அவனே சொல்லட்டுமே!

காதலி என்றவன் என்ன சொல்லப் போகிறான் என்று காத்திருந்தால், அவன் தீக் குழம்பை எடுத்து அவளது தலையில் கொட்டினான்.

மாதையனும், லட்சுமியும் குடிலுக்குள் செல்லும்வரை பொறுத்திருந்தவள், அவர்கள் பார்வையை விட்டு மறைந்ததும், பார்வையாலேயே, நெருப்பை உமிழ்ந்தான்.

“முதலிலேயே உனக்குள் ஒரு ரகசியம் . . ஏதோ ரகசியத் திட்டம் இருக்கிறது என்று எண்ணினேன். ஆனாலும், அன்று உன் கண்ணீரைப் பார்த்து இரங்கினேன். பரிதாபமும் பட்டேன்.

“ஆனால் உன்னிடம் எல்லாமே வேஷம்தான், இல்லையா? ஐயோ, நீ, இவ்வளவு மோசமானவள் என்று நான் நினைக்கவே இல்லையே. இப்போது சொல்லு., இந்த உன் கதைக்கு எவ்வளவு பணம் கிடைத்தது?” என்று ஆத்திரத்துடன் வினவினான்.

காதலில் உருகி வழிவான் என்று, செளரதி எதிர்பார்க்கவில்லைதான். ஆனால், தம்பி குணமானது பற்றி நன்றி உணர்ச்சியேனும் இருக்கும் என்று நினைத்தாள்.

ரகசியம், மோசம், பணம்!

எதுவும் அவளுக்குப் புரியவும் இல்லை!

விழியகல நோக்கி, “என்ன சொல்கிறீர்கள்? வவசு . . வசுநந்தன் சார், எனக்கு ஒன்றும் புரியவில்லையே!” என்று திகைப்புடன் வினவினாள்.

“இன்னமும் நடிக்காதே!” என்று கடித்த பற்களுக்கிடையே வார்த்தைகளைத் துப்பினான் அவன்.

அருவருப்புடன் கீழே கிடந்த பத்திரிகையைச் சுட்டிக் காட்டி, “இது உன் வேலைதானே? இது போல, மறுவாழ்வு மையத்து நோயாளிகளின் கதையை விற்பது பற்றித்தான் மும்பை சென்றாயா? அந்த முயற்சி தோற்றதால்தான் அழுதுகொண்டு வெளியேறினாயா?”

மேலே மேலே கனல் கங்குகளை அள்ளிக் கொட்டினான் வசுநந்தன்.

தாங்க மாட்டாமல், “அநியாயம் பேசுகிறீர்களே, வ . .சார்! இங்கிருந்து எப்படி வெளியே பேச முடியும்? அதைக் கூடவா, யோசிக்க மாட்டீர்கள்?” என்று கண்ணீர்க் குரலில் கேட்டாள் அவள்.

ஆனால், அவன் அதற்கும் ஒரு பதில் வைத்திருந்தான்.

“ஓஹோ, இப்போது புரிகிறது. அந்தப் பரந்தாமனுக்குப் படங்களைக் கொடுக்கிற மாதிரி உள்ளே ரகு பற்றி எழுதி வைத்து அனுப்பினாய் போல. உன் தங்கையும் இதில் கூட்டா?” என்று

சினத்துடன் கேட்டான்.

“ஐயோ இல்லை சார்.” என்று பதறிக்கொண்டு பதில் சொன்னாள் ப்ரீதி. “எல்லாம் அக்காதான், சார். படம் பழுதாகாமல் கட்டுகிறேன் என்று கட்டி வைத்தும் அக்காதானே? இன்னும் . . இஇன்னும், நீங்கள் சொன்னது போலக் கூட இருக்கக் கூடும்.” என்று அவள், தன் பங்குக்கு ஒரு பெரிய குண்டைப் தூக்கி தமக்கையின் தலையில் போட்டாள்.

தங்கையின் கோபம் இந்த அளவுக்குப் போகக் கூடும் என்று சௌரதி ஒருபோதும் நினைத்தது இல்லை. இப்போதுமே, அவள் தெரிந்து சொல்வதாக எண்ணவில்லை.

எனவே, “இது என்ன உளறல், ப்ரீதி? அவர் என்ன குற்றம் சாட்டுகிறார் என்று புரிந்துதான் சொல்கிறாயா? யோசித்துப் பேசு .”என்றே எடுத்துச் சொன்னாள்.

ஆனால், தன் கடைசி நேரத்தில் அருகில் இருந்த தன்னைச் சட்டையே பண்ணாமல், அந்த நிலையில் அன்னையை விட்டுவிட்டு ஊர் சுற்றப் போன மூத்த மகளை நினைத்து நினைத்து வாய் ஓயாமல் அன்னை தவித்தது நினைவு வர, “என்னத்தை யோசிப்பது? அம்மா சாகிற போது கூட அவர்கள் பக்கத்தில் இல்லாமல் மும்பைக்கு ஊர் சுற்றப் போனாள், சார்! ஊர் சுற்றவா? அல்லது யாரோடும் . . நீங்கள் சொன்னது போல மறுவாழ்வு மையத்தில் உள்ளவர்களின் ரகசியம் பற்றி எழுத ஒப்பந்தமோ என்னவோ? ஓவியர் பரந்தாமன் பத்திரிகைத் தொடர்பு உள்ளவர் என்பதால், அவரோடு சேர்ந்து கூடச் இவள் செய்திருப் . . “ என்ற தங்கையின் பேச்சில் தன்னிலையிழந்து, ஆவேசத்துடன் சௌரதி குறுக்கிட்டாள்.

“மூடு வாயை! பாவி! கூசாமல் என்னவெல்லாம் பேசுகிறாய்! நான் போன காரணம் . .காரணம் தெரிந்தால் வருத்தப்படுவாயே., கூசிக் குறுகுவாயே என்று மறைத்தால் என்ன அநியாயம் பழி சுமத்துகிறாய்!” என்று சீறினாள்!

தமக்கையின் ஆவேசத் தோற்றம் புதிதாக இருந்தாலும், தாயின் தவித்த தோற்றம் இன்னமும் உந்த, “அப்படி என்ன ரகசியம்? அது தெரிந்து, நான் அப்படி என்ன வருத்தப்பட்டுவிடுவேன்? அது போல ஏதேனும் ஒன்று இருந்தால் அதைச் சொல்லித்தான் பாரேன்!” என்று அலட்சியமும் ஆத்திரமுமாகப் பதிலுக்குச் சீறினாள் ப்ரீதி.

தன் கேள்வியை, அவனோடு உடன்பிறந்தவளே கேட்கவும், வசுநந்தன் பேசாமல் பார்த்துக்கொண்டு நின்றான்.

அவனைப் பற்றிய நினைவே, சௌரதிக்கு அப்போது இல்லை. ஆனால் தங்கைக்குப் சொல்லாமல் தீராது என்று ஆகிவிட, தொண்டையில் அடைத்ததை விழுங்கிக்கொண்டு, அவள் சொன்னாள். “நான், நம் அப்பாவைத் தேடிப் போனேன், ப்ரீதி.” என்றாள் ஆவியாகிப் போன குரலில்.

சின்னவள் நம்பாமல் நோக்கவும், “சும்மாச் சும்மா பிசினஸ் என்று போய்விடுகிறாரே, அம்மாவின் இந்த நிலையில் கூடக் கணவராகப் பொறுப்பேற்றுப் பார்க்க வரவில்லையே, காரணம், அங்கே . .அங்கே ஏதேனும் சின்ன வீடு வைத்திருக்கிறாரோ என்று பார்க்கப் போனேன். இதை, இந்தக் கேவலமான சந்தேகத்தை உன்னிடம் எப்படிச் சொல்வது? ஆனால், போன இடத்தில் . அஅங்கே என்ன பார்த்தேன், தெரியுமா? அங்கே அவருக்கு அறுபதாம் திருமணம்! ஒத்த வயதில் ஓர் அம்மாவுக்கு, இரண்டாம் தாலி கட்டிக் கொண்டிருந்தார். பக்கத்தில் நம்மை விடப் பல ஆண்டுகள் மூத்த ஆண், பெண் மக்கள் உற்சாகமாகக் குதித்துக் கொண்டிருந்தார்கள்! அர்த்தம் புரிகிறதா, ப்ரீதி? அப்பா . . அந்த மனிதரின் வயது பற்றிக்கூட, நாம் யோசித்ததே இல்லையே! அம்மா அழுதது, மும்பைக்குப் போகக் கூடாது என்று நம்மைத் தடுத்தது, மும்பைக்கு ஃபோன் பேசக் கூட விடாமல் தடுத்தது! காரணம் தெரிகிறதா? நாம்தான் சின்ன வீடு என்று தெரிந்தபோது, ரொம்பக் கேவலமாக . . . அங்கேயே ரயில் முன்னல் விழுந்து விடலாமா என்று இருந்தது. . . .”

.மிரட்சியுடன், “ஐயோக்கா!” என்று ஓடி வந்து, அவளைக் கட்டிக் கொண்டாள் ப்ரீதி.

அழுதபடியே தங்கையைத் தானும் அணைத்து, “ஆனால், உனக்காகத்தான் திரும்பி வந்தேன். இந்தச் சின்ன வயதில் தனியாக எப்படி வாழ்வாய் என்றுதான்!” . என்று சோர்ந்த குரலில் உரைத்தாள் பெரியவள்.

“ஐயோ அக்கா . . அக்கா என்னை மன்னித்துவிடுக்கா. தெரியாமல், உன்னை என்ன பேச்செல்லாம் பேசிவிட்டேன்! ஆனால் ரொம்ப அசிங்கமாகத் தெரியுதேக்கா. அக்கா, நாம் வேணுமானால், இரண்டு பேருமாகச் சேர்ந்து செத்து விடுவோமாக்கா? “ என்று கலங்கினாள் சின்னவள்.

“ஐயோம்மா, “என்று தவித்தாள் மூத்தவள். “இப்படியெல்லாம் உனக்குத் தோன்றிவிடக் கூடாது என்றுதான் சொல்லாமலே வைத்திருந்தேன். எப்படிப் பிறந்தோமோ? ஆனால், நாம் தப்பானவர்கள்

இல்லைடா. தைரியமாக இரு!” என்று தங்கையின் முதுகை ஆறுதலாக வருடியபடி நிமிர்ந்தவளுக்கு, எங்கிருக்கிறோம் என்பது மனதில் பட்டது.

இந்தப் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்த அவனும்!

என்ன நினைத்திருப்பான்?

ஒழுக்கம் என்று பேசியது எல்லாம் . . சே, சின்ன வீட்டுக் குடும்பத்துக்குக் கௌரவம் வேறா என்று எண்ணுவானோ?

தங்கையின் கையை இறுகப் பற்றிக்கொண்டு, அவனை நோக்கி, “நீங்கள் என்ன நினைத்தாலும், நாங்கள் இருவரும் அப்படிப்பட்டவர்கள் இல்லை. அந்த ஓவியர் பரந்தாமன், ஒரு மாதிரி. ஆதரவு அற்றவர்கள் என்று வாலாட்ட முயற்சித்ததால்தான், மறுக்க மறுக்க இவளையும் பிடித்து இழுத்துக்கொண்டு அந்த ஊரை விட்டே கிளம்பினேன் . . . மேலும் இந்தப் பத்திரிகைச் செய்திக்கும் எனக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது! நீங்கள் நம்பினாலும், நம்பாவிட்டாலும், இதுதான் உண்மை!” என்றாள் மரத்த குரலில் சௌரதி.

“நம்பாமல் போவானேன்?” என்றான் அவன் மென்மையாக.

இருவரும் புரியாமல் விழிக்கவும், வசுநந்தன் லேசாக முறுவலித்தான்.

“ஆனால் நீங்கள் . .” என்று, இன்னமும் கீழே கிடந்த பத்திரிகையைப் பார்த்தாள் சௌரதி. “ஏதேதோ சொன்னீர்களே!”

அவனும் பார்த்துவிட்டு, “பத்திரிகை விஷயம் என்ன நடந்திருக்கும் என்று, இப்பாது எனக்கு நன்கு புரிந்துவிட்டது. “நந்தன்” நிறுவனப் பையில் படங்களின் மூட்டையைப் பார்த்ததும், அந்தப் பரந்தாமனின் குயுக்தி செய்த வேலை, அது. அவர் பற்றிச் சரியாகத் தெரியாததால், முழுக்க உன்னைக் குற்றம் சாட்டி விட்டேன். அதற்கு என்னை மன்னிப்பாயா?” என்று கேட்டான் .

சௌரதி பேசாமல் நின்றபோதும், ப்ரீதிக்கு ஆறவில்லை. “வெறும் ஒரு வார்த்தையில் எளிதாக மன்னிப்புக் கேட்டுவிட்டீர்களே, சார்? அக்கா எப்படிக் கதறிவிட்டாள்?” என்று வருத்தத்துடன் குமுறினாள்.

“வெறும் ஒரு வார்த்தையாலா? அவள் கையைப் பிடித்துக் கூடக் கேட்பேன். கையைக் காலாக நினைத்துக்கொள் என்று கூடக் கேட்பேன். . .”

“சா ர் . . .? மெமெய்யாகவா, சார்?” என்ற சின்னவளின் கண்கள் விரிந்தன.

“காட் ப்ராமிஸ்! ஆனால், பார்வையாளர் இல்லாதபோதுதான் கேட்பேன்.”

“பார்வையாளரா? . .” என்று சுற்றுமுற்றும் ப்ரீதி பார்க்கவும், “ஐயோ, தாங்காது, ப்ரீதி!” என்று நகைத்தபடி, வசுநந்தன் சௌரதியைப் பார்த்தான்.

அவள் முயன்று முறுவலை அடக்குவதைப் பார்த்துவிட்டுச் சின்னவளிடம் திரும்பினான். “ப்ரீதி, சற்று நேரம் வெளியே சுற்றிவிட்டு வருகிறாயா? பார்வையாளர் இல்லாமல், உன் அக்காவிடம் கொஞ்சம் பேச வேண்டும். “ என்று கேட்டான்.

ப்ரீதி வாயைப் பிளந்தாள். “நாநா . .நானா பார்வையாளர் . . வந்து . . . பார்வையாளி?” என்று கேட்டாள்.

தோளைக் குலுக்கி, “புரிந்துகொண்டால் சரி.” என்றான் அவன், சிறு முறுவலுடன்.

ஆச்சரியமாகத் தமக்கையைப் பார்த்த ப்ரீதி, சற்று முன் பட்ட வேதனை அடியோடு மறையத் துள்ளிக் குதித்துக்கொண்டு சந்தோஷமாக ஓடிப் போனாள்.

தங்கையின் துள்ளலை ஆறுதலோடு சௌரதி ரசிக்க, அருகில் வந்து, “இந்தப் பக்கமும் கொஞ்சம் பார்க்கலாமே!” என்றான், குரலில் நகையுடன்.

“ஏனோ?”

“உன்னிடம் ஒன்று கேட்க வேண்டும். அதை, உன் அழகான முகத்தைப் பார்த்துககோண்டே கேட்க ரொம்ப ஆசை!”

ம்ம் . . .” என்று யோசிக்கிற மாதிரிக் காட்டிக் கொண்டாலும், புன்னகையோடு அவனைப் பார்த்தாள் சௌரதி.

“இது என் பெற்றோர் சொன்னது. தம்பி கெட்டிக்காரன் உனக்கு முன்பாகத் துணையைத் தேர்ந்தெடுத்துவிட்டான். என்னதான் வெளிநாட்டிலேயே வசித்தாலும், மூத்தவன் நீ இருக்க அடுத்தவனுக்கு மணமுடிக்க ஒரு மாதிரி இருக்கிறது. என்று, என்னை அடிக்கடி விரட்டுவார்கள். தேர்ந்தெடுத்துவிட்டேன் என்று சொல்லி விடலாமா?” என்று வசுநந்தன் கேட்க, அவளது விழிகள் அகல விழிகள் விரிந்தன.

“நீநீங்கள் என்னை மமணக்கவா கேட்கிறீர்கள்?” என்றாள் ஆச்சரியத்தோடு!

“அப்பாடி, மண்டை ஓட்டைத் தாண்டி, ஒரு வழியாக விஷயம்

உள்ளே போய்விட்டது போலத் தெரிகிறதே! “ என்றான் கேலியாக.

“ம்ம்ம் விஷயம் புரிகிறது . . ஆனால் . . “

“ஆனால் என்ன? என்னப்பா? முடியாது என்று சொல்லப் போகிறாயா? எதெதெற்கோ என் மேல் கோபம் இருந்தாலும், அந்தப் பதில் மட்டும் சொல்லி விடாதே! தாங்க முடியாது!” என்றபோது, அவன் குரலில் சிறு பரபரப்பை உணர்ந்த சௌரதிக்கு ஆச்சரியமாக இருந்தது. உள்ளூரப் பெருமையாகவும்!

ஆனாலும் அவனது சிறு கலக்கமும் பிடிக்காமல், “ஆஹா, இப்போது இக்கட்டில் மாட்டிக் கொண்டேனே! முடியாது என்று சொல்வது ரொம்பக் கடினம். சரி என்று ஒப்பினாலும், உங்கள் பழைய குற்றச்சாட்டு . . அதுதான் பணக்காரனைப் பிடிப்ப . .” என்றவளின் வாயைச் சட்டெனப் பொத்தினான் வசுநந்தன்.

“சாரிம்மா. அப்படி நான் சொன்னது தப்புதான். பெரிய பிழை. மன்னித்து மறந்துவிடு!” என்றான் அவன்.

“ஆனால், காரணமே இல்லாமல் வந்த அந்த வார்த்தை . . . “

“காரணமே இல்லாமல் என்று சொல்ல முடியா . .து . . .”

“என்னது?” என்று அதிர்ந்தவள், அவன் பிடியில் இருந்து விலகி நின்று, “நான் ஒரு நாளும் உங்களிடம் இளித்தது கிடையாதே.” என்றாள் உறுதியோடு.

“ஊகூகூம். என் காரணம் வேறு, ரதி! நிம்மதியான தனிமை வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தேன். திருமணம் பற்றிப் பேசும்போது, அம்மா அப்பாவிடம் கூட அதைத்தான், நிம்மதியாக இருக்க விடுங்கள் என்றுதான் சொல்லுவேன். ஆனால், உன்னைப் பார்த்ததும், அமைதியாக குளத்தில் கல்லெறிந்த மாதிர், ஓயாத ஒரு சலனம். அத்தோடு, இவ்வளவு அழகாக இருக்கிறாயே, பவித்ராவை மறந்து தம்பி உன்பக்கம் மாறிவிடுவானோ என்று கவலை! . .இப்படி எத்தனையோ? மேடம் நல்ல குணமாகத் தெரிகிறது என்றதற்காகப் பேட்ரிக்கைக் கூடச் சும்மாத் திட்டினேன் தெரியுமா? அடிப்படை என்ன என்று புரியாமல், நீதான் மயக்க வந்ததாக, அதில் எரிச்சல் ஏற்படுவதாக . . . புரிகிறது இல்லையா, கண்ணம்மா?” என்று அவளது முகவாயை, ஒரு விரலால் தூக்கிக் கேட்டான் அவன்.

வெகு அருகில் தெரிந்த அவனது இரு விழிகளும் பெரிதாக விரிந்து தன்னை உள்ளிழுப்பது போல சௌரதி உணர்ந்தாள்.

ஆனால், கேட்க வேண்டிய முக்கியமான விஷயம் ஒன்று பெரிதாக

இருக்கிறதே! சிரமப்பட்டு யோசித்து, “ஆனால் எங்கள் பிறப்பு பற்றிப் பெரிய குறை இருக்கிறதே!” என்றாள் கம்மிப் போன குரலில்.

“ஷ்ஷ், என்று அவளது தோளைப் பற்றிஇ லேசாக உலுக்கினான் வசு. “நியாயப்படி, எந்த நூற்றாண்டில் இருக்கிறாய் என்று கேட்டிருக்க வேண்டும். ஆனால், கௌரவக் கொலைகள் இப்போதுதானே பெருகி இருக்கின்றன? ஆனால் ஒரு நிம்மதி. அது போலக் கத்தியைத் தூக்கிக்கொண்டு வர, உன் குடும்பத்திலோ, என் குடும்பத்திலோ யாருமில்லை. அத்தோடு, சேற்றில் மலர்ந்தது என்று நல்ல செந்தாமரைப் பூவைத் தூக்கி எறிந்து விடுவாயா? திருமகள் அமர்ந்திருப்பதே அதில்தானே? என்னைத் தட்டிக் கழிப்பதற்காகக் குறையான பிறப்பு என்று சாக்குப் போக்குச் சொல்ல வேண்டாம். அதை விட்டு, என் கேள்விக்குப் பதில், நல் . .லதாக ஒரு சம்மதம்தானே? “ என்று ஆர்வமாகக் கேட்டான் அவன்.

ஒப்புவது போல, அவளது அழகிய இதழ்கள் எழிலாக வளைந்து புன்னகை செய்தன!